T. 3654

ஸ்ரீ

# வேத சந்திரிகை

ஆசிரியர்:

எம். ஆர். ஜம்புநாதன்

கடோபநிஷதம், உபநிஷதக் கதைகள், யஜுர்வேத கதைகள்

திரிமூர்த்தி உண்மை, சீனவேதம் முதலிய

நூல்களை ஆக்கியோன்.

ஜம்புநாதன் புஸ்தகசாலை

14, பள்ளியப்பன் தெரு,

சௌகார்பேட்டை, சென்னை.

ஸ்ரீமுக வருஷம், மாசிமீ

1934.

*Copyright Registered*]

[விலை அணா-8.

# முகவுரை

இந்நூல் எழுத ஊக்கமளித்தவர் திருப்பனந்தாள் மடாதிபதியான அறிஞர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகளாகும். வேதம் என்ன என்பதை நடுத்தெருவில் செல்லும் நாராயணன் அறிவதில்லை. சுருக்கமாக அதைப்பற்றி எழுதினால் மகா ஜனங்களுக்கு உபகாரமாகும். அதற்காக நான் பொருள் உதவி செய்கிறேன் என்றார். நான் அந்த விருப்பத்தை முன்னிட்டு இதை எழுதி அவர் ஆதரவினால் தமிழர்களின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

அவரைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. வருஷந்தோறும் தமிழ் பரீட்சையில் முதன்மையாய்த் தேறியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் அவர் அளித்து வருவது அனைவரும் அறிந்த விஷயம். சில மேன்மையான நூல்களை தமிழில் பிரசுரம் செய்ய அவர் ஏராளமாய் பொருள் உதவிசெய்வதை அறிஞர்கள் அறிவார்கள். எல்லா தானத்திலும் கல்விதானம் பெரியது. அக்கல்விக்கு ஆதிகாரணமான வேதசந்திரனை உதயமாக்குவது அனைத்திலும் பெரியதாகும். அச்சிறந்த தானத்தை ஒருவரும் மறக்கப்போவதில்லை.

வேதமொழி பெயர்ப்புக்களும் வேதசம்பந்தமான பல நூல்களும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசுரமானபோதிலும் நமது நாட்டில் தோன்றாதது விசனிக்கத்தக்கது. ஆனால் இப்பொழுது வேதப் பிரசாரம் ஆரியர்களால் ஆரம்பிக்கப்பட்டு மற்றவர்களும் உற்சாகமுடன் முன்வந்தது இங்குமங்கும் புலனாகின்றன. லாகூரிலே வேதமொழிக்கெல்லாம் ஓர் அபூர்வ நிகண்டை பண்டித விசுவபந்து அவர்கள் பெரும் தியாகத்துடன் செய்துவருகிறார். பங்காளி பாஷை ஹிந்திமொழி மகாராஷ்டிரத்தில் வேதநூல்கள் பல பிரசுரமாகின்றன. தமிழ்நாட்டில் யஜுர் வேதம் கிரந்தத்தில் உரையன்னியில் கும்பகோணத்தில் அச்சடிக்கப்பட்டது. தஞ்சாவூர் ஜில்லா வர

கூரிலே ஸ்ரீமான் வேம்பு சிரௌதிகள், ஸ்ரீமான் அகோர சிரௌதிகள் சாமவேதத்தை கிரந்தத்திலும் அநேக சாமகான லட்சண நூல்களை வடமொழியிலேயே அச்சடித்துள்ளார்கள். அவருக்கு உதவியும் ஆதாரவுமில்லை. இப்படி ஆதரவளிக்காமலுள்ள நாட்டில் ஆயிரத்திற்கதிகமான சாகைகளிலிருந்த வேதத்திற்கு இப்பொழுது பத்து சாகைகள் கூட இல்லாமலிருப்பது அதிசயமில்லை. தென்னாட்டிலுள்ள சுக்கில யஜுர் வேதிகளும் இஞ்சிக்கொல்லையில் மறைந்து வருகிறார்கள்.

இனியாவது வேதப்பிரசாரத்தில் சிரத்தை தோன்றவேண்டுமென விரும்புகிறோம். தென்னாட்டு தன வைசியர்கள் அநேக வேதபாடசாலைகளை ஏற்படுத்தி நடத்துவது அனைவரும் அறிந்ததாகும். அந்த மேன்மையான கைங்கர்யத்தை சற்றுசீர்திருத்தி செய்தால் சகத்திர்க்கே சிறந்த உபகாரமாகும். நாட்டிலே ஒவ்வொருவரும் குறிப்பாக ஒவ்வொரு இந்துவும் வேதத்தைப்பற்றிப் சில விஷயங்களையாவது அறிவது அவசியமாகும். அதற்கு இந்நூல் உதவியளிக்குமென எண்ணுகிறோம்.

இந்நூல் சுமார் 19 பிரிவுகளாகச் செய்யப்பட்டு வேதவிஷயம், வேதசரிதை, வேதசாகைகளை முதல் மூன்று பிரிவுகளில் சொல்லியுள்ளோம். மந்திரமும் பிராமணமும் அரண்யகமும் உபநிஷதம் எனப்படும் வேத உட்பிரிவுகளை 4, 5-ல் காணலாம். ஐரோப்பிய மொழிபெயர்ப்பு ஆச்சாரிய அனுவாதங்களைப்பற்றியும் வேதாங்கங்கள், உபாங்கங்கள், பிரதிசாக்கியம், கோஷம், வேதபடன முறைகளையும் 6-12-வது பிரிவுகளில் காணலாம். 13, 14, 15-ல் வேதவாழ்க்கை, வேதயக்ஞம், வேதசம்ஸ்காரம் முதலியவைகளின் இர

கசியங்களைக் காணலாம். 16-ல் ருக்வேதசாரம், ருக் வேத ஒரு கடவுளைப்பற்றியும் பல சூக்தங்களின் உண்மைகளையும் காணலாம். கிருஷ்ண யஜுர் சுக்ல யஜுரைப்பற்றி சொல்லும் 17-வதில் ருத்ரம் புருஷ சூக்த பூர்ண மொழிபெயர்ப்புகளுடன் பல அமுத மொழிகளைக்காணலாம். 18-ல் சாமவேதமும் 19-தில் அதர்வத்தைப்பற்றியும் பல சூக்தங்களின் உரைகளையுங் காணலாம்.

சில மந்திரங்களை வடமொழியிலும் தென்மொழியிலும், பல மந்திரங்களை தமிழிலும், ஆதாரமுடன் எழுதியுள்ளோம். ருக்வேதத்தை ரு எனவும், யஜுரை, ய எனவும் அதர்வத்தை அ எனவும், சாமனை சா எனவும், பல இடங்களில் குறிப்பிட்டுள்ளோம். ஆதாரமொழிகளின் அருகிலுள்ள இலக்கங்கள் மூல நூல்களின் அத்தியாயம் முதலியவைக் குறிக்கும். இந்நூலை எழுதுவதில் எனக்கு உபகாரமாயிருந்த நூல்கள்—நிர்ணய சாகர ருக்வேதம், கல்கத்தா கிருஷ்ண யஜுர்வேதம், அஜ்மீர் சுக்கிலயஜுர், சாமன் அதர்வவேதம், ஸ்ரீ சங்கரர் தசோபநிஷதம், லாகூரில் பிரசுரமான நியாய முதலிய சாஸ்திரங்கள், சௌனகர் பிரஹத்தேவதை, வேதபாஷ்ய முகவுரை, யஜர்வேத சாயனபாஷ்யம், பம்பாய் ஐதரேய பிராமணம், லாகூர் தைத்திரிய பிராமணம், சம்ஸ்கார சந்திரிகை, கல்கத்தா பாகவதம், பம்பாய் பாரதம், வேத சம்பந்தமான பல ஐரோப்பிய நூல்கள்.

இப்பதிப்பில் எதிர்பாராத பிழைகள் புலனுகலாம். அவற்றைப் பொறுத்துக்கொள்ளும்படி பிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

லலிதா நிவாஸ்,
கார். பம்பாய், 21.
ஸ்ரீமுகளுு மாசிமீ ௰௨௳ } எம். ஆர். ஜம்புநாதன்.

# விஷய அட்டவணை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வேத விஷயம் | 1 |
| 1. | வேதங்கள் நான்கு ... | 1 |
| 2. | வேதவடிவம் ... | 2 |
| 3. | வேதங்கள் என்பது என்ன ... | 2 |
| 4. | வேதகாலம் ... | 3 |
| 5. | வேதம் தோன்றிய தெப்படி ... | 4 |
| 2. | வேத சரிதை | 5 |
| 1. | ருக்வேதம் ... | 5 |
| 2. | யஜுர்வேதம் ... | 6 |
| 3. | சாமவேதம் ... | 6 |
| 4. | அதர்வவேதம் ... | 7 |
| 5. | வேதசாகைகள் ... | 7 |
| 3. | சாகை | 8 |
| 1. | ருக்வேதம் ... | 8 |
| 2. | கிருஷ்ண யஜுர் வேதம் ... | 9 |
| 3. | சுக்லயஜுர்வேதம் ... | 10 |
| 4. | சாமவேதம் ... | 10 |
| 5. | அதர்வசாகை .. | 11 |
| 4. | மந்திரமும் பிராமணமும் | 12 |
| 1. | மந்திரம் .. | 12 |
| 2. | ருக்வேத பிராமணங்கள் ... | 12 |
| 3. | கிருஷ்ணயஜுர் ... | 14 |
| 4. | சுக்லயஜுர் ... | 14 |
| 5. | சாமவேதம் ... | 14 |
| 6. | அதர்வபிராமணம் ... | 15 |
| 7. | ஐதரேய கதை ... | 15 |
| 8. | தைத்திரிய மொழிகள் | 16 |
| 5. | அரண்யகமும் உபநிஷதமும் | 16 |
| 1. | அரண்யகம் | 16 |
| 2-3. | உபநிஷதம் ... | 17 |
| 4. | உபநிஷத மொழிகள் | 18 |
| 6. | வேதமும் ஐரோப்பியர்களும் | 18 |
| 1-4. | ருக்வேதம் ... | 19 |
| 5. | யஜுர்வேதம் ... | 19 |
| 6. | சாமவேதம் ... | 20 |
| 7. | அதர்வம் ... | 20 |
| 8. | பிராமணம் ... | 8 |
| 7. | பாஷ்யக்காரர்கள் | |
| 1. | ருக்வேதம் ... | 21 |
| 2-3. | யஜுர்வேதம் ... | 22 |
| 4. | சாமவேதம் ... | 23 |
| 5. | அதர்வம் ... | 23 |
| 6. | நவீன பாஷ்யங்கள் ... | 23 |
| 8. | வேதாங்கங்கள் | 21 |
| 1. | வேதாங்கம் ... | 25 |
| 2. | சிட்சை ... | 25 |
| 3. | வியாகரணம் ... | 25 |
| 4. | சந்தஸு ... | 26 |
| 5. | ஜ்யோதிஷம் ... | 26 |
| 6. | நிருக்தம் ... | 27 |
| 7. | கல்பம் ... | 27 |
| 9. 1. | உபாங்கங்கள் ... | 28 |
| 2. | சாங்கியம் ... | 28 |
| 3. | யோகம் ... | 29 |
| 4. | மீமாம்சம் ... | 29 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 5. | வேதாந்தம் | ... 30 |
| 6. | நியாயம் | ... 31 |
| 7. | வைசேஷிகம் | ... 31 |
| 8. | ஆயுர்வேதம் முதலியவை | ... 32 |
| 10-11. | பிரதிசாக்கியமும் கோஷமும் | .... 33 |
| 1. | பிரதிசாக்கியம் | ... 33 |
| 2. | பிரதிசாக்கியை அடக்கம் | ... 34 |
| 3-4. | வேதகோஷம் | ... 34 |
| 12. | வேதபடனம் | .... 35 |
| 1. | சுவரம் | ... 35 |
| 1. | பாடமுறைகள் | ... 35 |
| 1. | மூலசம்ஹிதை | ... 35 |
| 2. | பதசம்ஹிதை | ... 36 |
| 3. | கிரமசம்ஹிதை | ... 36 |
| 4. | ஜடசம்ஹிதை | ... 36 |
| 5. | கனம் | ... 36 |
| 13. | வேத வாழ்க்கை | .... 37 |
| 1. | வேதரகசியம் | ... 37 |
| 2 | பலோபாசனை | ... 37 |
| 3. | பெண் பண்டிதைகள் | 38 |
| 4. | சுதந்திர.விவாகம் | ... 38 |
| 5. | வில்லிலே பிரியம் | ... 39 |
| 6. | எப்பொழுதும் ஆயுதம் தரி | ... 39 |
| 7. | சபைகளும் சங்கங்களும் | ... 39 |
| 8. | தொழில்கள் | ... 40 |
| 9. | கப்பல் தொழில் | ... 40 |
| 10. | பறக்கும் விமானங்கள் | 41 |
| 14. | வேதயக்ஞம் | ... 42 |
| 1. | யக்ஞரகசியம் | ... 42 |
| 2. | பிரமயக்ஞம் | ... 44 |
| 3. | தேவயக்ஞம் | ... 44 |
| 4. | ரிஷியக்ஞம் | ... 44 |
| 5. | பலிவைசுவதேவயக்ஞம் | ... 45 |
| 6. | அதிதியக்ஞம் | ... 45 |
| 15. | வேத சம்ஸ்காரம் | ... 46 |
| 1. | 16 சம்ஸ்காரங்கள் | ... 46 |
| 2. | கிருகசம்ஸ்காரம் | ... 46 |
| 3. | பும்சவனம் | ... 47 |
| 4. | சீமந்தம் | ... 47 |
| 5. | ஜாதகர்மம் | ... 47 |
| 6. | நாமகரணம் முதலியவைகள் | ... 48 |
| 7. | உபநயனம் | ... 48 |
| 8. | விவாகம் | ... 49 |
| 9. | வானப்பிரஸ்தம் | ... 50 |
| 10. | ஆதர்ஸ துறவி | ... 50 |
| 11. | அந்தியேஷ்டி | ... 51 |
| 16. | ருக்வேதசாரம் | ... 51 |
| 1. | ருக்வேதம் | ... 51 |
| 2. | ஒரேதேவர் | ... 52 |
| 3. | மூன்று அக்னிகள் | ... 52 |
| 4. | புவி அனல் | ... 53 |
| 5. | நடு அக்னி | ... 53 |
| 6. | இந்திரனின் பல நாமங்கள் | ... 54 |
| 7. | சூரியன் | ... 57 |
| 8. | சூரியதேவர்கள் | ...57 |
| 9. | சூரியனின் பல சொரூபங்கள் | ... 57 |
| 10. | ருக்வேத மண்டலங்கள் | ... 58 |
| 11, 12, 13-14. | மண்டலச் சுருக்கம் | 58-61 |
| 15-16. | வாக்குசூக்தம் | ... 61 |
| 17. | வாக்கின் வாணி | ... 62 |
| 18. | மருத்துசூக்தம் | ... 63 |
| 19. | உணவுசூக்தம் | ... 63 |
| 20. | சிருட்டிசூக்தம் | ... 64 |
| 21. | விசுவேதேவசூக்தம் | 65 |
| 22-23. | சுவஸ்திருக்குக்கள் | 66 |
| 24. | சன்ஞேமந்திரங்கள் | 68 |
| 17. | யஜுர் வேதம் | .... 69 |
| 1. | கிருஷ்ண யஜுர் வேதம் | ... 70 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 2. | ருத்திரம் | ... 71 |
| 3. | சமகம் | ... 76 |
| 4. | புருஷசூக்தம் | ... 77 |
| 5. | சுக்லயஜுர் வேதம் | ... 78 |
| 6. | அமுதமொழிகள் | ... 80 |
| 18. | சாமவேதம் | .... 85 |
| 1. | சாமமொழிகள் | ... 87 |
| 19. 1. | அதர்வம் | .... 88 |
| 2-3. | அதர்வ உண்மை | ... 89 |
| 4. | அதர்வ ரகசியம் | ... 90 |
| 5. | அதர்வ ரிஷிகள் | ... 90 |
| 6. | அதர்வ காண்டங்கள் | 91 |
| 7. | காலன் இரகசியம் | ... 92 |
| 8. | விராத்யன் கதை | ... 93 |
| 9. | வேத பிராமணன் | ... 93 |
| 10. | ஆயுத சரணாகதி | ... 94 |
| 11. | சத்துரு சம்ஹாரம் | ... 95 |
| 12. | பயம்வேண்டாம் | ... 95 |
| 13. | கோபம் வேண்டும் | ... 95 |
| 14. | போர் டமாரம் | ... 97 |
| 15. | அறிவைநாடு | ... 98 |
| 16. | எதையும் சுவாதீனம் செய் | ... 98 |
| 17. | ஒற்றுமை அவசியம் | ... 99 |
| | பிழைதிருத்தம் | ...100 |
| | வேத அடக்கம் | ...101 |
| | வேத பிராமணம் முதலியவை | ...102 |
| | வேதமலர்கள் | ...103 |
| | வேதசாகைகள் | ...104 |

# வேத சந்திரிகை

## 1. வேத விஷயம்

चत्वारि वाक् परिमिता पदानि
तानि विदुर्ब्रह्मणा ये मनीषिणः ।
गुहा त्रीणि निहिता नेङ्कयन्ति
तुरीयं वाचो मनुष्यो वदन्ति ॥

*சத்வாரி வாக்பரிமிதா பதானி தானி விதுர் பிராம்மணா யே மனீஷிண : குஹா திரீணி நிஹிதா னேங்கயன்தி துரியம் வாசோ மனுஷ்யோ வதன்தி. அதர்வம். 9. 10. 27.*

*வாணியை நான்காய் வகுத்தார்கள். ஞானமுள்ள பிராமணன் இவைகளை அறிவான். இவைகளில் மூன்று மறைவிலே வைக்கப்பட்டுள்ளன. நான்காவது பாகமான வாணியையே மனிதன் பேசுவான்.*

1. **வேதங்கள் நான்கு** :—அவை ருக்கு யஜுர் சாமன் அதர்வமெனப்படும். இவைகளை சுருதி ஆம்னாயம் எனவும் அழைப்பார்கள். இச்சம்ஸ்கிருதப் பொருள்களின் மூலப் பொருள்களை நோக்குவோம். வித்தை நிறைந்த நூலுக்கு வேதமெனச் சொல்வது. தர்மம் எதனால் செவியுறப்படுகிறதோ அதற்கு சுருதி எனவும் தலைமுறை தலைமுறையாய் அப்பியசிக்கப்படும் நூலுக்கு ஆம்னாயம் எனவும் கூறுவதுண்டு. எதனால் தேவர்கள் துதிக்கப்படுகிறார்களோ அதற்கு ருக்வேத மெனப்பெயர். பூஜிக்கப்படுவதால் யஜுர்வேதம் எனவும் சாந்தமளிப்பதால் சாமவேத மெனவும் ஞானச்சுடர் அளிப்பதால் அதர்வம் எனவும் சொல்வார்கள்.

**समानि यस्य लोमान्यथर्वाङ्गिरसो मुखं**

*சாமன் அவன் ரோமன் போலாகும்; அதர்வம் அவன் வாய்போலாகும். அத. 10:20.*

2. வேத வடிவம்: வேத புருஷன் என ஒருவன் இருந்ததாக சிலர் சொல்லலாம். வேதம் மனித வடிவத்தில் ஒருநாளுமிருந்ததில்லை. ஆனால் வேதங்களிலுள்ள பற்பலகுணங்களைப் புலனுக்க கவிகள் ஆரோபஞ் செய்துசில வடிவங்களைக் கற்பித்தார்கள். உதாரணமாய் யாக்ஞவல்கிய சீடர் ஒருவர் சொல்வதாவது—ருக்வேதம் கமலக் கண்களுடன் வெண்மை வடிவ மெடுத்தவன். யஜுர்வேதம் தாமிரக் கண்களுடன் மஞ்சள் நிறமுள்ளவன். சாம வேதம் சொர்ணக் கண்களுடன் சூரியனின் சோதியை யுடையவன். அதர்வம் காமன் வடிவமெடுத்து நீலோற்பல நிறமுள்ளவன். அதர்வவேதம் காண்டம் 10, பிரபாடகம் 23, அனு. 4, மந்திரம் 20 சொல்வதாவது :-வேதம் ஈசனுல், ருக்வேதம் பிராணனும். யஜுர் வேதம் இருதயம், அதர்வவேதம் முகம், சாமன் ரோமம் போலாகும். இன்னம் சிலர் ருக் வேதத்தை அக்னி எனவும் யஜுரை வாயு எனவும் சாமனை சூரியன் எனவும் அதர்வனை பிரம்மா எனவும் அழைப்பார்கள்.

**ब्रह्मसूर्य समं ज्योतिः**

*பிரம சூர்ய ஸமம் ஜ்யோதி: பிரமமான நான்கு வேதங்கள் சூரியனைப்போல் சோதியுள்ளவை. யஜுர். 23. 48*

3. வேதங்கள் என்பது என்ன? வேதங்களை ஆதியில் ஏதோ பெரிய வன்மைகள், சக்திகள் என எண்ணினர்கள். விருத்திராசுரன் தன் ஜயத்தை இழப்பதற்கு முன் வேதங்களை விட்டுவிட்டான். அதனுல் அவன் தோல்வியடைந்தான் என சதபத பிரா

மணத்தில் ஒரு கதையுண்டு. (ஆசிரியரின் சதபத 28-வது கதை) வேதம் அக்னியின் கொம்புபோலாகும் என யஜுர் 19. 91-வது மந்திரம் மொழியும். கொம்பு என்றால் சக்தியைக் காட்டும் கருவி. பிரமன் விஷ்ணு ருத்திரனின் சக்திகளே, யஜுர் ருக்கு சாம வேதம், என விஷ்ணு புராணம் (2. 11.) கூறும். இந்த சக்திகளை சொற்கள் மூலமாக நவீனமாய் தொகுத்தது வியாசராகும். அவைகளையே சாதாரணமாய் வேதங்கள் என அழைப்பது. இவ்வேதங்கள் எப்பொழுது உண்டாயிற்று ?

*ஆவி : சன்னிஹிதம் குஹா ஜானுடா மஹத்பதம்.*

*அவன் புலனை போதிலும் பழைய தெனப்படும் பெரிய நிலயத்தில் மறைந்துளான். அதர். 10. 8. 10*

4. **வேதகாலம் :—** வேதம் எப்பொழுது அருளப்பட்டது என நம்மால் இன்னம் நிர்ணயஞ் செய்ய முடியவில்லை. உலகம் எப்பொழுது சிருட்டியாயிற்று என நிர்ணயமானால் அப்பொழுதே வேத காலத்தை நிலையாக்கலாம். மாக்ஸ் முல்லர் கிறிஸ்து பிறக்க 1200 வருஷங்கள் முன்னர் எழுதப்பட்டது என்கிறார். பாலகங்காதர திலகர் அதைப் பிழையென நிரூபணஞ்செய்து வேதபிராமண காலமே 8000 வருஷங்கள் முன்னர் இருக்க வேண்டுமென பகிரங்கஞ் செய்தார். அவினசை சந்திரச் சக்ரவர்த்தி பூகர்ப்ப ஞானத்தினால் குறைந்தது 25000 வருஷமிருக்க வேண்டுமெனச் சொல்லுகிறார். ஜர்மன் சித்தாந்தி சலேகல் சகத்தின் புராதன நூல் வேதம்தான் எனக் கூறுகிறார். ஸ்ரீ தயானந்தர் இப்பொழுதுள்ள சிருட்டி நாம் தினந்தோறும் செய்துவரும் சங்கல்ப கணக்கினால் ஆறுமன்வந்தரம், 28 சதுர்யுகம், 5035 வருஷமாயிற்று எனச்சொல்லி அதைசுமார் 1960853036 வருஷம் எனக்கூறி வேதகாலம் அதுதான் என நிரூ

பணஞ் செய்கிறார். எவர் என்ன சொன்னபோதிலும் அதுவே மானிட கோடிகளின் பழைய நூல் என ஐரோப்பிய அறிஞர் ஒருவர் கூறுகிறார்.

**तस्मात् यज्ञात् सर्व हुतः ऋक् सामानि जज्ञिरे**

*தஸ்மாத் யக்ஞாத் சர்வஹுத: ருக் சாமானி சஜ்ஞிரே. யஜு. 31. 6. 7*

5. **வேதம் தோன்றிய தெப்படி?** யக்ஞத்தினின்று வேதமுண்டாயிற்று. யக்ஞமென்றால் விஷ்ணு. அதாவது ஈசனாகும். வேதம் மிகவும் பழைய நூல். எப்படித்தோன்றிற்று என்பதை சிந்தனை செய்து கொண்டு போனால் கடைசியிலே ஈசனிடமிருந்துதான் தோன்றியதென்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைப் புலனாக்கும். பிரம்மாவின் நான்கு வாய்களினின்றும் வந்ததாக சில புராண கற்பனைகள் கூறும். சில புராணக்கதைகளிலே விசேஷமான கதையொன்று உண்டு. ஒவ்வொரு பிரளய காலத்திலும் வேதம் மறைந்தவுடன் சிருட்டி காலத்தில் அதை வியாஸர் வந்து தொகுக்கிறார் எனச் சொல்லும். அப்படியே நவீனமாயுள்ள வேதங்களை வியாசரே வகுத்ததாகக் கூறும்.

வியாஸர் தொகுத்த வேதத்தை இப்பொழுது பார்க்க முடியுமா? வியாஸர் தொகுத்த அனைத்தும் இலட்சக்கணக்கான வருஷங்கள் சென்றபடியாலும் ஆயிரத்திற்கு அதிகமான சிஷ்யர்கள் கற்றபடியாலும் வேற்றுமை யன்னியில் பல பிரிவினைகளாயிற்று. அப்படி பிரிவினையான கதைகளை நாம் பார்ப்பதுபோல் சொல்லுவோம்.

# 2. வேத சரிதை

**देवस्य पश्य काव्यं मँहित्वाताद्याममार सद्यः समान**

*தேவஸ்ய பச்ய காவ்யம் மஹித்வா தாத்யாம மார ஸத்ய: சமான. ஈசுவரனின் மகிமையின் ஞானத்தைக் காணவும். நேற்று இறந்தவன். இன்று பிழைத்துளான். சாமன். 1, 4, 4, 3*

1. ருக்வேதம்: ஸ்ரீ வியாசர் வகுத்த வேதம் எப்படி பிரிந்ததெனச் சொல்லவும்?

ஸ்ரீ வியாசர் நான்கு வேதங்களை பைலர், வைசம்பாயனன், ஜைமினி, சுமந்தனுக்கு அறிவித்தார். பைலர் ருக்வேதத்தை இந்திரப் பிரமிதனுக்கும் பாஷ்கலனுக்கும் அறிவித்தார். பாஷ்கலன் அதை நான்காய்ப் பிரித்து வாத்யன், யாக்ஞவல்கியன், பராசரன், அக்னிமித்திரனுக்கு அறிவித்தார். இந்திரப் பிரமிதன் மாண்டுக்யனுக்கு அறிவித்தார். தேவமித்ரன், ஸௌபர்யாதி முதலியவர்கள் மாண்டுக்யனுக்குச் சீடரானார்கள். மாண்டுக்யனின் மகனான சாகல்யன் தான் கற்ற ருக்வேதத்தை ஐந்தாய் வகுத்து வத்ஸன், முத்கரன், சால்யன், கோகல்யன், சிசிரன் என்னும் ஐந்து சீடர்களுக்கு அறிவித்தார். இவர்களின் சீடரில் ஒருவனான ஜாதகர்ணன் நிருக்தத்தோடு பலாகன், பைலன், ஜாபாலன், விரஜன் முதலியவர்களுக்கு உபதேசஞ் செய்தார். பாஷ்கலன் பிள்ளைகள் பாலகில்யர் என்னும் சம்ஹிதையை தொகுத்தார்கள். அதை பலாயன், நிர்பஜ்யன், காசாரன் முதலியவர்கள் படித்தார்கள். இப்படி பிரிந்த வேதங்களை எல்லா பிராமணர்களும் கைப்பற்றினார்கள்.

*ஜீவோ மிருதஸ்சரதி. சீவர்கள் சென்றவர்களால் செல்லுகிறார்கள். அ. 9. 10. 8. சம்பஜார்ப்ப: (யஜுர். 38, 11.) யஜாரினை எங்களுக்கு சந்தோஷமாகவேண்டும்.*

2. யஜுர் வேதம்: இனி யஜுர்வேதம் பிரிந்த வகையைப் பார்ப்போம். வைசம்பாயனருக்கு அத்வர்யு, சரகர் என இரண்டு சீடர்களுண்டு. இவர்களை வைசம்பாயனர் அதிகமாய் மதித்ததால் வேறு சீடனை யாக்ஞவல்கியருக்குப் பிடிக்கவில்லை. குருநாதர் உடனே கோபித்து நான் சொன்னதைத் திருப்பியளிக்கவும், எனக்கூறினர். அவர் வமனஞ் செய்தார். தித்திரியப் பட்சிகள் அதைப் பருகி தைத்திரிய சம்ஹிதையை சொல்லிற்று. யாக்ஞவல்கியர் சூரியோபாசனை செய்து சூரியனை குதிரையாய் தரிசனஞ் செய்து சுக்லயஜுர்வேதத்தை அறிந்தார். இதைப் பதினைந்து வகையாய்ப் பிரித்து காண்வர், மாத்யன்தினயம் முதலிய பெரியார்களுக்கு அறிவித்தார். இந்த சம்ஹிதைகளுக்கு வாஜசனேயம் எனப்பெயர். ஏனெனில் சூரியனுன குதிரையின் தலை ரோமங்களினின்று வந்ததனுலாகும்.

பலர் சுற்றிச் செல்லும் சின்னச்சந்திரன் பழையவனை எழுப்பி விட்டார். சாம. 14. 4. 3

3. சாமவேதம்: ஜைமினிக்கு சுமந்தன் என ஒரு மகனுண்டு. அவனுக்கு சுன்வாம்ஸ்தன் என ஒரு பிள்ளையிருந்தான். இவ்விருவர்களுக்கும் அவர் அறிவித்தார். இவர்களின் சீடனுன சுகர்மா என்பவன் சாமவேத சாரத்தை 1000 சம்ஹிதைகளாய்ச் செய்தான். ஹிரண்ய நாபன், பௌஷ்யன்ஜனன் அவந்தன் இந்த சம்ஹிதைகளைப் பற்றினர்கள். இவர்களுக்கு 500 சீடர்களுண்டு. இவர்கள் நன்ருய் அத்யயனஞ் செய்தார்கள். பௌஷ்யன்ஜனுக்கு லௌகாட்சி, மாங்கலி, குல்யன், குசீதன், குட்சீ என பல சிஷ்யர்களுண்டு. இவர்கள் நூற்றுக்கணக்கான சம்ஹிதைகளைப் படித்தார்கள். ஹிரண்யநாபனின் சீடனுன கிருதன் 14 வகை சம்ஹிதைகளை தன் சீடர்களுக்கு

அறிவித்தான். அவந்தனே தன் சீடர்களுக்கெல்லாம் மிகுதியான சம்ஹிதைகளை யறிவித்தான்.

### कालात् ब्रह्मा

காலாத் பிரம்ம. காலத்தினின்றே பிரமம் என்னும் அதர்வம் தோன்றினன். அதர்வ. 19. 54. 1

4. அதர்வவேதம் : சுமந்தன் கவந்தன் என்னும் தன் சீடனுக்கு அறிவித்தான். அவன் பத்யன் என்பவனுக்கும் வேததரிசிக்கும் அதை அறிவித்தான். சௌக்லாயனீயன், பிரமவலி, மதோஷன், பிப்பலாயனி முதலியவர்கள் அவன் சீடர்கள். இனி பத்யனுடைய சீடர்களைப்பற்றி சொல்லுகிறேன். அவனுக்குக் குமுதன், சுனகன், ஜாஜலீ என சீடர்களுண்டு. சௌனகன் தன் இரண்டு சம்ஹிதைகளைப் பருவிற்கும், ஸைந்தவாயனுக்கும் அறிவித்தான். ஸைந்தவாயனுக்கு, சாவர்ண்யன் முதலிய சீடர்களுண்டு. இவர்களிடமிருந்து ஆச்சாரியாரானவர்கள் நட்சத்திரகல்பன், சாந்தி கல்பன், காசியபன், அங்கிரஸர், திரய்யாருணி, கச்யபன், அகிருதவ்ரணன், வைசம்பாயனன், ஹரிதன். (பா. 12. & 67)

இனி சாகைகளின் உண்மைகளைச் சொல்வோம்.

---

## 3. வேத சாகைகள்

---

**यस्मिन्नृचः साम यजूँषि यस्मिन् प्रतिष्ठिता रथनाभाविवाराः**
**यस्मिँश्चित्तं सर्वमोतं प्रजानां तन्मे मनः शिवसङ्कल्पमस्तु ।**

ய. 34. 5.

சக்ரநாபியின் பற்களைப்போல் நான்கு வேதங்கள் சேர்ந்தும் சீவர்களின் சிந்தை சாய்ந்ததான என்மனம் சிவ சங்கற்பமுடைதாகட்டும்.

1. சாகை என்றால் என்ன? முன் சொன்னகதையினின்று வேதத்தை பலர் அறிந்த சூட்சமத்தை அறிகிறோம். வேதத்தைக் கற்ற இவர்கள் அனைவரும் பூமண்டலம் முழுவதுஞ் சென்று இலட்சக் கணக்கான சிஷ்யர்களுக்கு அறிவித்தார்கள். ஆனால் காலம் இடம் நிலைகளுக் கேற்றவாறு வேதமொழிகளைச் சொல்வதிலும் அனுசரிப்பதிலும் சில வேற்றுமைபோலுள்ள பேதங்கள் ஏற்பட்டன. அவைகளையே சாகை என்பார்கள். ஒரு சாகையைப் பிரிவினை எனச் சொன்னபோதிலும் வேதத்தின் பரிபூர்ண ஞானம் அந்த சாகையில் அடங்கியிருக்கிறதெனச் சொல்லலாம். ஒருசாகை எனச் சொன்னால் அதற்கு நான்கு ஆதாரங்களிருப்பது அவசியம். அவை—சம்ஹிதை, உபநிஷதம், ஸூத்திரம், அரண்யம். ஆனால் நவீனத்தில் நூற்றுக்கணக்கான சாகைகள் மறைந்து விட்டன. இன்னம் மறைந்து வருகின்றன. இருக்கும் 5, 6 சாகைகளில் ஆதார நூல்கள் குறைந்து ஒருவர் நூலை மற்றவர் அபகரித்துக் கொண்டு சில நூற்களில்லாமல் அவை இல்லை என்பதையும் அறியாமையால் அந்தகாரத்தில் நமது சமூகம் மூழ்கி வருகிறது.

இனி நான்கு வேதங்களின் சாகைகளை நோக்குவோம்—

1. ருக்வேதம்:—இதற்கு 21 சாகைகளிருந்தன. ஆனால் இப்பொழுது 6 சாகைகளையே காணலாம். அவை—சாகலம், பாஷ்கலம், ஆசுவலாயனம், சாங்காயனம், ஐதரேயம், மாண்டுகாயனம். இக்காலத்தில் ஆசுவலாயன சாகையையே அதிகமாய்க் காண்கிறோம். ஆசுவலாயன சாகைக்காரர்கள் தாங்கள் சொல்லும் சம்ஹிதை எது என்பதை மறந்து சாகல சம்ஹிதையை அனுஷ்டிக்கிறார்கள். இவர்கள், பிராமணம் ஆரண்யகம் உபநிஷத்திற்கு, ஐதரேயர்களை

அனுஷ்டிக்கிறார்கள். இவர்களுக்குரியது சிரௌத சூத்திரமும் கிருஹ்ய சூத்திரமுமே. மற்ற சாகைகளைப் பற்றி நாம் அதிகமாய் அறிவதில்லை.

2. கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு 101 சாகைகள் உண்டு என மகா பாஷ்யம் கூறும். சௌனகர் சர்ணவ்யூஹத்தில் இதற்கு 86 சாகைகள் உண்டு எனச் சொல்லுகிறார்

(i) பதஞ்சலி காலத்தில் சரகசாகையை ஒவ்வொரு கிராமத்திலும் அத்யயனஞ் செய்ததாக அவர் சொல்லுகிறார். நவீனத்தில் இச்சாகையை அத்யயனம் செய்பவர் ஒருவருமில்லை.

(ii) பதஞ்சலி தன் பாஷ்யத்தில் அத்யகா கடகாலாபம் எனப்புகலுகிறார். ஆனால் காடக சம்ஹிதையைத் தவிர வேறு எந்நூலும் நமது கண்களில் தென்படுவதில்லை. கடோபநிஷதம் இந்த சாகையைச் சேர்ந்ததாகும். இதன் இதர நூல்கள் காடக கிருஹ்ய சூத்திரமாகும். காடக சம்ஹிதை 18 பாகங்களாகும். ஒவ்வொன்றுக்கும் ஸ்தானக மெனப்பெயர்.

(iii) கபிஷ்டல சாகை:—இதன் பெயரை சரணவ்யூஹத்தில் காணலாம். ஏட்டுப் பிரதிகள் இங்குமங்கு மிருந்தபோதிலும் இது இன்னம் அச்சாகவில்லை.

(vi) மைத்ராயணீ சாகை இதைக்கலாப சாகை எனக் கூறுவதுண்டு. பதஞ்சலி காலத்தில் சர்வ சதாரணமாய் இச்சாகை ஓதப்பட்டது. இப்பொழுது இச்சாகை அபூர்வமாய் விட்டது. இதன் நூல்கள் மைத்ராயணி உபநிஷதம், மானவ சிரௌத சூத்திரம்.

v. தைத்தியரிய சாகை—இது பழைய சாகையாகும். ஆபஸ்தம்பம் இச்சாகையில் சேர்ந்ததே. ஹிரண்ய கேசி சாகையும் இதைச் சேர்ந்ததே. இதன்

நூல்கள் :—தைத்திரிய சம்ஹிதை, தைத்திரிய பிராமணம், தைத்திரிய அரண்யகம், தைத்திரிய உபநிஷதம், ஆபஸ்தம்ப கல்ப சூத்திரம், போதாயன கல்ப சூத்திரம், ஹிரண்யகேசி கல்பசூத்திரம், பாரத்வாஜ சூத்திரம்.

மேற்கொண்ட 5-6 சாகைகளைத் தவிர வேறு 95 சாகைகளை இப்பொழுது நாம் காண்பதில்லை.

3. சுக்லயஜுர் வேதம் :—ஆதியிலிருந்த சாகைகள் 17. இதன் முக்கிய சாகை மாத்யான்தினமாகும். வடக்கே இச்சாகை யதிகம். இச்சாகையின் சம்பூர்ண நூல்களை இக்காலத்தில் காணலாம். அந்நூல்களாவன :—

(i) வாஜசனேய சம்ஹிதை, சதபத பிராமணம், பிரஹதாரணியக உபநிஷத்து, காத்யாயன சிரௌத சூத்திரம், பாரஸ்கர கிரஹ்ய சூத்திரம் :—

(ii) காண்வசாகை. இந்தப்பிராமணர்கள் அதிகமில்லை. வடக்கே இச்சாகையை யனுஷ்டிப்பவர்களிருக்கிறார்கள். இதன் சதபத பிராமணத்திற்கும், மாத்யான்தின பிராமணத்திற்கு சற்று வேற்றுமையுண்டு. இச்சாகையைச் சேர்ந்தவர்கள் இஞ்சிக்கொல்லையிலுண்டு.

4. சாமவேதத்திற்கு இக்காலத்தில் மூன்று சாகைகளே யுண்டு.

(i) கௌதமசாகை :—குஜராத்திலே இச்சாகையை யனுஷ்டிப்பவர்களதிகமுண்டு. இச்சாகையை யனுஷ்டிப்பவர்கள் வருஷந்தோறும் குறைந்து கொண்டே வருகிறார்கள். இச்சாகையின் நூல்களாவன:- சம்ஹிதை, தாண்டிய பிராமணம், ஷட்விம்சபிராமணம், சாமவிதான பிராம்மணம், சாந்தோக்ய உபநிஷதம், மச்சகல்ப சூத்திரம், லாட்சயாயன சிரௌத சூத்திரம், கோபில கிரஹ்ய சூத்திரம்.

(ii) ராணாயனீய சாகை—மாராஷ்டிரத்திலே இச்சாகையை அனுஷ்டிப்பவர்கள் அதிகம். நமது நாட்டிலும் இச்சாகையை யனுஷ்டிப்பவர்களுண்டு. கௌதும சாகையின் சம்ஹிதை பிராமணம் உபநிஷத்தே இதற்குமாகும் இதற்குப் பிரத்யேகமான நூல்கள்—திராஹ்யாயன சிரௌதசூக்திரம். கதிர கிரஹ்யசூக்திரம்.

(iii) ஜைமினீய சாகை. இது கர்நாடகத்திலே அதிகம். ஜைமினி சம்ஹிதை என ஒன்று உண்டு. இதை இங்கிலாந்திலே பதிப்பித்தவர் டாக்டர் கைலண்டாகும். இதன் நூல்கள்—ஜைமினிபிராம்மணம்,• கேநோபநிஷத்து, ஜைமினி உபநிஷத்து பிராமணம், ஜைமினி சிரௌதசூத்திரம், ஜைமினி கிருஹ்ய சூத்திரமாகும்.

5. அதர்வ சாகைகள் இதற்கே குறைவான சாகைகள். ஆதியில் 9 சாகைகள்—1. பிப்பலாதம். 2. தௌதம், 3. மௌதம். 4. சௌனகீயம் 5, ஜாஜலம். 6. ஜலதம் 7. பிரமவதம், 8, தேவதர்சம் 9. சாரணவைத்யம்.

(i) பிப்பலாத சாகை ஐரோப்பாவிலேயே அச்சடிக்கப்பட்டது. பிரசிஞோபநிஷதம் இதைச் சேர்ந்ததாகும், இதைத்தவிர, இதன் வேறு சம்பந்தமான நூல்கள் அகப்படவில்லை.

(ii) பிப்பலாத சாகைகளுக்குப் பிறகு இப்பொழுது அகப்படுவது சௌனக சாகையாகும் இச்சாகையைச் சேர்ந்த சிலரை இன்னும் நாம் காணலாம். பம்பாயைச் சேர்ந்த எஸ். பி. பண்டிதரால் சாயன பாஷ்யத்துடன்இது அச்சடிக்கப்பட்டது. இதன் நூல்களாவன:—சௌகன சம்ஹிதை, கோபதப் பிராணம், முண்டகமுதலிய உபநிஷதம். வைதான சிரௌதசூத்திரம். கௌசிக சிரௌத சூக்திரம். இதன்

கல்பச் சூத்திரங்கள்—நட்சத்திரக் கல்பம், சாந்தி கல்பம், விதான கல்பம், சம்ஹித கல்பம் அங்கிரஸ கல்பம். இதைத் தவிர வேறு, ஏழு சாகைகளைப்பற்றி நவீனத்தில் நாம் ஒன்றுமே அறிவதில்லை.

இனி வேதத்தில் விளங்கும் முதன்மையானவைகளைச் சொல்லவும்?

---

# 4. மந்திரமும் பிராமணமும்.

---

*ஸூத்ரம் ஸூத்ரஸ்யபோ வித்யாத்ஸ வித்யா பிராமணம் மஹத். நூலின் நூலை அறிபவன் மகத்தான பிரமாணத்தையு மறிவான்.* அ. 10. 8. 37.

**1. மந்திரம்.** வேதத்திலுள்ள முக்கிய பாகங்களைப்பற்றிச் சொல்லுவோம். வேதத்திலே இரு பாகங்களுண்டு. மந்திரபாகம், பிராமணபாகம். மந்திரமென்பது மூலமாகும். மனனஞ் செய்வற்கான மொழிகளாகும். ருக்வேத மந்திரத்திற்கு ருக்குக்கள் எனவும், யஜுர்வேத அதர்வமொழிகளுக்கு மந்திரங்கள் எனவும் சாமவேத மந்திரங்களுக்கு கானங்கள் எனவும் பெயர். பிராமணம் என்பது மூல மந்திரங்களின் விளக்கம் போலாகும். யக்ஞக்கிரியைகளை விளக்கும் பல கதைகள் பிராமணங்களிலுண்டு. சன சமூக ஆசார வழக்கங்களையும் காணலாம். பிராமணமென்பது பிற்காலத்தில் ஏற்பட்டது. அதனால் அது வேதமாகாது என பலஅறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

(2) ஒவ்வொரு வேதத்தின் பிராமணங்களைப் பற்றி விளக்கமாய்ச் சொல்லவும்?

பிராமணங்கள். ருக்வேதத்தைப்பற்றி இரண்டு பிராமணங்களையே அதிகமாய்ச் செவியுறுகிறோம், அவை:—ஐதரேயம், கௌஷீதகம்,

(i) ஐதரேய பிராமணத்திற்கு 40 அத்தியாயங்கள். இதில் வேதசம்பந்தமான பழக்க வழக்கங்களைக் காணலாம். கடைசி அத்தியாயத்தில் அஜாதசத்ரு தன் மகன் சுனஷேபனை அளிக்கவேண்டிய கதையுண்டு. சோமயாகத்தைப் பற்றி இந்நூல் அதிகமாயுரைக்கும். இந்நூலில் அரண்யகம் என ஒரு பாகமுண்டு. இப்பாகத்தில் மகாவிரதம் என ஒரு நோன்பைப்பற்றியும் பிராமணோப நிஷதம் என ஒரு பாகத்தை யடைந்துள்ளது. பஹ்விருச உபநிஷதம் சன் ஹிதோப நிஷதமும் இந்நூலிலுண்டு. சத்துருவைக் கொல்லும் சாதனங்களை ஐதரேயக் கடைசியில் காணலாம். மஹீதஸ ஐதரேயரே இந்நூலைச் செய்தவர்.

ஆசுவலாயன கல்ப சூக்திரம் இதைச்சேர்ந்தது. இதற்கு சிரௌதமும் கிரஹ்ய சூத்திரமுமுண்டு. சிரௌதத்திற்கு பன்னிரெண்டு அத்யாயங்கள். கிரஹ்ய சூத்திரத்திற்கு நான்கு அத்யாயங்கள்.

(ii) கௌஷீதகப் பிராமணம். இதற்கு 30 அத்தியாயங்கள் உண்டு. சுனஷேபன் கதை இப்பிராமணத்திலில்லை. முதல் ஆறு அத்தியாயத்தில் ஹவிர் யக்ஞத்தைப்பற்றியும் 7-10 அத்தியாயங்களில் யக்ஞ சாதனங்களையும் 11-30 அத்தியாயங்களில் ஹோதார் மந்திரங்களுண்டு. கௌஷீதக அரண்யகமென ஒரு பாகமுண்டு. இதற்கு 24 அத்தியாயங்கள். கௌஷீதக உப நிஷதமும் இந்நூலில் தான். இப்பிராமணத்தில் இரண்டு அற்புதமான சம்பாஷணைகளுண்டு. ஒன்றில் இந்திரன் பிரதர்தானனுக்குக் கற்பிக்கிறான். இரண்டாவதில் அஜாத சத்ரு தன் தேய்வீக ஞானத்தைப் பாலகீ என்னும் புரோகிதனுக்குக் கற்பிக்கிறான். ஈசானன் என்னும் மகாதேவனுக்கு இப்பிராமணத்தில் மதிப்பு யளிக்கப்படுகிறது.

சாங்கியாயன சிரௌத சூத்திரம் இதற்குண்டு. இதற்கு 18 அத்தியாயங்கள். கிருஹ்ய சூத்திரத்திற்கு 6 அத்தியாயங்கள்.

3. கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு முதன்மையானது தைத்திரியப்பிராமணம். தைத்திராண்யகமும் தைத்திரியோபநிஷதமும் இதைச் சேர்ந்தது. தைத்திரிய பிராமணத்திலே சிருட்டி முதலியவைகளைப் பற்றிக்கூறும். கல்பசூத்தம் ஆபஸ்தம்பமேயாகும்.

4. சுக்கில யஜுர் வேதத்திற்கு சதபத பிராமணமே முக்கியமாகும். மாத்யானதின சதபத பிராமணம், காண்வ சதபதம் என இரண்டு உண்டு. ஒன்று 14 காண்டம், மற்றொன்று 17 காண்டங்கள். இவ்விரண்டிலும் யக்ஞம் செய்யும் வழிகள் சொல்லப்படும்.

5. சாமவேத பிராமணங்கள், சமூக சம்பந்தமாய் அதிக விளக்கங்களை சாமவேத பிராமணங்களில் அறிகிறோம். சில முக்கியமான பிராமணங்களாவன :—

(i) பஞ்சவிம்சம். (ii) சத்விம்சம்.
(iii) சாமவிதானம். (iv) அர்ஷேயம்.
(v) வம்சம் (vi) தல்வகாரப் பிராமணம்.

(i) பஞ்சவிம்சப் பிராமணம். சோமயாகம் முதலியவைகளை இந்நூல் நன்கு விளக்கும். இதன் சம்பந்தமாய் பல கதைகளை இந் நூலில் காணலாம். விராத்ய ஸ்தோமம், நைமிஷ்யர்ஷி, பரான்தான கோசல மன்னன், புருகுத்ஸன், குருக்ஷேத்ரம் என்னும் மொழிகளை இந்நூலில் காணலாம்.

(ii) சத்விம்சப் பிராமணம். இதற்கு அற்புதப் பிராமணம் எனவும் பெயர். இந்நூலில் கிரகங்கள் செல்வது வீழ்வது வால்நட்சத்திரம் பூகம்பம் முத

வியவைகளைப் பற்றிச் சொல்லும். அழும் கற்கள் சிரிக்கும் மூர்த்திகளையும் பற்றி இந்நூலில் காணலாம்.

(iii) சாமவிதானப் பிராமணம். இது நவீன நூல் எனத்தோன்றும். கோவில் பூஜை நிஷேதம் என இந்நூல் கூறும். பல கட்டுக் கதைகள் நிறைந்த புஸ்தகம்.

(iv) அர்ஷேயப் பிராமணம். இதை சாமவேத சூசிகை எனச் சொல்லலாம். சாமவேதத்தைப் பாராமல் சொல்லுபவர்களுக்கு இந்நூல் பயனை அளிக்கும்.

(v) வம்சப் பிராமணம். சாமவேத ஆச்சாரியர்களின் பெயர் இந்நூலிலுண்டு. பழைய குருநாதர்களைப்பற்றி இந்நூல் அறிவிக்கும்.

(vi) தேவதாத்யாயப் பிராமணம்-சாமவேதகானம் எப்படிச் செய்வது முதலிய விதிகள் நிறைந்த நூல். பிரமதின கணக்கை அறிவிக்கும் புஸ்தகம்.

(vii) தல்வகார பிராமணம் என ஒன்று உண்டு. சாந்தோக்கிய உபநிஷதம் இந்நூலைச் சேர்ந்ததே.

6. அதர்வ வேதத்திற்கு முக்கிய பிராமணம் கோபதம். சிருட்டி முதலிய எல்லா விஷயங்களையுஞ் சொல்லும்.

7. ஐதரேய பிராமணத்திலுள்ள ஒரு கதை.

நமக்குள் ஒற்றுமையில்லை. அசுரர்கள் நம்மை ஜயித்து விடுவார்கள் என தேவர்கள் சிந்தனையிலாகி ஒன்று சேர்ந்தார்கள். அக்னிவசுக்களோடும் இந்திரன் ருத்திரர்களோடும் வருணன் ஆதித்தியர்களோடும் பிரஹஸ்பதி விசுவே தேவர்களோடும் ஆழ்ந்து யோசித்தார்கள். இனி நமது தேகங்களை வருணனிடம்—சலம்—வைப்போம். பேராசையால் பிரிபவனைத் தள்ளி விடுவோம் என ஒன்று சேரும் நிபந்தனையொன்று செய்துகொண்டார்கள். இப்படி வருணனி

டம் சேரவே அவன் தனுனுப்தரமானுன். அதாவது ஒன்று சேர்ப்பவனுனுன். அப்பால் அசுரர்களால் ஜயிக்க முடியவில்லை. (1, 24.)

8. தைத்திரிய பிராமணத்திலுள்ள சில மாதிரி மொழிகள்.

பிரஜாபதி தேவர்களை சிருட்டித்தான். தேவர்கள் பிறந்தவுடன் பாபத்திலே தோய்ந்திருந்தார்கள். பிரஜாபதி அவர்கள் பாவங்களை நீக்கினுன். அவன் அப்படி பாவங்களை நீக்கியதால் வித்யுத் என்னும் நாமத்தை அடைந்தான். பிறகு அவன் பாவங்களை அழித்தபடியால் விருஷ்டி என்ருனுன். இதனுலேயே, இப்பெயருள்ள இடங்களில் பாவம் புலனுகாது. 3, 10, 9.

---

# 5. அரண்யகமும் உபநிஷதமும்

ஓம் பத்ரம் கர்ணேபி: சுருணுயாம தேவ பத்ரம் பச்யேமாசக்ஷபி: யஜத்ரா: ஸ்திரை ரங்கை ஸ்துஷ்டுவாம் ஸஸ்த நூபிர் வியசேம தேவஹிதம் யதாயு: முண்ட கோப்நிஷதம்.

சிறந்ததை செவியுறுவோம். குணமுள்ளதையே கண்களால் காண்போம். திரமான அங்கங்களுடன் துதிசெய்து தேவர்களுக்கு ஹிதமான வருஷங்களை நாங்கள் அனுபவிக்கட்டும்.

1. இன்னம் வேதத்திலுள்ள முதன்மையான விஷயங்களைச் சொல்லவும்?

வேதத்தை கர்ம காண்டம் ஞானகாண்டம் என இருவகைகளாய்ப் பிரிக்கலாம். கர்மகாண்டம் என சாதாரணமாய், தனிமையாய் ஒரு காண்டமில்லை. ஆனுல் யஜுர்வேதத்தை கர்மகாண்டம் நிறைந்த நூல் எனவே சொல்லலாம். கர்மம் அல்லது செயல்

களைப்பற்றிச் சொல்லும் மந்திரங்களை யெல்லாம் கர்ம காண்டம் என்பது. அவைகளில் யக்ஞம் முதன்மை யாகும். நமது வாழ்க்கைக்கு வேண்டிய செயல்களை யெல்லாம் இப்பாகம் புலனுக்கும். இவைகளை வேறு இடத்தில் விளக்கியுள்ளோம். இனி ஞானகாண்டத் தை நோக்குவோம். இதை இரண்டாய் வகுக்கலாம். ஒன்று அரண்யகம். இரண்டாவது உபநிஷதம். அரண்யத்தில் (வனத்தில்) செய்யப்பட்டது, அல் லது அறிய முடியும் என்பதை விளக்க இது அரண் யகம் என அழைக்கப்பட்டது. இதை வேத பிராமணத் தில் காணலாம். உபநிஷதமுடன் இது இணைந்தது. சில முக்கியமான அரண்யகங்கள்:—

1. ஐதரேயாரண்யகம், 2. பிருஹதாரண்யகம், 3. தைத்திரியாரண்யகம்.

(i) சில அரண்யக மொழிகள்—ஜாயாபூமிர் பதிர் வியோம, மிதுனம் தா இத்யாதி—பூமி மனைவியாகும்; வானம் புருஷனுகும். இருவர்களும் ஒரு சோடி. (தை. அ.)

(ii) அசத்திலிருந்து, சத்து, ஏழு ருஷிகளுமா யிற்று. (தை. அர.) 1. 11. 1.

3. உபநிஷதம்:—மறை பொருளை நாடும் நூல் களுக்கு உபநிஷதங்கள் எனப்பெயர். சில முதன்மை யான வேதோபநிஷதங்கள். 1. ஈசோபநிஷதம், 2. கேனம், 3. கடம், 4. ஐதரேயம், 5. தைத்திரியம், 6, முண்டகம், 7. மாண்டுக்யம், 8. பிருஹதாரண்யகம், 9. சாந்தோக்ய முதலியவைகள். நவீனத்தில் தோன் றும் நூற்றுக்கணக்கான உபநிஷதங்கள் வேதத்தைச் சேர்ந்ததில்லை. ஐதரேயமும் கௌஷீதகி உபநிஷத மும் ருக்வேதத்தின் இறுதியிலே யுண்டு. அவை, இதர மகீதஸர் கௌஷீதகராலும், செய்யப்பட்டதாகும். ஈசமும் பிர்ஹதாராண்யகமும் யஜுர்வேத உபநிஷ

தங்கள். ஈசோப நிஷத முழுமையும் யஜுர்வேத மந்திரங்களேயாகும். பிரஹதாரண்யகம் சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்தது. யாக்ஞவல்கியரே இதன் ஆசிரியர். தைத்திரியமும் சுவேதர்சுவதரமும் கிருஷ்ணயஜுரினின்று எடுக்கப்பட்டன. சாந்தோக்ய உப நிஷதம் சாம வேதத்தைச் சேர்ந்தது. அதர்வ உப நிஷதங்களாவன—பிரசினம், முண்டகம், மாண்டுக்யம், கேனோப நிஷதம், கடம்.

4. சில உப நிஷத மொழிகள்:-அக்னியே அவன் தலை. சூரிய சந்திரன் அவன் இரு கண்கள். திசைகள்செவிகள், வாக்கு விளங்கும் வேதங்கள். வாயுவே பிராணன், விசுவம் இருதயம் பூமி பாதங்களாகும். அவனே சர்வ பூதாந்தர ஆத்மாவாகும்.

முண்டகம், 2. 1. 4.

சத்தியமே ஜயிக்கும். அசத்தியமில்லை. மு. 3. 1. 6. சத்தியம், தவம், சிறந்த ஞானம், நித்திய பிரமசரியத்தால் ஆத்மாவை அடையலாம். மு. 3. 1. 5.

---

## 6. வேதமும் ஐரோப்பியர்களும்

**विश्वानि देव सवित दुरितानि परासुव । यद्भद्रं तन्न आसुव**

*துக்கத்தையும் கஷ்டத்தையும் தூரவிலக்கி தூய்மையாயுள்ளதை அளிக்கவும்.* ரு. 30. 7.

1. 18-வது நூற்றுண்டில் ஒரு பிரஞ்சுப் பாதிரி யஜுர் வேதம் என ஒரு புஸ்தகம் எழுதினர். அந்நூலை பிரஞ்சுமேதாவி வாலடையர் கண்டு வானமளாவ பூஷித்தார். அதுமேல் நாட்டில் பரபரப்பை யுண்டு பண்ணிற்று.

2. ஈஸ்டு இண்டியா கம்பெனியின் உதவியால் மோட்ச மூலர் என்பவன் 1873-ம் வருஷம் வேதங்களை வெகு அழகாய் அச்சடித்து முடித்தான். தியூடர் ஆஉப் ரெக்ட் என்பவர் இங்கிலீஷ் எழுத்திலே வெகு அழகாய் ருக் வேதத்தை ஜர்மனியில் பிரசுரஞ் செய்தார்.

3. 1859-ம் வருஷம் வில்சன் ருக் வேதத்தின் பரிபூர்ண உரையை இங்கிலீஷில் செய்தான். 1877-ம் வருஷம் கிராஸ்மன் ஜர்மன் பாஷையிலும் 1888-ம் வருடம் லுட்விக்கு வேறு ஜர்மன் மொழி பெயர்ப்பு ஒன்றையுஞ் செய்தான். 1899-ம் வருஷம் கிரிப்பத்தின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு தோன்றிற்று.

4. அப்பால் ஓல்டன் பர்க் என்பவர் ருக் வேதத்தின் தத்துவ விளக்கம் என ஒரு அற்புத நூலை எழுதினார். பிரஞ்சுபாஷையில் வேத சம்பந்தமாய் லெங்லோயி என்பவன் ஒரு நூல் எழுதினான். ஜர்மன் அறிஞரான ராத் என்பவர் சாயனர் வேதகாலத்திற்கப்பால் தோன்றியபடியால் அவர் உரையை சரியெனச் சொல்லுவதற்கில்லை என வேத மொழிபெயர்ப்பின் புதிய வழி யொன்றைக் கண்டுபிடித்தார். சாயன பாஷ்யத்திலிருந்து நாம் எப்படி யறிய வேண்டுமென எம். அட்ரெக்னியார் பிரஞ்சு பாஷையில் ஒரு புஸ்தகம் எழுதியுள்ளார். கிராஸ்மன் வேதத்தின் ஒவ்வொரு மொழியையும்பற்றி ஜர்மனியில் ஒரு அற்புத நூல் ஒன்று இயற்றியுள்ளார்.

5. யஜுர் வேதம் :—யஜுர் வேதம் மாத்யான்தின காண்வ சாகையோடு மகீதர பாஷ்யத்துடன் பர்லின் நகரத்தில் பண்டித வேபர் என்பவர் 1852-ம் வருஷம் பிரசுரஞ் செய்தார். 1872-ம் வருஷம் தைத்திரிய சம்ஹிதையையும் அவரே பிரசுரஞ் செய்தார். 1886-ம் வருஷம் எல். வி. ஷ்ரோடர் லிப்ஸிக் நகரத்

தில் கிருஷ்ண யஜுர் வேதத்தின் மைத்ராயிணி சம்ஹிதையை பிரசுரஞ் செய்தார். 1910-ம் வருஷம் அவர் முயற்சியால் கிருஷ்ண யஜுர்வேதத்தின் காடக சம்ஹிதையும் அச்சடிக்கப்பட்டது. இறுதியில் சொன்ன இரு நூல்கள் இன்னம் இந்தியாவில் அச்சாகவில்லை.

கிருஷ்ண யஜுரின் தைத்திரிய சம்ஹிதையை 1914-ல் இங்கிலீஷில் அமெரிக்காவில் கீத்தின் முயற்சியால் பிரசுரிக்கப்பட்டது. கிரிப்பத்து சுக்ல யஜுரின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பை 1899-ம் வருஷம் செய்தார்.

6. சாமவேதம்: சாமவேத சம்ஹிதையை முதன் முதலாய் ஸ்டீவன்ஸ் என்பவரே 1842-ம் வருஷம் லண்டனில் இங்கிலீஷ் மொழி பெயர்ப்புடன் அச்சடித்தார். கௌதம சாகீய சாம சம்ஹிதையை1848-ம் வருஷம் ஜர்மன் மொழி பெயர்ப்புடன் தாமஸ் பென்பே அச்சடித்தார். கிரிப்பத்தின் மொழி பெயர்ப்பு 1899-ம் வருஷம் காசியில் அச்சடிக்கப்பட்டது.

7. அதர்வசம்ஹிதை. சௌனக சாகீய அதர்வ சம்ஹிதையை ராட்டும் விட்னியும் 1856-ம் வருஷம் ஜர்மன் பாஷையில் செய்தார். 1901-ம் வருஷத்தில் பிப்பலாத சாகையை ஜர்மனியிலே எம். புலும் பீல்டு என்பவர் போடோ மூலமாய் பிரசுரஞ்செய்தார். கிரிப்பத்து இங்கிலீஷில் 1899-ம் வருஷம் ஒருமொழி பெயர்ப்பையும் 1905-ம் லான்மான் வேறு இங்கிலீஷ் அனுவாதத்தையுஞ் செய்தார்கள்.

8. பிராமண முதலியவைகள். வேதங்களை எத்தனை சிரத்தையுடன் ஐரோப்பியர்கள் செய்கிறார்களோ அப்படியே வேதசம்பந்தமான பிராமண முதலிய வேத நூல்களையுஞ் செய்துள்ளார்கள். பண்டித வேபரின் முயற்சியால் ஜர்மனியிலே வம்ச பிராமணம் தேவதா பிராமணம், அத்யாயப் பிராம

ணம், ஆர்ஷேய பிராமணம், சம்ஹிதோ உபநிஷத் பிராமணங்கள் அச்சடிக்கப்பட்டன. 1877-ம் வருஷம் ஜைமுனி உபநிஷத பிராமணத்தை, எச். எர்டல் அச்சடித்தார். கோனே என்பவர் சாமவிதான பிரா மணத்தை அச்சடித்தார். அதர்வ பிராமணமான கோபதத்தை காஸ்டன் 1916-ம் வருஷம் அச்சடித் தார். சதபத பிராமணத்தை, வெப்பரும், எக்லிங்கும் செய்தார்கள். ஐதரேய பிராமணத்தை ஜர்மனியில் ஔபரச்டும், இங்கிலீஷில் ஹாக்கும் செய்துள்ளார்கள். கீத் என்பவர் ஐதரேய பிராமணத்திற்கும் கௌஷீதகி பிராமணத்திற்கும் அனுவாதஞ் செய்துள்ளார். இதைத்தவிர அநேக வேத சம்பந்தமான கிருஹ்ய சூக்திரம், சிரௌத சூக்திரம் முதலியவைகளுக்கு அவர்கள் உரைசெய்துள்ளார்கள்.

இனி நமது நாட்டில் தோன்றிய பாஷ்யக்காரர் களைப்பற்றி சொல்லுவோம்.

---

# 7. பாஷ்யக்காரர்கள்

---

## पुनरेव वाचस्पते मनसा सह

*புனரேவ வாசஸ்பதே மனஸா ஸஹா.*

*வாசஸ்பதியே! தெய்வீகமான மனத்தோடு மறுபடியும் இங்கு வரவும். அதர்வ* 1. 1. 2

1. ருக் வேதத்தின் மொழிகளுக்கு உரைசெய்த வர்கள் ஆதியிலே கௌத்ஸர், சாகபூணி, யாஸ்கர், ஔதர்ணநாபன் முதலியவர்களாகும். சாயன பாஷ்ய மே பெயர்போன நூல். பட்டபாஸ்கரன் எழுதிய உரையுமொன்று உண்டு. ஆனந்ததீர்த்தர் சில பாகங் களுக்கு உரைசெய்துள்ளார். சண்டு பண்டிதன் சதுர் வேத சுவாமியுவராஜ இராவணன் வரதராஜன்

எழுதிய சில அங்குமிங்குமான விளக்கங்களுண்டு. உத்பட்டன் எழுதிய பிரதிசாக்கிய உரை யிருப்பதாகக் கேள்வி, கௌஷீதகீ ஐதரேய ருக். உபநிஷதங்களுக்கு ச்ங்கரபாஷ்யம் உண்டென்பதை அனைவரு மறிவார்கள். நவீனமாய் ஸ்ரீ தயானந்தர் ஆறு மண்டலம் வரை பாஷ்யம் செய்துளார்.

2. யஜுர்வேதத்திற்கு (கிருஷ்ணம்) சாயன பாஷ்யமே சகஜமாயிருப்பது. அவர் தைத்திரிய சம்ஹிதைக்குச் செய்துள்ளார். இதைத் தவிர பால கிருஷ்ண தீட்சதர் பட்டபாஸ்கர மிசிரன் எழுதிய சில பாகங்களின் உரைகள் உண்டு. தைத்திரிய உபநிஷத்து பாஷ்யம் ஸ்ரீ சங்கரர் செய்துள்ளதை சகம் அறியும். சில உபநிஷத உரை எழுதியவர்கள்—ஆனந்ததீர்த்தர், ரங்கராமானுஜன், அப்பண்ணாசாரியன், ஞானமிருதன், வியாஸதீர்த்தன், விக்ஞான பிக்ஷு, சங்கரானந்தன், ராமானுஜர் முதலியவர்கள். கல்ப சூத்திரத்திற்கு பாஷ்யம் எழுதியவர்கள் :—மகாதேவன், தூர்த்த சுவாமி, கபர்தி சுவாமி, ருத்ர தத்தன், குருதேவ சுவாமி, கரபிந்த சுவாமி, அஹோபல கோபாலன் முதலியவர்கள். அக்னி சுவாமி, குமாரில பட்டன் சிரௌத சூத்திர பாஷ்யமும், போதாயன சிரௌதத்திற்கு கேசவன், கபர்தி சுவாமி, தேவ சுவாமியும்; இரண்யகேசி, பாரத்வாஜ சிரௌதத்திற்கு கோபாலபட்டன் முதலியவர்களும் விளக்கஞ் செய்துள்ளார்கள்.

3. சுக்கில யஜுர் வேதத்திற்கு மஹீதரபாஷ்யத்தையே நவீனத்தில் காணலாம். உத்பட்டன், மாதவன், அன்ந்ததேவன் ஆனந்தபட்டன் பாஷ்யமிருப்பதாகுவு மறிகிறோம். சதபத பிராமணத்திற்கு ஹரி சுவாமி சாயனர் கவீந்திராசாரிய விளக்கங்களுண்டு. துவிவேத கங்கன் என்பவன் பிருஹதாரண்யக உப

நிஷத்திற்கு பாஷ்யம் செய்துள்ளான். ஸ்ரீசங்கர பாஷ்யமும் இதற்குண்டு. இதற்கு அநேக பாஷ்யங்களைக் காணலாம். யசோ கோபி, பிதுரு பூதி காத்யாயன சூக்தத்திற்கு பாஷ்யஞ் செய்துள்ளார்கள். வாஜபேய்சிரௌ சூக்திரத்திற்கு பிரணயனின் உரை உண்டு. உத்பட்டன் எழுதிய பிரதிசாக்கிய உரையையும் காணலாம். ஸ்ரீதயானந்தர் எழுதிய பரிபூர்ண யஜுர்வேத பாஷ்யம் கவனிக்கத்தக்கது.

4. சாமவேதத்திற்கு, சாயனர், பரதசுவாமி, மகாசுவாமி, நாராயணபுத்திரன், மாதவன் முதலியவர்களின் பாஷ்யம் பிரசித்தமாகும். சாமவேத பிராமணத்திற்கும் சாயனரே பழைய பாஷ்யகர்த்தா. சாமவேத உபநிஷதங்களுக்கு, சாயனர், சங்கரர், ஆனந்த தீர்த்தர், ஞானனந்தர் நித்யானந்தர், சங்கரானந்தர் முதலியவர்கள் செய்துள்ளார்கள். சாமவேத சூக்திரங்களுக்கு சாயனர், அக்னிசுவாமி, அஜாதசத்ரு முதலியவர்கள் உரை எழுதியுள்ளார்கள்.

5. அதர்வ வேதத்திற்கு முன் சொன்ன பல பெரியார்களின் அறைகுறை பாஷ்யங்களைக் காணலாம். நவீனத்தில் சில பரிபூர்ண பாஷ்யங்களுண்டு.

நவீனமாய் 19-வது நூற்றுண்டில் பாஷ்யஞ் செய்த ஸ்ரீ தயானந்த சரஸ்வதி வேதத்தில் வரும் கதைகளெல்லாம் ஆரோபஞ் செய்யப்பட்ட கதையெனச் சொல்லுகிறுர். அவர் சொல்லும் சில கதைகளும் விளக்கங்களும் (1) பிரஜாபதி தன் மகளான உஷையை விவாகஞ் செய்துகொண்டதாக ருக் வேதத்தில் ஒரு கதையுண்டு, இதன் விளக்கம்—பிரஜாபதி என்றுல் சூரியன். உஷை என்றுல் சூரிய உதய முன் உள்ள சமயம். சூரியனுடைய கிரணங்கள் உஷையில் சாய்ந்து பகல் என்னும் பிள்ளை தோன்றுகிறுன். (2) இந்திரன் அகல்யையோடு சேர்ந்து சாபமடைந்த

வேத கதையின் விளக்கமாவது—கோதமன் என்ருல் சந்திரனுக்குப் பெயர். அகல்யை என்ருல் இருளிற்குப் பெயர். இந்திரனுன் சூரியன் அகல்யையோடு சேர்வதையே இந்த உபமாலங்கார கதையின் காரணம். (3) இந்திரன் விருத்திராசுர கதை :—இந்திரனை சூரியன் விருத்திராசுரனை மேகத்தை அடித்து மழை யளிப்பான். (4) தேவாசுர சண்டையைப்பற்றி அறிவு அறியாமைக்கும் நடைபெறும் சதாகால போராட்டமே எனச் சொல்லுகிருர். (5) தக்ஷப்பிரஜாபதி என ஒருவனுண்டு. அவன் தன் 13 கன்னிகைகளைக் கொடுத்து, காசியபனுக்குப் பிறந்ததே இவ்வுலகத்திலுள்ள சந்துக்கள் அனைத்துமாகும் என ஒரு கதையுண்டு. இதன் விளக்கம்:—கசிபர் என்ருல் கடவுளுக்குப் பெயர். 13 கன்னிகைகளும் பிரகிருதியின் 13 பிரிவினைகள். இவைகளினின்று உலகமுண்டாயிற்று.

வேதத்தைப்பற்றி நவீனமாய் செய்தவரில் சிறந்தவர் ஸ்ரீ தயானந்தராகும். வேதம் சாதிப் பிரிவினையை ஆமோதிக்கவில்லை யெனவும், அனைவருக்கும் வேதம்படிக்க அதிகாரமுண்டு, அசம்பாவிதமாய் யக்ஞகாலத்தில் செய்த செயல்கள் எல்லாம் உண்மையான யக்ஞமாகாது எனவும் இன்னம் பல விஷயங்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய ருக் வேதாதி பாஷ்ய முகவுரை படிக்கத்தகுந்தது.

வேதங்களை நன்ருய் அறிய வேண்டுமானுல் வேதாங்கங்களை ஒருவன் நன்ருய் படிக்கவேண்டும்.

---

# 8. வேதாங்கங்கள்

दुरो देवीर्दिशो मही ब्रह्मा बृहस्पतिः

துரோ தேவீர் திசோ மஹீ
பிரமா, பிரஹஸ்பதி :

திடமான திசைகளுடனுன வேதமெனப்படும் பிரஹஸ்பதியே தெய்வீக கவாடங்களாகும். யஜுர். 21. 16

1. வேதாங்கங்கள் ஆருகும். அவை :—1. சிட்சை 2. வியாகரணம், 3. சந்தஸு, 4. சோதிஷம், 5. கல்பம், 6. நிருக்தமாகும். இந்த ஆறு நூல்களையும் படித்த பிறகே வேதங்களை ஒருவன் படிக்க அருகதை யுண்டு.

வேதபாதம் சந்தஸாளுல் கைகள் கல்பங்களாகும். சோதிஷம் கண்களாகி நிருக்தம் செவிகளாகும். சிட்சை மூக்காளுல், வியாகரணம் அவன் முகமாகும் (ஸ்மிருதி)

2. சிட்சை என்ருல் சொற்களை உச்சரிக்கும் வகை நூல். வேதத்தினின்று சிட்சயை செம்மையாக்கிஞர்கள். தைத்திரியாரண்யக சிட்சையையும் குறிப்பிடலாம். உதாரணம் :—

ஓம் சீக்ஷாம் வியாக்யாஸ்யாம : வர்ணஸ்வர : மாத்ராபலம். சாமசந்தான : இத்யுக்த சீக்ஷாத்யாய : இனி சிக்ஷையை விளக்குவோம். அவை :—வர்ணம், சுவரம், மாத்திரை சாம சந்தானமாகும்.

3. வியாகரணமென்ருல் இலக்கணத்திற்குப் பெயர். வரிகளையும் மொழிகளையும் துண்டு துண்டாக்கி ஆராய்ச்சி செய்வதே வியாகரணமாகும். வேதத்தினின்று அறிந்து வியாகரண மெழுதியவர் பானினி மகரிஷியாகும். எட்டு அத்தியாயம் கொண்ட இந்நூலிற்கு அஷ்டாத்யாயம் எனவும் சொல்வ

துண்டு. இந்நூல் 36 பாகங்களுடன் 3996 சூக்திரங்களை அடைந்துள்ளது. புவியிலே இதற்கு நிகரான நூலே இல்லையென்று சில மேதாவிகள் சொல்லுகிறார்கள்.

4. சந்தஸ்ஸு என்றால் வேதமொழி நடைகளைக் குறிக்கும் தனி நூலாகும். பிங்களாச்சாரி வேதத்தின் சந்தஸ்ஸுகளை யெல்லாம் அறிந்து ஒரு நூல் எழுதியுள்ளார். வேதத்தில் வரும் சில சந்தஸ்ஸுகளாவன: (1) காயத்ரீ, (2) பிருஹதீ, (3) அனுஷ்டுபு, (4) பங்க்தீ, (5) ஜகதி, (6) திருஷ்டுபு.

1. காயத்ரி நடையில் 24 எழுத்துக்கள். எட்டு எழுத்துக்களுடனை மூன்று பாதங்கள். அல்லது 16 எழுத்துக்களுடனை முதல் பாதத்தோடு எட்டு எழுத்துக்களுடனை இரண்டாவது பாதம். வேதத்திலே காயத்ரீ நடையே அதிகம். (2) பிருஹதீ—நான்கு பாதங்கள். (8+8+12+8) (3) அனுஷ்டுபு—32 எழுத்துக்கள், நான்கு பாதங்களிலாகும். ஒரு வரியில் இரண்டு பாதங்கள். (4) பங்க்தி—அனுஷ்டுபுடன் ஒரு பாதம் சேர்ந்தது. (5) ஜகதி—48 எழுத்துக்களை நான்கு பாதங்களில் அமைப்பது. ஒரு வரிக்கு இரண்டு பாதங்கள். (6) திருஷ்டுபு—44 எழுத்துக்கள், நான்கு பாதங்களில் அமையும்.

5. ஜ்யோதிஷம் என்பது வானசாஸ்திர நூலாகும். வேதத்தில் வானசாஸ்திர சூட்சமங்களுண்டு. ஐதரேய பிராமணம் சொல்வதாவது :—

சூரியனுக்கு அஸ்தமில்லை. உதயமில்லை. சூரியன் அஸ்தம் என்பது அவன் வேறு நிலையில் செல்லுவதே. அப்படிச் செல்வதால் இங்கு இரவும் அங்கு பகலுமாகும். உதயம் என்பது அங்கு இருளாகி இங்கு பகலாவதுதான். அவனுக்கு அஸ்தமில்லை.

இம்மாதிரியான வேத சூட்சம ஞானங்களையெல்லாமறிந்து பிற்காலத்தில் அநேக நூல்கள் தோன்றின. அதர்வவேத மறிந்தவர்களே இந்நூலை அதிகமாய் இயற்றினார்கள். லண்டன் இந்தியா ஆபீஸ் புஸ்தகசாலையில் இது சம்பந்தமான அச்சாகாமல் பல வேதரிஷி நூல்களிருப்பதாக அறிகிறோம். பகிரங்கமான நூல்களிலே ஆரியபட்டர் எழுதியது அனைவருமறிந்த விஷயம்.

6. வேதசம்பந்தமான மொழிகளை விளக்க உதவியாயிருப்பது நிருக்தம் என்னும் நூலாகும். பிரபலமான ஒரு நிருக்தத்திற்கு ஐந்து அத்தியாயங்கள். சில வேதமொழிகளை ஒன்று சேர்த்து அதன் பிரதி மொழிகளை இந்நூல் அறிவிக்கும். இதற்கு 20 அத்தியாயங்களுடன் யாஸ்கரால் எழுதிய உரை யொன்று உண்டு.

7. கல்பம் என்பதில் மூன்று பிரிவினைகள் :— 1. சிரௌதம், 2. கிருஹ்யம், 3. தர்மம். (1) சிரௌதம் என்பது யாகாதிகளைப்பற்றிச் சொல்லும். (2) கிருஹ்யமென்பது இல்லற சம்பந்தமான செயல்களை குறிக்கும். (3) தர்மம் என்பது ஆத்மா சம்பந்தமானவைகளை அறிவிக்கும். சில கல்ப சூத்திரங்கள்:—

1. சாங்கியாயனம், (2) ஆசுவலாயனம், (3) சௌனகம், (ருக்வேத சம்பந்தமானது) (4) ஆபஸ்தம்பம், (5) போதாயனம், (6) இரண்யகேசி, (7) பாரத்வாஜம், (கி. யஜுர் வேதம்,) (8) காத்யாயனம், (சு. யஜுர் வேதம்,) (9) மசாகன், (10) லாத்யாயனன், (11) அனுபதம், (12) கோபிலன். (13) திராஹ்யாயனம் (சாமவேதம்), (14) குசிகம் (அதர்வம்.)

# 9. உபாங்கங்கள்.

प्रणीतीरभ्यावर्तस्व विश्वेभिः सखिभिः सह

*பிரணீ தீரப்யா வர்தஸ்வா*
*விசுவேபி : சகிபி : ஸஹ*

*மானிடர்களின் அபிவிருத்தியை நாடி வழிகாட்டி உன் நண்பர்களுடன் உழைக்கவும். அதர்வ. 7. 105*

1. வேதத்தினின்று ஆறு வழிகளாய் அகிலத்தின் உண்மைகளை பலர் ஆதியில் அறிந்தார்கள். அவர்களில் சிறந்தவர்கள் ஆருகும். அவர்கள் எழுதிய நூல்களையே உபாங்கங்கள் எனச் சொல்வது. அவை:—1. சாங்கியம், 2. யோகம், 3. மீமாம்ஸம், 4. வேதாந்தம், 5. நியாயம், 6. வைசேஷிகம். இனி உபாங்கங்களின் சில உண்மைகளைச் சொல்வோம்.

2. சாங்கியம். ஸ்ரீ கபிலமுனி வேதத்தினின்று அறிந்ததே சாங்கிய தரிசனமாகும். ஈசுவரனைப்பற்றி இவர் அதிகம் சொல்லவில்லை யாதலால் இவரை பௌத்தன் எனவும் சொல்வதுண்டு. விக்ஞானபிக்ஷு வின் உரையுண்டு. தத்துவ விசாரணை இந்நூலில் அதிகம். இந்நூல் சொல்வதாவது—ஆதியிலே பிரகிருதி. அப்பால் மகாதத்துவம். பிறகு அகங்காரம், ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள். மனம், பஞ்சஸ்துல பூதங்கள், கடைசியிலே புருஷன், இப்படி 25 தத்வங்கள். இத்தத்துவங்களையும் இனி பல விஷயங்களையும் இது விளக்கும்.

சில சூத்திரங்கள்—மூலே மூலாபாவாத் அமூலம் மூலம். (67)

1 மூலத்திற்கு மூலமில்லை யாதலால் அதற்கு அமூலமெனப் பெயர்.

2. பஞ்சா அவயவ யோகத்தால் சுக சம்வித்தி (சூ. 365)

பஞ்சாங்க யோகத்தால் சுகத்தின் ஞானம் தோன்றும்.

3. யோகம். யோக சாஸ்திரத்தை தொகுத்தவர் பதஞ்சலி ரிஷி. இந் நூலிற்கு வியாசர், வர்சஸ் பதி மிசிரன், விக்ஞானபிக்ஷு, போஜதேவன், நாகோஜி பட்டன், எழுதிய உரைகள் உண்டு.

இந் நூலை நான்கு பாகமாய்ப் பிரித்து 194 சூத்திரங்களாய் எழுதியுள்ளார். யோகமென்பது மனம், காயம், ஆத்மாவைக் கைவசம் செய்யும் வழி. சில யோக சூத்திரங்கள்.

1. யோகமென்பது சித்த விருத்தி நிரோத மாகும்.

2. ஈசுவரனுக்குத் தன்னை அர்ப்பணஞ் செய்வதால் சமாதி சித்தி ஏற்படும்.

4. மீமாம்ஸம் : பூர்வமீமாம்ஸம் உத்தரமீமாம்ஸம் என இரண்டு உண்டு. உத்தரமீமாம்ஸத்தையே வேதாந்தமெனச் சொல்வது. பூர்வமீமாம்ஸத்தையே சாதாணமாய் மீமாம்ஸம் என மொழிவது. ஜைமினி ரிஷி இதைச் செய்தாராம். இந் நூலில் 12 காண்டங்களுண்டு. 60 அத்தியாயங்கள், அவை மறுப்படியும் பிரிக்கப்பட்டு பல சூத்திரங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சபரசுவாமியின் பாஷ்யமும் குமாரலீல சுவாமியின் பாஷ்யமும் பெயர் போனவைகளாகும்.

மிமாம்சத்தில் மற்ற நூல்களைப்போல் பதார்த்த ஆராய்ச்சிகளில்லை. யக்ஞ செயல்களைப்பற்றிய சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக வேத மொழிகளின் சந்தேகங்களை இந் நூல் அறிவிக்கும். சில வேதமொழிகளின் தத்துவ விசாரணைகளை இந் நூலில் காணலாம். சில மீமாம்ஸ மொழிகள் :

(i) ஆச்சாரியாரிடம் வேதம் அறிந்த பிறகு தர்மத்தை அறியவேண்டு மென்னும் விருப்பம் உனக்கு அவசியம்.

(ii) சப்தம் என்பது சாசுவதமாகவேண்டும். ஏனெனில் அதைச் சிறப்பிப்பது மற்றவர்கள் அறிந்து கொள்வதற்காகும். அது சாசுவதமில்லையானால் நாம் அறியும் வரை அது நிலைத்திருக்காது. சப்தம் நிலைத்திருக்க வில்லையானால் நாம் கருத்தை அறியமுடியாது.

5. **வேதாந்தம்:** வேதத்தின் முடிவு அல்லது சாரம் நிறைந்த நூலை வேதாந்தமெனச் சொல்வது. இதையும் சூத்திரமாகவே எழுதியுள்ளார்கள். இதை எழுதியவர் வியாஸராகும். பிரம்ம சூத்திர மெனவும் இதை அழைப்பது சகஜம், இதற்கு நான்கு அத்தியாயங்கள். ஒவ்வொரு அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள். ஒவ்வொரு பாதத்திலும் அநேக சூத்திரங்கள். மொத்த சூத்திரங்கள் 558. 191 விஷயங்களுண்டு. ஸ்ரீசங்கராச்சாரியர் சாரீரகமிமாம்ஸ பாஷ்யம் என இதற்கு ஒரு விளக்கம் எழுதியுள்ளார். இப்பாஷ்யத்திற்குஅநேக பாஷ்யங்களுண்டு. ஸ்ரீ இராமனுஜரும் இதற்கு உரைசெய்துள்ளார். வேதாந்தத்தின் நோக்கமாவது—

பிரமம் என ஒன்று உண்டு. அது ஒன்றே எங்கும் நிறைந்துள்ளது. பிரமத்தினின்றே ஆத்மாக்கள் எல்லாம் நெருப்பிலிருந்து பொறி கிளம்புவதுபோல் கிளம்பும். ஆத்மாவும் இப்படி தெய்வீகசம்பந்தத்தை அடைந்துள்ளதால் அதுவும் அமுதமாகும். பிரமத்தை அறியாமலிருப்பது அவித்தையினுலாகும். அவித்தை அழிய அனைவரும் முயற்சி செய்யவேண்டும். மாயை என்பதை அறிந்து அதையும் எரிக்க வேண்டும். அப்பொழுது பிரமத்தில் லயமாவோம்.

சில சூத்திரங்கள்—(i) அதாதோ பிரம ஜிஞாஸா.
(1) எல்லா சாதனங்களுக்குப் பிறகு பிரமத்தை அறிய முயற்சி செய்யவேண்டும். சூ. 1

(ii) வைசுவாநர: சாதாரண சப்த விசேஷாத்.
(2) சாதாரண சப்த விசேஷத்தால் வைசுவாநரன் என்றால் பரமாத்மாவிற்குப் பெயர். 24.

6. நியாயம். வேதத்தினின்று கௌதமர் கண்ட அறிவே நியாயமாகும். நியாய நூல் சுமார் 537 சூத்திரங்களாக எழுதப்பட்டு விசுவநாதர் எழுதிய உரையுடன் விளங்கும். ஒரு பொருள், செயல், நிசமா என்பதைக் காண இவ்வழிகளால் அறியவேண்டும்: 1. பிரமாணம், 2. பிரமேயம், 3. சம்சயம், 4. பிரயோசனம், 5. திருஷ்டாந்தம், 6. சித்தாந்தம், 7. அவயவம், 8. தர்க்கம், 9. நிர்ணயம், 10. வாதம், 11. ஜல்பம், 12. விதண்டா வாதம், 13. ஹேத்வபாஸம். 14. தந்திரம், 15. ஜோதி 16. நிக்ரஹஸ்தானம். இவைகளையும் இன்னம் பல நியாயமறியும் வழிகளை இந்நூல் விளக்கும்.

சில சூத்திரங்கள்:—(i) ஆப்தோபதேச: சப்த: (சூ. 7) ஆப்தர்களின் உபதேசம் சப்தமெனப்படும்.

(ii) சேஷ்டாந்திரியார்த்தாசிரய: சரீரம். (சூ. 11.) செயல், புலன், பொருள்களிலே சாய்வது சரீரமாகும்.

7. வைசேஷிகம். வையகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பிரித்து அக்குணங்களை ஆராய்ச்சி செய்து அறிவிக்கும் நூலாகும். சுமார் 373 சூத்திரங்களாக கணாத முனியால் எழுதப்பட்டதாகும். பொருள்கள் ஆறாகும்: (1) திரவியம். (2) குணம், (3) கர்மம், (4) சாமான்யம் (5) விசேஷம் (6) சமவாயம்.

(1) திரவியத்திலே குணங்களுண்டு, செயல்களுமுண்டு. திரவியம், ஒன்பது பிரிவுகளாகும்—நிலம்,

சலம், தேஜஸு, வாயு, வானம், காலம், திசை, ஆத்மா, மனம். (2) குணமென்பது திரவியத்துடன் சேர்ந்தது. அதற்கு 24 பிரிவினைகளுண்டு—ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரிவது, சம்யோகம், வியோகம், முன்நிலை, பின்நிலை, புத்தி, சுகம், துக்கம், துவேஷம், முயற்சி, குருத்வம், சிநேம், சத்தம், வேகம் திரவத்வம், விருப்பு, வெறுப்பு, அடக்கம் (3) கர்மம்—மேலோ கீழோ சுற்றியோ விரிந்தோ செல்லும் செயல்களுக்குப் பெயர். இதன் நிலை பொருளேயாகும். (4) சாமான்யம்—திரவியம் குணம் கர்மத்திலே ஒன்று சாய்வதாகும். இதில் உயர்வு தாழ்வு என இரண்டு உண்டு. (5) விசேஷம்—கடைசிலே மிகுதியாகும் இரண்டு அணுக்களின் வேற்றுமைகளாகும். இவ்வேற்றுமைகளுக்கு எல்லையே இல்லை. இவை நித்ய பொருள்களான மனம், ஆத்மா, காலம், வானம், நிலம் சலம், முதலியவைகளில், நிலைக்கும். (6) சமவாயம்—பொருள்களின் நித்தியமான சம்பந்தங்கள். உதாரணம்:-செயலும் கர்த்தாவும், அணுவும் அகண்டமும். மேற்சொல்லியவைகளின் ஆராய்ச்சிகளை யெல்லாம் இந்நூலில் காணலாம். 10 அத்தியாயங்கள் கொண்ட இந்தநூலிற்கு சங்கரமிசிரர் வியாக்கியானம் செய்துள்ளார். சிலவைசேஷிக சூத்திரங்கள்:—

(i) ரூபரசகந்தஸ்பர்சவதீ பிருதிவீ. (49.) ரூபம் ரசம் கந்தம் பரிசகுணங்களை அடைந்துள்ளது பூமியாகும்.

(ii) ஸ்பர்சவான் வாயு: (52.) பரிசகுணமுள்ளது வாயுவாகும்.

8. இந்நூல்களைத் தவிற ருக்வேதத்தினின்று ஆயுர்வேதம் யஜுர்வேதத்தினின்று தனுர்வேதம் சாமவேதத்தின்று கானவேதம் அதர்வத்தினின்று அர்த்தவேதம் முதலியவைகளுண்டாயிற்று. அவை

களையெல்லாம் வாசகர்களே சற்று முயற்சியானல் அறிந்து கொள்ளலாம். இனி வேதத்தின் மர்மங்களை அறிய வேதவியாகரணமான பிரதி சாக்கியம் கோஷத்தை யறிவது அவசியம்.

---

# 10-11. பிரதிசாக்கியமும் கோஷமும்.

---

**वाचमस्मे कृतंनो वृषणा मनीषां**

(ய. 34, 29.)

*வாசமஸ்மே, கிருதம்னோ விருஷணுமனீஷாம். எங்கள் வாணியையும் மனத்தையும் மேன்மையாக்கவும்.*

1. பிரதி சாக்கியம் — வேதத்தை விளக்கமாய் அறிந்து கொள்ள வேதவியாகரணம் என்னும் பிரதி சாக்யத்தை நன்ருய் ஒருவன் அறியவேண்டும். வேதத்தின் பல சாகைகளின் ரூபம், இலட்சணம், நியமம் முதலியவைகளை அறிவிக்கும் நூலையே பிரதி சாக்யம் என்பார்கள். வியாகிரண விஷயம் அங்கு அதிகமாயிருப்பதால் அதை வியாகிரண மெனவும் சொல்லலாம்.

மொத்தம் ஆறு பிரதிசாக்கியங்கள் உண்டு. ருக்வேத சாங்கியத்திற்கு பார்ஷத சூத்திரமெனப் பெயர். சௌனக ரிஷியே இதைச் செய்தவர். காத்தியாயனர் செய்த சுக்கில யஜுர் வேத பிரதிசாக்யம் ஒன்று உண்டு. மகரிஷி புஷ்பர் என்பவர் சாமவேதத்திற்கு ஒரு பிரதி சாக்கியம் செய்துள்ளார். இதற்கு புஷ்ப சூத்திர மெனப்பெயர். நான்காவது ஒரு பிரதி சாக்யம், அதர்வ வேதத்தைக்குறித்து லாகூரிலிருப்பபதாக அறிகிறோம். அது இன்னம் அச்சாகவில்லை. சதுர் அத்யாயி என்னும் ஒரு பிரதி சாக்யம் அமெரிக்காவில் இங்கிலீஷ் மொழி பெயர்ப்புடன் ஹிஸ்டன்

என்பவன் அச்சடித்துள்ளான். 24 அத்தியாயங்கள் கொண்ட தைத்திரியபிரதி சாக்பம் ஒன்று உண்டு.

2. பிரதி சாகைகளில் இருப்பவைகளென்ன? (1) வர்ணசாம்ஞயம் என்னும் சொல் உச்சரிப்புவகை. (2) சந்தி விஷயங்கள். (3) பதம் பிரிப்ப தெப்படி? (4) உதாக்தம் அனுதாக்தங்களின் எண்ணிக்கை, சுவர ரகசியம். (5) சம்ஹிதை பாடம். பத சம்ஹிதை நியமம். (6) அதர்வப் பிரதி சாகையிலே கிரமத்தின் இரகசியம். (7) சாமப் பிரதி சாகையிலே பல மொழிகளின் கதிகளான, பிரச்லேஷம், விச்லேஷம், விருத்தம், அவிருத்தம், கதம், அகதம், உச்சம், நீசம், கிருஷ்டம், அகிருஷ்டம், சம்கிருஷ்டம் முதலிய உச்சாரணை களின் பல பேதங்கள்.

(4) இனி வேதகோஷத்தைப் பற்றிச் சொல்லுவோம். வைஜயந்தி அமரகோஷம் முதலியவைகள் வேத நிகண்டாகாது. அவை நவீனமாய் ஏற்பட்டவைகள். வேத மொழிகளை அறிவதில் அவை ஒரு பொழுதும் பயனை அளிக்காது. யாஸ்கர் செய்த நிகண்டும், கௌஸத்வ்யகிருத நிகண்டும் சாகபூணி ரிஷி செய்த நிகண்டுமே நவீனத்திலே யுண்டு. இம் மூன்று நிகண்டுகளும் இன்னம் மூலையில் தானிருக்கின்றன. ஆதியிலே எத்தனையோ நிகண்டு அல்லது கோஷமிருந்தன.

சில நிகண்டு மொழிகள் :—

(i) துர இதி யமநாம. நி. 12. 14 ஸ்வஸ்தி இதி அவிநாச நாம நி-3. 21.

துரமென்றால் எமனுக்குப் பெயர். ஸ்வஸ்தி என்றால் நாசமற்றதின் நாமமாகும்.

(ii) கோ வென்றால் பசுவிற்கும் பூமிக்கும் சூரிய கிரணத்திற்கும் நாமம் என யாஸ்கர் சொல்லுகிறார்.

இந்த நிகண்டில் உள்ளதைப்போல் வேதவிளக்கஞ் செய்தால் பல அசம்பாவிதங்கள் என சொல்லப்படும், சில வேத விஷயங்களின் உண்மைகள் தோன்றும்.

## 12. வேதபடனம்.

**उपमितां प्रतिमिता मथो परिमिता मुत**

*புதையல்களை விளக்க வீட்டை எல்லாம் பிரித்து தனித்தனியாக்குகிறோம். அதர்வம் 9. 3. 1.*

(1) சுவரம் :—நாம் முன்னர் சொல்லியுள்ளது போல் வேதத்தைப் படிக்க வேண்டுமானால் வேத சூக்த மந்திரமறிந்த ரிஷிகளையும் சந்தஸுகளையும் நன்கறியவேண்டும். வேதத்திற்கு சுவரம் அவசியமாகும். உதாக்தம், அனுதாக்தம், ஹ்ரஸ்வம் என அதற்கு மூன்று நிலைகளுண்டு. அதன் ஏழு ஏழு பிரிவுகளையும் அறிவது அவசியம். வேதமொழிகளை இச்சுவரங்களுடனேயே எப்பொழுதும் சொல்வார்கள். இச்சுவரத்துடன் சொல்வதில் நமது தென்னாட்டு பிராமணர்களே வல்லவர்கள். இச்சுவரத்தோடு வேத மொழிகளைப் பல வகைகளில் சொல்வார்கள்.

(2) பாட முறைகள் :— அவைகளை 1. மூலசம்ஹிதை, 2. பதசம்ஹிதை, 3. கிரமம், 4. ஜடை 5. கனம் என்பார்கள்.

1. மூலசம்ஹிதை என்றால் வேதமந்திரங்களை சந்தி சேர்த்துச் சொல்வதாகும். உதாரணம்— அக்னி மீளே புரோகிதம் யக்ஞஸ்ய தேவமிருத்விஜம். ரு. 1. 1. 1. (உரை—புரோகிதனும் ருத்விக்கான யக்ஞதேவ அக்னியை நான் நமஸ்கரிக்கிறேன்.)

2. பதசம்ஹிதை :—மூலமந்திரத்தை பதம் பதமாய் பிரித்துச் சொல்வதாகும். உதாரணம்—அக்னிம், ஈளே, புர : ஹிதம், யக்ஞஸ்ய, தேவம், ரித்விஜம்.

3. கிரமசம்ஹிதை :—ஒரு பதத்தை முன்னும் பின்னும் சொல்வதாகும்—அக்னிம் ஈளே, ஈளே புரோகிதம், புரோகிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்யதேவம், தேவம் ரித்விஜம்.

4. ஜடசம்ஹிதை—பதங்களைச் சேர்த்து சேர்த்து மறுபடியும் பிரிப்பதாகும். அக்னிம் ஈளே, ஈளே அக்னிம், அக்னிம் ஈளே, ஈளே புரோகிதம், புரோகிதம் ஈளே, ஈளே புரோகிதம், புரோகிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்ய புரோகிதம் புரோகிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்ய தேவம், தேவம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்யதேவம், தேவம் ரித்விஜம், ரித்விஜம் தேவம், தேவம் ரித்விஜம்.

5. கனபாட்டிகள் சொல்லும் கனம் விசித்திரமாகும். உதாரணம்—அக்னிம் ஈளே ஈளே அக்னிம், அக்னிம் ஈளே புரோஹிதம் புரோஹிதம் ஈளே அக்னிம், அக்னிம் ஈளே புரோஹிதம் ஈளே புரோகிதம் புரோஹிதம் ஈளே ஈளே புரோஹிதம் யக்ஞஸ்ய, யகஞஸ்ய புரோஹிதம் ஈளே ஈளே புரோகிதம், யக்ஞஸ்ய புரோகிதம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய புரோகிதம், புரோகிதம் யக்ஞஸ்ய தேவம் தேவம் யக்ஞஸ்ய புரோகிதம் புரோகிதம் யக்ஞஸ்ய தேவம் யக்ஞஸ்ய, தேவம் தேவம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய தேவம் ரித்விஜம் ரித்விஜம் தேவம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய தேவம் ரித்விஜம்.

இனி நான்கு வேதங்களின் சாரங்களை சொல்லுவதற்கு முன் வேதகால வாழ்க்கையைப் பற்றிச் சொல்லவும்.

# 13. வேத வாழ்க்கை.

**इमा यास्तिस्त्रः पृथिवीस्तासां हभूमिरुत्तमा**

*இமா யாஸ்திஸ்ர: பிருதிவீஸ்தாஸாம் ஹபூமிருத்தமா. இம்மூன்று உலகங்களிலே இத்தரணியே சர்வோத்தமமானதாகும். அ. 6. 21. 1*

(1) வேத வாழ்க்கையில் அறிந்த ரகசியங்களையும் சில வழக்கங்களையும் கூறுவோம். யஜுர் வேதம் ஏகாசமே திரிசமே திரிசமே பஞ்சசமே...18 24 என்னும், இன்னம் பல மந்திரங்களினின்று 1, 3, 5,....என்னும் கணித எண்ணிக்கைகளையும், ரு. 8. 2. 10 முதல் மந்திரமான 'யாகௌவர்தனீம்........மொழிகளினின்று பூமி சுற்றுகிறதென்பதையும், ரு. 6. 4. 10. 3-வது மொழிகளால் சந்திரன் முதலிய கிரகங்கள் சுற்றுகிறதை ரிஷிகள் அறிந்தார்கள் என அறிகிறோம். பூமியை சூரியன் இழுப்பான். சர்வேசன் சூரியனை கவர்ச்சி செய்கிறான் ரு. 6. 1. 63. சூரியன் ஒருவனேயுண்டு. சந்திரன் பிரகாசமாவது சூரியனால். யஜு. 23. 10. இந்த நவீன ஞானங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். இனி சமூக வாழ்க்கையை நோக்குவோம்.

(2) அவர்கள் பலத்தை உபாசனை செய்தார்கள். பலமுடன் இருக்கவேண்டுமென்பதே அவர்கள் எண்ணம். வீர்யமஸி வீர்யம் மயிதேஹி, பலமஸி பல மயிதேஹி. வீர்யமுள்ளவனே எனக்கு வீர்யத்தை அளிக்கவும். பலமுள்ளவனே எனக்கு பலத்தை யளிக்கவும். யஜு. 19. 6. பலமுள்ளவர்கள்தான் வேதத்தை அறிய முடியுமென்பது அவர்கள் எண்ணம். வேதத்தை யார் படிக்க முடியும் என சௌனக ரிஷி சொல்வதாவது :—இளமையுடன் பலமுள்ளவர்

களாலேயே அறியமுடியும். ஏன்? மொழி என்பது மேல் வழியாகவே செல்லும். மொழி கீழாகச்செல்லாது. துவன்யமான மொழி நாபியினின்று கழுத்தில் வந்து வடிவத்தை அடையும். பிரமசாரியாய் இளங்காளையாய் மித வாழ்க்கை யுள்ளவனுக்கு பலமிருக்கும். அவனுக்கு மேல் செல்லும் ரேதஸுண்டு. அவனே வேத மந்திரங்களை ஓதவும் சொல்லவும் முடியும்.

(3) அக்காலத்தில் பெண்கள் வேதங்கற்று அடியிற்கண்ட பெருப்பண்டிதைகளாகவு மிருந்தார்கள். (1) கோஷை, (2) கோதை, (3) விசுவவரான், (4) அபாலே, (5) உபநிஷதை, (6) நிசதை, (7) பிரமாஜயை, (8) அதிதி, (9) இந்திராணி, (10) சராமை, (11) ரோமசை, (12) ஊர்வசி, (13) லோபாமுத்திரை, (14) நதிகள், (15) யமி, (16) ஸ்ரீ, (17) லக்ஷை, (18) ரஜினி, (19) வாக்கு, (20) சிரத்தை, (21) மேதை, (22) தட்சிணை, (23) ராத்திரி, (24) சூரிய சாவித்திரி.

(4) பெண்களுக்கு விவாகஞ் செய்து கொள்வதில் சுதந்திரமுண்டு.

**कियाती योषा मर्यतो वधूयोः परिप्रीता पन्यसावार्येण ।**
**भद्रवधू भवाति यत् सुपेशाः स्वयं सा मित्रं वनुते जने चित् ॥**

கியாதி யோஷா மர்யதோ வதூயோ: பரிபிரீதா பன்யஸா வார்யேண, பத்ரவதூர் பவதி யத் சுபேசா: ஸ்வயம் ஸாமித்ரம் வனுதே ஜனேசித். (ரு. 10. 27. 17)

தன்னை நாடும் மனிதனின் பொருளைக்கண்டு திருப்தியடையும் ஸ்திரீகள் எத்தனை பெயர். சுந்தரமாயுள்ள பெண்மணி பாக்கியசாலியே! சனங்களில் வேண்டிய மித்திரனை தேடிக்கொள்வாள்; புருஷனிறந்தால் மறு விவாகஞ் செய்யவேண்டுமென அவர்கள் சொல்வது வழக்கம்.

उदीर्ष्वनार्यभि जीवलोकं गता सुमेतमुपशेषऽएहि ।
हस्तग्राभस्यदिधिषोस्तवेदं पत्युजर्नित्वमभि संबभूत ॥

உதீர்ஷ்வ நார்யபி ஜீவலோகம் கதா சுமேத முபசேஷ ஏஹி, ஹஸ்தகிராபஸ்யதி திஷோ ஸ்தவேதம் பத்யு ஜனித்தவம்பி ஸம்பபூத. (ரு, 10. 1. 18. 8)

ஸ்திரியே இனி சீவனுள்ள சகத்திற்குச் செல்லவும். இறந்தவனிடம் நீ ஏன் உட்காந்துளாய். இங்கு வா: உன்னை நாடுபவனை இனி விவாகஞ் செய்து கொள்ளவும்.

(5) வேதபுருஷர்களுக்கு வில்லிலே தனுஸிலே பிரியமதிகம் ஏன்? தனுஸால் பசுக்களை அடைவோம். போரில் ஜயமாவோம். சத்துருவிற்கு அது துக்கத்தை யளிக்கும். வில்லிலே அம்பை நாட்டுங்கால் உன் செவியில் அவள் பெண்மணி போல் வந்து முத்தமிடுவாள். உடனே அலறிச் சென்று உன்னைக் காப்பாற்றுவாள். சண்டைக்குச் செல்ல வேண்டுமானல் பெண்பிள்ளைகளையும் கவனிப்பதில்லை. (ரு. 6. 75)

(6) மனிதர் எப்போழுதும் ஆயுதம் தரித்தவராயிருக்கவேண்டும். சாகும் வரை கைகளிருந்து வில்லை நீக்காதே என்பது தான் அவர்கள் சித்தாந்தம். இறக்குஞ் சமயத்திலும் ஒருவன் கையில் ஆயுதமிருப்பது அவசியம். அப்பால் உன் சுற்றத்தார்கள் வீடு எடுத்துச்செல்லலாம். ருக்வேதம் 10, 18, 9 மந்திரம் சொல்வதாவது:—இறந்த இவன் கையிலுள்ள வில்லை நான் எடுக்கிறேன். அது எங்கள் பலம் பெருமை புகழ்ச்சிக்கு அவசியமாகும். நீயோ இனி போய்விட்டாய். நாங்கள் வீரர்களுடன் சேர்ந்து எங்களின் விரோதிகளை யொழிக்கவேண்டும்.

(7) அவர்களுக்குச் சபைகளிலும் சங்கங்களிலும் பிரியமதிகம். அதர்வவேதம் சொல்லுவதை நோக்க

வும்—7. 12. பிரஜாபதியின் பெண்களான சபையும் சங்கமும் சேர்ந்து என்னைப் பாதுகாக்கவும். நான் பார்க்கும் ஒவ்வொருவனும் . மரியாதையுடனும் ப்ரஸ்பர உதவியுடனாகவேண்டும். பெற்றோர்களே நான் சங்கங்களில் சுவையுடன் பேசவேண்டும். சபையே! உன் பெயரை நான் அறிவேன், நீ தான் பரஸ்பர பேச்சு என்னப்படுவாய். சபையிலுள்ளவர்கள் எல்லாம் என்னுடன் பேசலாம். இங்குள்ளவர்களின் வர்சஸையும் விக்ஞானத்தையும் நான் நாடுகிறேன். இச்சபையிலே சிறந்து விளங்க இந்திரனே! நீ செய்யவும். உங்கள் நினைவு நானு நிலைகளில் சென்றிருந்தால் அவைகளை இங்கு திருப்பவும்.

(8) வேதகாலத்தில் நாம் இப்பொழுது காணும் எல்லாத் தொழில்களுமுண்டு. பற்பல பிரிவுகளான நாம் பல பல எண்ணங்களுடனிருக்கிறோம். உடைந்ததை ஒன்று செய்ய தச்சன் செல்லுகிறான். வைத்தியன் நோயாளியையும் புரோகிதன் யஜமானனையும், நுண்ணிய வேலைசெய்து சிற்பி செல்வ புருஷனையும் நாடுகிறான். என் தந்தைகவி, என் தந்தை வைத்தியன் கூலி செய்பவன் இப்படி பலவாறாகச் சொல்லி நாம் பல வழிகளில் பொன் பொருளை நாடுகிறோம். ஆனால் நமக்கெல்லாம் சாமனின் அருள் வேண்டுமென (9-112) அவர்கள் சொன்னதிலிருந்து பரஸ்பரம் வேற்றுமை யில்லை தென்பதை அறியலாம். அனைவர்களுடன் நண்பர்ளாக விருக்கவே எண்ணினார்கள். மித்ரஸ்யாஹம் சக்ஷுஷே: ஸர்வாணி பூதானி சமிக்ஷே, மித்ரஸ்ய சக்ஷுஷா ஸமீக்ஷாமஹே. (ய. 35. 15.) எல்லாரும் என்னை நண்பனாகப் பார்க்கட்டும். நானும் நண்பர்களாகவே எண்ணுவேன்.

(9) அவர்கள் பெரிய கப்பல் தொழில்களிலும் ஈடு பட்டிருந்தார்கள் என அடியிற்கண்ட ருக்வேத

மொழிகளால் அறிகிறோம். கப்பல் யாத்திரை அசுவினிகளின் நண்பனான துக்ரன் தனது மகனான புஜ்யுவை நீண்ட கடல் யாத்திரைக்கு யனுப்புங்கால் மரிப்பவன் பொன் பொருளைப் பிரிவதுபோல் புலம்பினும். ஆனால் நீங்கள் (அசுவினிகளே) சலம்துளியும் படாமல் உங்கள் கப்பலிலேயே அவர்களைத் திருப்பி அழைத்து வந்துவிட்டீர்கள். மூன்று இரவும் பகலும் நாசத்யரே, நூறு சக்கரங்களுடன் ஆறு குதிரைகளால் இழுக்கப்பட்ட துரித வாகனங்களில் கடல் கடந்து என்மகனை அழைத்து வந்தீர். அசுவினிகளே கடலில் சாய இடமில்லை. பிடிக்கவும் நிலை இல்லை. நூறு துடுப்புக்களுடனான கப்பலில் கூட்டி வந்த செய்கை போற்றற்குரியது. (ருக் வேதம் 1. 116.)

(10) அவர்கள் பறக்கும் விமானங்களையுமறிந்திருந்தார்க்ள். அசுவினிகளே! ரிபுக்களால் செய்யப்பட்ட மனத்திலும் துரிதமான ரதங்களிலே வரவும். ரு. 10. 39. 12. அசுவினிகளே! சுலபமாய் சுற்றும் மூன்று பீடங்கள் மூன்று சக்கிரங்களுடனான ரதமுடன் இங்கு வரவும். ரு. 1. 118. 2. திரிசக்கரம் திரிபீடமான உங்கள் விமானத்திலே வரவும். ரு. 1. 47. 2. ரிபுக்களே! உங்கள் ரதத்திற்கு குதிரை. வேண்டாம். கடிவாளமும் ஏன்? திரிசக்கிரமுள்ள திவ்யமான ரதம் வானத்திலே சுற்றிச் செல்லுகிறது. உங்கள் புத்தியினால் செய்த துரிதமான ரதம் ஒரு பொழுதும் பிழைசெய்வதில்லை. (ரு. 4-39. 1. 2)

இனி வேதகாலத்தில் விளங்கி அனைத்துமான யக்ஞத்தைப்பற்றிச் சொல்லவும்?

---

## 14. வேத யக்ஞம்.

सिंहे व्याघ्र उत या पृदाकौ त्विषिरग्नौ ब्राह्मणे सूर्ये या ।
इन्द्रं या देवी सुभगा जजान सा न ऐतु वर्चसा संविदाना ॥

*சிம்ஹே வியாக்ர உதயா பிருதாகௌ த்விஷிரக்நௌ பிராம் மணே சூர்யே யா, இந்திரம் யா தேவிஸுபகா ஜஜான ஸாந ஏது வர்சஸா சம்விதாந.* (அதர்வம். 6. 38. 1.)

யக்ஞத்தை நாம் வேண்டுவதாவது—சிங்கத்தின் சக்தி புலியின் பலம் வேங்கையின் வன்மை, எரியும் நெருப்பு பிராமணன் சூரியனோடு சுபகமான இந்திரனை சனித்த தேவியானவள் திடம் தூய்மையோடு எங்களிடம் வரவும்.

(1) யக்ஞ இரகசியம். யக்ஞஞ் செய்யுங்கால் பலி செய்தார்கள் எனவும் இன்னம் சில அசம்பாவித செயல்களும் கொடூர காரியங்களையும் வேதமனுமதிப் பதாக சிலர் சொல்வார்கள். இவைகளை விட அடாத மொழிகள் வேறு இல்லை. அசுவமேதமென ஒரு யக்ஞம் செய்யப்படுங்காலத்தில் அடியிற் கண்ட மந்திர மொன்றைச் சொல்லி சில மதியற்ற செயல்களைச் செய்தார்களாம். கணனாம் துவா கணபதிம் ஹவாமஹே பிரியாணாம்துவா பிரிய பதிம் ஹவாமஹே நிதினாம் துவா நிதிபதிம் ஹவாமஹே வ ஸோ மம ஆஹமஜானி கர்பதமா த்வமஜாஸி, கர்பதம், யஜு. 23. 19. ஆனால் இம்மந்திரத்தின் அடியிற் கண்ட மெய்யான உரை யொன்றை கவனித்தால் அவர்கள் அப்படி செய்ததற்கு ஆதாரவே இல்லை எனச் சொல்லிவிடலாம். எல்லாப் பொருள்களின் கணபதியான கடவுளே! உன்னையே நாங்கள் அனுசரிப்போம். பிரியனும் பிரியபதியாயும் நிதியாயும் நிதிபதியாயுள்ள உன்னை நாடுவோம். பிருகிருதியின்

எல்லாப் பொருள்களேயும் கர்ப்பம் தரிப்பவன் நீயே
• என நான் கருதுகிறேன்.

ருக்வேதத்திலுள்ள சுனஷேபன் பலியளிக்கப் படும் கதையை அடிக்கடி சொல்லி வேத காலத்தில் நரபலி இருந்ததாகச் சொல்வார்கள். இதைவிட வேதத் துரோகம் வேறு இல்லே. சுனன் என்ருல் அறிஞன். சேபன் என்ருல் ஞானி. இவ்விரண்டுங் கலந்த ஒருவன், வருணனே நாடும் சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு நரபலி இருந்ததாகச்சொல்வதும் மதியீனமே. வேதத் திலுள்ள யக்ஞ பதங்கள் சில சமயத்தில் பகவானே யும் பல இடங்களில் அக்னி முதலியவர்களேயும் (யஜு. 4. 26, 7-47-48), இன்னம் பல இடங்களில் இடி முழக் கத்தையும், ரு. 18, இரதத்தையும், ரு. 3. 2 கப்பலேயும் 1.6. இன்னம் முதலிய பொருள்களேயும் குறிக்கும். யக்ஞ மென்பது மனிதனேயாகும். யக்ஞதேவபாண்டங்களே நமது புலன்கள். இந்திரன் முதலிய தேவர்கள் இங்கு உளார்கள். அவர்களுக்குத் திருப்தியை யளிக்கவும். (ச. த. பி. கதைகள், பக்கம் 62) இந்த மாதிரியான யக் ஞங்களால் நமக்கு எல்லா வன்மைகளும் வேண்டு மென யஜுர்வேதம் பதினெட்டாவது அத்தியாய முழுவதும் கூறும். இச் சந்தர்ப்பத்தில் 1. பிரம யக்ஞம் 2., தேவயக்ஞம், ரிஷியக்ஞம் 3. பிதுருயக்ஞம் 4. பிராணியக்ஞம் 5. அதிதி யக்ஞம் என வகுத்துத் தொகுக்கப்பட்டிருக்கும் மந்திரங்களிலிருந்து இன்னம் சில வேத ரகஸ்யங்களே அறிவோம்.

(2) தேவர்களுக்கு திவ்ய நாமத்தை யளித்து அவர்களின் ஹிதத்தை நாடும் தலேவர் அனேத்தின் முந்தினவராகும். அந்த ருசிகரமான தலேவனே (பிரமத்தை) நான் நமஸ்கரிக்கிறேன். ய. 31. 20. செளந்தரியமும் செல்வமும் அவன் மனேவிகள். இரவு பகல் உன் இருபக்கங்களிலாகும். நட்சத்திரம்

உன் வடிவம். அசுவினிகள் உன் திருவாய் போலா கும். விசுவத்தை விரும்பி சர்வலோகமும் என்னுடைய தாக வேண்டுமென விரும்புகிறேன். உன்னை இப்படி அறிபவன் எல்லா தேவர்களையும் தன் வசமாக்கிக் கொள்ளுகிருன். இதைத்தான் பிரம யக்ஞ மந்திரம் எனலாம். (யஜ. 31. 22)

(3) ஒவ்வொரு சூக்தத்தின் மந்திரத்தின் சூட்சமமான தேவர்களை நாம் நன்ருய் அறிந்து கொள்ள வேண்டும். இதைத்தான் தேவயக்ஞம் என்பார்கள். நாம் அறியவேண்டிய சில தேவர்கள்—அக்னி, வாயு, இந்திரன், மித்ரன், வருணன், அசுவினி, விசுவே தேவர், சரஸ்வதி, மருத்து, தனூனபதன், நராசாம்சன். ஈளன், உஷை, பாரதி, துவஷ்டா, பூஷணன், அதிதி, பர்வதம், பிரஹஸ்பதி, பிராமணஸ்பதி.

மந்திரங்களையும், ருக்குகளையும் ஆதியில் அறிந்த ரிஷிகள் அநேகர். அவர்களில் சிலர்—மதுசந்தஸன், ஜேதாரன், மேதாதிதி, சுனஷேபன், இரண்யஸ் தூபன், கண்வன், பிரஸ்கண்வன், சவ்யன், நோதன், பராசரம், கௌதமர், குத்ஸன், கசியபம், திரிதன், கக்ஷி வந்தன், பாவயவ்யன், ரோமசன், பரச்சேபன், தீர்க தமஸன், இந்திரன், மருத்து, அகஸ்தியன், லோபா முத்திரை, கிருத்ஸமதன், கூர்மன், ஜமதக்னி, வாம தேவன், வசுசுருதன், சுதம்பரம், சுருதவிவன். இந்த எல்லா ருஷிகளையுமறிந்து அனைவருக்கும் அவைகளை மற்றவர்களுக்கும் அறிவிப்பதே ரிஷியக்ஞ மெனப் பெயர்.

(4) நமோ வ: பிதர: ரசாய நமோவ: பிதர: சோஷாய நமோவ: பிதர: சீவாய நமோவ: பிதர: சுவ தாயை நமோவ: பிதர: கோராய நமோவ: பிதர மன்யவே நமோவ: பிதர: பிதரோ நமோ வோ கிருஹான்ன: பிதரோ தத்த சதோவ: பிதரோ தேஷ்மை தத்வ: பிதரோ வாஸ: யஜு 2. 32.

பிதாவே ! ரசமானஞான மடைய உனக்கு நமஸ் காரம், துக்கம் தொலைப்பதற்கும் தூயமான சீவனுக் காகவும், உணவு ஒளி முதலியவை ஓங்க, கோரம் கழிக் கவும், கடுமை கழிய கோபமாகவும், என் வீட்டிலேயே அடிக்கடி வரவும் போகவும். உனக்கு வஸ்திரம் வேண்டியவைகளையெல்லாம் மளிப்பேன். இன்னும் யஜு 2. 34. சொல்வதாவது—தாய் தந்தை பாட்டன் பாட்டி முதலியவர்களுக்கு அன்ன பானுதிகளை திருப்தி யுடனளிக்கவும். இம் மந்திரங்களை சிராத்த காலத் தில் சொல்லுவார்கள். ஆனால் இதைப் பிதுரு யக்ஞ மென பெரியோர்கள் சொல்லுவார்கள். பிதுரு என்றால் யார் ? வேதப்பிரதானுதாசார்யம் பித ரம் பரிசக்ஷதே. வேதத்தை கற்பிக்கும் ஆச்சாரியனுக் குப் பெயர். நம்மைப் பாது காப்பவனுக்கு பிதா எனப்பெயர். நி. 4. 21. பிதுருக்கள் என்றால் பெற் றோர்களுக்குப் பெயர். வடமொழியின் பிதா என்ப தின் பொருள் உயிர் தந்தை என்பதைத் தவிர வேறு உரை இல்லை.

(5) பிராணிகளுக்கும் புல், ஜலம் முதலியவை அளித்து தினந்தோறும் திருப்தி செய்யவும். (அ.கா. 1. 7. 7) பலிவைசுவ தேவயக்ஞமென இதைச் சொல் வார்கள்.

(6) அதிதிகள் வீடு வந்தால் எழுந்து மரியாதை செய்யவும். அன்னம் சலபானத்தை யளித்து அறிவை கிரகிக்கவும் (அ. 11. 2.) இதைத்தான் அதிதி யக்ஞ மெனச் சொல்வார்கள்.

இனி வேத சம்ஸ்காரம் எனப்படும் நமது வாழ்க்கையின் சிறந்த செயல்களைப்பற்றிக் சொல்லும் சில மறைமொழிகளை நோக்குவோம்.

# 15. வேத சம்ஸ்காரம்.

इदं जनासो विदथा महत् ब्रह्म वदिष्यति

(அதர்வம், 1. 32. 1.)

இதம் ஜனாஸோ விததா மகத் பிரம்மவதிஷ்யதி. சனங்களே! இதை நன்றாய் அறியவும். மகத்தான பிரமத்தை மொழிகிறான்.

(1) இனி ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர் முதலியவர்கள் வேதத்தினின்று அடியிற்கண்ட 16 சம்ஸ்காரங்களுக்காகத் தொகுத்த வேத மந்திரங்களின்று சில வாழ்க்கையின் உண்மைகளை அறிவோம். (1) கர்ப்பதானம், (2) பும்சவனம், (3) சீமந்தம், (4) ஜாதகர்மம், (5) நாமகர்ணம், (6—10) சூடாகர்மம், நிஷ்கிரமணம், அன்னப்பிராசினம், கர்ணவேதம், உபநயனம், (11) வேதாரம்பம், 12. 13. சமாவர்த்தனம், விவாகம், (14) வானப்பிரஸ்தம், (15) சன்யாஸம், (16) அந்தியேஷ்டி.

(2) வேதம் நமது கிரகவாழ்க்கை சம்பந்தமாய் என்ன சொல்வதென்பதை நோக்குவோம்.

வேத நிகண்டு ஆசிரியர் யாஸ்கர் இல்லற சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அடியிற் கண்ட மொழிகளால் சிறுவர்களும் வேண்டுமெனச் சொல்லுகிறார். குழந்தையே! ஒவ்வொரு அங்கத்தினின்றும் உண்டான வீர்யத்தினின்று, எனது விருப்பத்தால் உண்டானாய். இதனால் நீ எனக்கும் உன் அன்னைக்கும் பிரியமானவன். தைத்திரியாரண்யகத்திலும் குழந்தைகளைப் பெறும் வழியையும் கற்க வேண்டுமெனச் சொல்லியுள்ளது. கர்ப்ப தானத்தைப்பற்றி வேதம் கூறுவதாவது—எப்படி பூமியானது பஞ்சமகா பூதங்களை தரிக்கின்றதோ உன் கர்ப்பத்தையும் நீ அப்படியே தரிக்கவும். ஏன் பத்து மாதத்திற்குப்

பிறகு பெருமையான குழந்தையைப் பெறுவதற்கு அ. 6. 17. 1.) பூமியானது எப்படி செடி கொடிகளை தரிக்கின்றதோ நீயும் அப்படியே கர்ப்பத்தை தரிப்பது அவசியம். (அ. 6. 17. 2.)

(3) நீ வீரமான பிள்ளைகளை சனனம் செய்ய வேண்டும். (அ. 14. 17.) ஒரு ஆதர்ச குழந்தை எப்படியிருக்க வேண்டுமென பும்சவன காலத்தில் சொல்லும் வேதமந்திரமாவது. (யஜு. 12. 4) நீ கருடனைப் போலாகி பல நற்குணங்களுடன் காயத்ரியான கண்களோடு வேதமான அங்கங்களுடன் சோதியை யடையவும்.

(4) கர்ப்ப காலத்தில் நாம் செய்ய வேண்டியதைப் பற்றிச் சொல்லும் சில வேத மொழிகள்:— சாதாரணமாய் இவை சீமந்தகாலத்தில் சொல்லப்படும். இது எனது குழந்தை என ப கி ர ங் க ஞ் செய்கிறேன். உனக்கு வேண்டிய உணவு முதலியவைகளையெல்லாம் நான் அளிக்கிறேன். சந்தோஷமாக்குகிறேன். (ரு. 2. 32. 4-5)

(5) பிறந்தவுடன் ஜாத கர்ம சம்ஸ்காரகாலத்தில் சொல்லும் சில மந்திரங்கள்—குழந்தையே! நீ யார்? எவன்? உனக்கு மரணமுண்டா? அல்லது அமிருதனு? நீ ஆத்ம வடிவமுள்ளவன். அமுத புருஷன். ஈசுவரனுல் நியமிக்கப்பட்ட வாழ்நாளை நீ அனுபவிக்க வேண்டும். (சா. மந்திர. பிரா. 1. 5. 14) மகனே: என் ஒவ்வொரு அங்கத்தினின்றும் நீ தோன்றினுய். ஆனுல் நீ தோன்றுவதற்கு மிகுதியான காரணம் என் இருதயம். இக்காரணத்தால் என் பிராணனுல் உன் பிராணனை நான் பாதுகாப்பேன். சா. மந். பிர. 1. 5. 15.

ஈசா! இக்குழந்தைக்கு 100 வயதளிக்கவும். சுகமாகவும் சிந்தனை யுள்ளவனுக இவனைச் செய்யவும். ரு. 36. 6. 10.

(6) இனி நாமகரணம், சூடாகர்மம், நிஷ்கிர மணம், அன்னப் பிராசினம், கர்ணவேத உபநயன சம்ஸ்கார காலங்களில் சொல்லும் அடியிற்கண்ட வேத மந்திரங்களினின்று வாழ்க்கையின் ரகசியங்களை யும் நமது தேவைகளையுமறிகிறோம்.

குழந்தையே! நீ காந்தியுள்ளவனாகவும். ஆத்மா என்னும் நாமமணிந்த ஈசுவரினில் நீ இணைந்தவன். நீ வீரனாகவும். யஜு. 7. 29. வீரமக்கட்களை எனக்கு அளிக்கவும். செல்வம் சக்தியோடு செந்தேனை நாவோடு நான் வாழவேண்டும் ரு. 2. 21. 6. உன் பஞ்சப் பிராணன்களுக் கேற்றவாறு நான் உணவை அளிக்கிறேன். ய. 11. 83. ஔஷதியான் தலை வனே! இக்குழந்தையை நோயினின்று நீக்கவும், யஜு. 6. 15. அறிஞர் கூட்டமே! நாங்கள் செவிக ளால் மங்களத்தை யடைவோம். நல்ல பொருள்களை கண்களால் பார்ப்போம். யஜு. 25. 2.

(7) உபநயனம் தரித்த பிறகு புலனாகும் பிரம சாரி வாழ்க்கையைப்பற்றி வேதம் சொல்வது வைய கம் இருக்கும் வரை மறையாது. பிரமசாரி பிரமத் தின் ஒரு அங்கம் போலாவன். (அ. 17. 5.) அதர்வ வேதம் 11-வது கா. 5 சூக்தம் சொல்வதாவது—

பிரமசாரி புவியை அலறச் செய்வான். சகத்தை யும் சுவர்கத்தையும் அவன் நிலையாக்கினான். பிரமச் சாரியை குருநாதன் கர்ப்பந் தரித்து அவனுக்கு அப்பால் வேறு ஜன்மம் அளிக்கிறார். தவத்தாலும் திடமுயற்சியினாலும் அவனால் செய்ய முடியாத வேலை யே இல்லை. பிரமாவிற்கு முன்னர் பிரமசாரி பிறந்து தவத்தால் வளர்ந்து தீக்கனலாடை யணிந்து சுவர் க்கம் சீவராசி முதலியவைகளை தோற்றுவித்தான், தோல் தரித்து நீண்ட தாடியுடன் தாணியின் நான்கு நிலைகளிலும் அவன் துரிதமாய்ச் சுற்றுகிறான். பிரம

சாரி, சகம், சலம், விராஜன், பிரஜாபதி பரமேஷ்டி யோடு அமுதத்தில் அமைந்து இந்திரனுகி அசு ரனைக் கொன்ருன். சிருட்டி செய்த சகங்களைக் காப்ப வன் பிரமசாரியே. அவனிடம் தேவர்கள் எல்லாம் ஒரு நிலையிலுள்ளார்கள். பிரமசாரி பிச்சையால் இம்மண்ணையும் விண்ணையும் பெற்று வந்தான். அவன் இடி முழக்கமாகி வீரகர்ச்சனையுடன் ஆண்மை யால் அகிலத்தைத் தாங்கி எங்கும் புது உயிரை அளிப்பான். பிரஜாபதி வேண்டியதை யெல்லாம் பிரமசாரி தன்புனித ஆன்மாவால் அளித்தான். பிரமசரியத்தால் ஆடுமாடுகள் உணவை அடையும். பிரமசரியம் தவத்தால் தேவர்கள் காலனைத் துரத்தி ஞர்கள். பிரமசாரியினின்றே சோதி செடி கொடி இரவு பகல் பருவம் முதலியவை புலனுயிற்று. சகத் திலுள்ள எல்லா சீவர்களும் மாடும் மனிதர்களும் பிரமசரியத்தினுலேயே தோன்றினுர்கள். உன் தேகத் திலுள்ள மூச்சை நிறுத்துபவன் பிரமசாரியாகும். எல்லாம் நிறைந்துள்ள பிரமாவையே அவன் அலறச் செய்வான்.

(8) இனி பிரமசரியத்திற்கப்பால் விவாகத்தைப் பற்றி வேதம் என்ன சொல்வதென்பதை சிந்தனையி லாக்குவோம்.

பெண்மணியே! உன் புருஷன் வீட்டுத் தலைவி யாய் நீ செல்லுகிருய். அவன் வீட்டை நீ சாக்கி ரதையாய், அரசு புரியவும். நல்ல ஐசுவரியங்களுக் காக நான் உன் கையைப் பிடிக்கிறேன். நாம் நூறு வயது வாழ்வோம். இவளுடன் நான் பத்து மகனைப் பெறவேண்டும். பெண்மணியே! என் தாய் தந்தை யின் தலைவியாகவும் நீ இருப்பாய். (ரு. 10. 85) ஸ்தி ரியே நான் உன்னை நாடி வந்தேன். நீயே என் வீட் டுத் தலைவி. (சா. 1. 1. 2) இருவரும் இல்லற வாழ்க்கை

நடத்த சுவீகாரஞ் செய்துள்ளோம். சலத்தைப்போல் சேர்ந்து எங்கள் மனம் சாந்தமாகவேண்டும். பிராண வாயுவிற்கு அதிகமாய் இருவரும் பிரியமுடனுவோம். (ரு. 10. 85. 47.) என் புருஷன் சொல்வது போல் நான் செய்யவேண்டும். (சா. 1. 1. 8) துணையே! தர்மத்தின் தூண்டுதலால் நான் உன்னை நாடுகிறேன். நீ என் தர்மபத்னி. நான் உன் கிருஹபதி. நாம் இருவருஞ் சேர்ந்து சகத்தின் கடமைகளைச் செய்வோம். (அ. 14. 1. 52) நான் அறிவுடன் உன்னை கிரஹிக்கிறேன். நீயும் அப்படியே செய்யவும். பூர்ண அன்புடன் உன்னை நாடுகிறேன். நீயும் அப்படியே செய்யவும். நான் சாமவேதம். நீ ருக்வேதம். சகத்தைப் போல் தரிக்கும் உன்னை, சூரியனைப்போல் வர்ஷிக்கும்நான் உன்னை நாடுகிறேன். நாம் மணஞ் செய்து கொள்வோம். மக்கட்களை உண்டு பண்ணுவோம். (அ. 14. 2. 71.)

(9) இனி வானப்பிரஸ்தம் சன்னியாசம் அந்தியேஷ்டியைப்பற்றி வேதம் சொல்வதாவது:—விருதத்தினுல் தீட்சை, தீட்சையால் தட்சிணை, தட்சிணையால் சிரத்தை, சிரத்தையால் சத்தியத்தை வானப்பிரஸ்தாசிரமத்தில் அடைவான். (யஜுர், 18. 20.)

(10) ஆதர்ச துறவி. அனைவரும் என்னை நண்பனுய்க் கருதவேண்டும். நானும் அனைவரையும் நண்பனுய்க் கருதுவேன். (யஜு. 36. 18.) தன்னில் தரணியையும் தரணியைத் தன்னிலும் பார்ப்பான். (யஜு. 40. 6) ஆன்மாவே அனைத்துமென எண்ணி ஒரு தலைவனையே எண்ணுபவனுக்குத் துக்கமேது? (யஜு. 40. 7) அவன் உலகமெல்லாம் துரிதமாய் சுற்றி அவனில் ஒன்ருவான். (யஜு. 32. 12.)

(11) அந்தியேஷ்டி அல்லது கடைசிக்கிரியை: ஜீவனே! நீ செய்த அறத்திற்கேற்றவாறு உன் கண்

சூரியனிடஞ் செல்லும். ஆத்மா பிராண வாயுவினிடம் அணையட்டும். உன் செயலுக்கேற்றவாறு நிலத்திலோ சலத்திலோ செல்லட்டும். அதற்கேற்ற சரீரத்தை நீ அடைவாய் (ரு. 10. 16. 3) ஜாத வேதஸ அனலே! நீ இச் சீவனை எரித்து பக்குவமாக்கி தந்தைமார்களிடம் சேர்க்கவும். (அதர். 16. 5.) சீவனே! நீ இங்கு துண்டு துண்டாய் சிதறிவிட்டாய். உன் மூச்சு காற்றிலே மறைந்துவிட்டது. இனி சனனஞ் செய்யும் பிதுருவானவன் பிரிந்துபோன உன் அனைத்தையும் ஒன்றுசேர்க்க உன்னை சந்திக்கவேண்டும். (அ. 18. 26.) இனி பிதுருக்கள் (பிள்ளை பெறுபவன்) உன் புனித வீடாகும். அங்கு எமன், சூரியன், அரசுபுரிகிருன். (அ. 18. 25.)

இனி வாழ்க்கையை அறிவித்த வேதங்களின் வேறு பல சாரங்களை தனித் தனியாய்க் கூறுவோம்.

---

## 16. ருக்வேத சாரம்.

---

**अग्निमीळे पुरोहितं यज्ञस्य देवमृत्विजं होतारं रत्नधातमं**

*அக்னிமீளே புரோகிதம் யக்ஞஸ்ய தேவமிருத்விஜம். ஹோதாரம் ரத்னதாமம்.* ருக்வேதம் 1. 1. 1.

ஹோதாவும் (சுந்தரப் பொருள்களை யளிப்பவன்) ஐசுவரியமளிப்பவனும் யக்ருஞத்விக்கும் புரோகிதனை (புரங்களைச் சும்பவன்) அக்னியை (ஈசனை) துதிசெய்கிறேன்.

(1) ருக்வேதம். அஹம் பிரமாஸ்மி என்னும் உண்மையை யறிவிப்பது ருக்வேதமென சாமான்யர்கள் சொல்வார்கள். பல ருக்குக்களை அடங்கியுள்ளதால் ருக்வேதமென காரணப்பெயராயிற்று. இந்த ருக்வேதத்தை அஷ்டகம் அல்லது மண்டலம், அத்தியாயம், அனுவாகம், வர்க்கம் சூக்தங்களாகப் பிரித்

துள்ளார்கள். ருக் வேதத்திலே எட்டு அஷ்டகங்கள், அல்லது பத்து மண்டலங்கள், 64 அத்தியாயங்கள், 85 அநுவாகங்கள், 1017 சூக்தங்கள், 2024 வர்க்கங்கள், 10467 ருக்குக்கள் உண்டு.

(2) ஸ்ரே தேவர்.—எதனுல் தேவர்கள் துதிக்கப்படுகிறார்களோ அல்லது தெளிவாகிறார்களோ அதற்கு ருக்கு எனப்பெயர். இப்படி பல ருக்குக்கள் கொண்டன ஒரு சூக்தம். ஒரு சூக்தத்திலே ஒரு தேவரும் அல்லது பல தேவர்களுமுண்டு. ஒவ்வொரு சூக்தத்திற்கும் ஒவ்வொரு ரிஷியுண்டு. அந்த ரிஷியே ஆதியில் அச்சூக்தத்தின் உண்மையை அறிந்தவர். ருக்வேத ருஷிகள், உலகத்தில் எத்தனேயோ தேவர்களுண்டு, ஆனல் எல்லா தேவர்களுக்கும் தலேவன் ஒரு ஈசன் எனச் சொல்லி யுள்ளார்கள்.

....பூதஸ்ய ஜாத பதிரேக ஆஸீத். (ருக். 1-6. 15. 5)

பிராணிகளேப் பிறப்பித்த மகா புருஷன் ஒருவனேயாகும். அவனே அவர்கள் அக்னி என அழைத்தார்கள். மிகுதியான எல்லா தேவர்களும் அவனின் பற்பல சுபாவங்களும் குணங்களுமாகும். அது எப்படி என்பதை சௌனக ரிஷி அறிந்ததுபோல் நாம் சொல்லுவோம்.

(3) மூன்று அக்னிகள்—புவி அக்னி, பர அக்னி, நடுஅக்னி என, அனல் மூன்றுவகை. புவி அக்னி நாம் மூட்டும் தீ யாகும். பர அக்னியால் நமது சீவனே இழப்போம். மூன்றுவது அனலால் மழையை அடைவோம். புவி அக்னியை வையகத்தனல் எனவும், பர அக்னியை வைசுவாநரன் எனவும் நடு அக்னியை ஜாதவேதஸன் எனச் சொல்வார்கள். புவி அக்னியின் தேகம் சுடரானுல் பர அக்னிக்கு ரசிமியும் நடு அனலுக்கு மின்னலுமாகும்.

(4) புவி அனல்—இப்புவி அனலில் வேறு இரண்டு அக்னிகளுமுண்டு. இப்புவி அனலில் ஜாதவேதஸன், வைசுவாநரன், இரவு பகல், மூன்று தேவிகள், குதிரை, பறவை, ரதம், டமாரம், வில் நுனி, இரு பருவம், சந்தஸ, வசுக்கள், இந்திரன், மருத்து, சோமன், பர்ஜன்யன் விஷ்ணு முதலிய குணங்களைக் காணலாம். இவனுக்கு திரவிணோதஸன், தனூனபதன், நராசாம்ஸன், பாவமானன், ஜாதவேதஸன் என ஐந்து பெயர்களுண்டு. திரவியத்தை யளிப்பதால் திரவிணோதஸன் எனவும், பரம் எனப்படும் தேவ அக்னியின் மகனுனபடியால் தனூனபதன் எனவும், தனித் தனியாய்த் துதிசெய்யப்படுவதால் நராசாம்ஸன் எனவும், சனித்தவுடன் சகலமும் தெரிவதால் ஜாதவேதஸன் எனவும் பெயர்.

(5) நடு அக்னி—இதற்கு நாமமளித்தால் இந்திரன் எனச்சொல்லலாம். இந்திரனுன இவனிடமுள்ள தேவர்களும் திவ்யகுணங்களையும் நோக்குவோம். இவனிடம், அப்சரர்கள், ரதங்கள், மழை, ருத்திரன், வாயு, பிரஹஸ்பதி, வருணன், மிருத்யு, பிராமணஸ்பதி; மன்யு, விசுவகர்மன், மித்ரன், க்ஷேத்திரபதி, சரஸ்வதி, தர்க்ஷியன், வஸ்தோஸ்பதி, சலன்மகன், ததீகரன், சுபர்ணன், புரூரவன், ருதன், அசுனுதி, வேணன் முதலியவர்களுண்டு. இவன் நிலயத்திலே அதிதி, துவஷ்டிரா, சவிதா, வாதா, வாசஸ்பதி தாத்ரு, பிரஜாபதி, அதர்வன், கருடன், இளை, விதிர்த்ரு, இந்து, சோமன், சந்திரன் உண்டு. இவனுடன் இணைந்து விசுவாநரன், ருத்திரன், மருத்து, பிதுருக்கள் வாக்கு, யமி, சரஸ்வதி, ஊர்வசி, சினீவாளி, சீதை, கௌரி, ரோதஸி முதலியவர்களிருப்பார்கள். அங்கு இந்திராணியும் பிரசன்னமாயிருப்பாள். திருஷ்டு பங்க்தி சந்தஸம், வசந்தமும், குளிர்காலமும் அவனுக்குச் சொந்தமாகும். இவன் செய்யும்

உத்தியோகமென்ன? இடி முழக்கச் செயல். பூஷணன், விஷ்ணு, வருணன், சோமன், வாயு, அக்னி குத்ஸன், பிராமணஸ்பதி, பர்வதம் முதலியவர்கள் இவன் நண்பர்கள். ஈரத்தைப்பற்றுவது விருத்திரனைக் கொல்வது இன்னம் பெரும் பயங்கர வேலைகளைச் செய்வதே இவன் கடன்.

(6) இந்திரனின் பல நாமங்கள்—இந்திரனுக்கு 26 பெயர்கள் உண்டு—(1) வாயு, (2) வருணன், (3) ருத்திரன், (4) இந்திரன், (5) பர்ஜன்யன், (6) பிரஹஸ்பதி, (7) பிராமணஸ்பதி, (8) க்ஷேத்ரஸ்யபதி, (9) ருதம், (10) வாத்வோஸ்பதி, (11) வாசஸ்பதி, (12) அதிதி, (13) கா, (14) எமன், (15) மித்ரன், (16) விசுவகர்மன், (17) சரஸ்வதி, (18) வேணன், (19) மன்யு, (20) அசுனுதி, (21) அபாம்நபதர், (22) ததிக்ரம், (23) தாத்ரு, (24) தர்கஷ்யர், (25) புரூரவன், (26) மிருத்யு.

1. அவன் காற்றிலிருந்து மூன்று உலகங்களில் வியாப்தமாவதால் இந்திரனையே ரிஷிகள் வாயு என அழைப்பார்கள். 2. அவன் ஈரத்தால் மூன்று உலகங்களையும் நிறையச் செய்வதால் (விருணோதி) அவனுக்கு வருணன் எனச் சொல்வதுண்டு. 3. அவன் வாயுவிலே கர்ச்சனை (அரோதித்) செய்வதால் நான்கு ரிஷிகளான கண்வர், குத்ஸர், கிரித்ஸ்மந்தர், வசிஷ்டரால் ருத்திரன் என அழைக்கப்படுகிறான். 4. நான்குவிதப் பொருள்களுக்கு நிலையான உயிர் நிலயமாகி அவன் அரசுபுரிவதால் (இஷ்டே) அவனுக்கு இந்திரன் என்னும் பெயர் இலங்கிற்று. 5. சரியான காலத்தில் சகங்களுக்கு சலத்தால் திருப்தி செய்வதால் (ப்ராலஜபதி) அத்ரியும் வசிஷ்டரும் இந்திரனையே பர்ஜன்யன் எனச் சொல்வார்கள். அவன் சனங்களிடம் சந்தோஷமாய் (ஜன்ய) நண்பனும்

(ஜன) பெரும் (பர) ஜயத்தை (ஜேதா) உற்பத்தி (ஜனயிதா) செய்வதால் குமார ஆக்னேயர் பர்ஜன்யர் எனச் சொல்லுகிறார். 6. இரண்டு பெரிய உலகங்களுக்கு (பிரஹ்றதி) புருஷனுவதால் (பதி) பிரஹஸ்பதி என அவன் அழைக்கப்படுவான். 7. வாக்கு பிரமாவாகும். சத்தியம் பிரமாவாகும். பூமண்டலம் பிரமாவாகும். இதனுல் கிருஹத்ஸ்மந்தர் பிரமாவின் (பாதாரம்) பாதுகாப்பன் அல்லது பிராமணஸ்பதி என சௌனஹோத்திரர் சொல்லுகிறார். 8. சரியான பர்வகாலத்தில் சகத்தில் நுழைந்து (கஸிதௌ) சிருட்டிகளுக்கு உணவை அளிப்பதால் (கஸ்திப்ய:) வாமதேவர் நிலத்தலைவன் அல்லது க்ஷேத்ரஸ்யபதி என அழைக்கிறார். 9. வாமதேவரிஷி மறுபடியும் சொல்வதாவது—நடுவிலிருந்து நினைவால் அறியப்படும் அவன் சத்தியத்தால் சத்தியத்திலிருப்பதால் ருதம் என இந்திரனை அழைக்கலாம். 10. நடுவிலிருந்து உலகத்திற்கு நிலயம் (வஸ்து) அளித்து பாதுகாப்பதால் ஊர்வசி மகன் வசிஷ்டன் வாஸோஷ்பதி என இந்திரனை அழைத்தார். 11. வேதம் வாக்கினுல் அறியப்படுவதால் சொல்லால் சந்தஸு சொல்லப்படுவதால் சொல்லே இந்த சகமாவதால் இந்திரனுக்கே வாசஸ்பதி என சொல்வதுண்டு. 12. நடுவிலிருந்து எங்கும் சுற்றுபவனுகி எங்கும் பாதிக்கப்படாமலிருப்பதால் ரகுகான கௌதமர் அதிதி என அழைப்பார். 13. அவன் சிருட்டிகளுக்கு பாதுகாப்பாகி கருத்தில் சுகத்தை விரும்புவதால் இரண்யகர்ப்பர் இந்திரனைக் காவெனச் சொன்னுர். 14. இங்கு பிரஜைகளைக் கொடுத்து அவைகளை அழைத்துச் செல்வதால் எமன், வைவஸ்வதன், என இந்திரனைச் சொல்வதுண்டு. 15. இவனை அனைவரும் நண்பனுக எண்ணி பூஜிப்பதால் விசுவாமித்ரர் இந்திரனை மித்திரன் எனச் சொல்லுகிறார். 16. வெயிற்கால

முடிவில் புவிக்கு சலத்தால் (ருத) சுகமளித்து விசுவந்திலுள்ள அனைத்தையும் செயலிலாக்குவதால் விசுவ்கர்மன் • எனச் சொல்லப்படுகிறான். 17. எவனுக்கு மூன்று உலகங்களிலும் (சாராம்ஸி) நெய் குளம் இருக்கின்றதோ அவனுக்கு சரஸ்வதி எனச் சொல்வதுண்டு. 18. அவர்களின் பிராணனுகையால் (பிராணன்) அவன் அசைந்து (வேனதி) அவைகளிலிருப்பதால் வேனப்பார்கவர், வேணன் என இந்திரனை அழைக்கிறார். 19. ஆதி அனல் (அக்ராஜ—தபம்) விரும்பி (அபிமாத்ய) மாதந்தோறும் அவனை சிருட்டித்ததால் மன்யு தாபஸர் இந்திரனை மன்யு என மொழிகிறார். 20. சீவர்கள் சாகுங்கால் அவனே உயிர்களை (அசூன்) இழுத்துச் செல்லுவதால் சுருநபந்து ஸ்துதியிலே அசுனீதி என இந்திரனைச் சொல்லுகிறார். 21. கோடை முடிவிலே அவர்களின் நடுவே அவன் பிறப்பதால் கிரித்ஸமதர் அபாம்நபதன் அல்லது சலமகன் என இந்திரனைக் கூறுகிறார். 22. அந்தராகாசத்திலுள்ள சலங்களைத் தாங்கி (ஆ—ததத்) அவர்கள் நடுவே கர்ச்சனை செய்வதால் கிரந்ததி ததீகரன் என விளக்கினர். 23. கர்ச்சனை செய்து கொடுத்து (ததாதி) பூமியில் வைத்து ஒன்பதாவது மாதம் சனனக்கிருமி யாவதால் தாத்ரி எனச் சொல்வதுண்டு. 24. விஸ்தீர்ண (ஸ்தீர்ணே) அந்தரட்சத்தில் அவன் வசிக்கிறான், (கிஷ்யதி) அவன் துரிதமாய் நழுவி வீழ்வதால் அரிஷ்டநேமி அவனைத் தர்க்ஷியர் என அழைக்கிறார். 25. வானத்தில் கர்சித்து (ருவன்) சூரியோதயத்திற்குச் சென்று ஆழத்தினின்று (கிருன்தரத்) சலத்தை விடுவதால் ஊர்வசி புரூரவன் என இந்திரன் அழைக்கப்படுகிறான். 26. பெருஞ் சத்தமுடன் இறந்தவனை (மிருதம்) எடுத்துச் செல்லுவதால் இறப்பான அவனை எமனின் கடைசிப் புதல்வன் மிருத்யுவென ஒரு ருஷி அழைக்கிறார்.

(7) சூரியன்: மூன்ருவது அக்னியான சூரியனைப் பற்றி சொல்லுவோம். இவனை வைசுவாநரன் என நாம்முன்னரே சொல்லி யுள்ளோம். சூரியனுக்கு இரு அசுவினி தேவதைகளே முதன்மையான தேவதைகள். விருஷாகபாயி, சூர்யா, உஷை அவன் மனைவிகள். சூரியோதய முன் உஷை. நடுப்பகலிலே சூரியனும், சூர்யாஸ்தம் விருஷாகபாயியாகும். சராண்யு, பகன், பூஷணன், விருஷாகபாயி, எமன், வைசுவாநரன், விஷ்ணு, அஜஏக பாத்து, பூமி, சமுத்திரம், தேவர்கள், சப்தரிஷிகள் அவன் நிலயத்திலுண்டு.

(8) சூரியனின் தேவர்களைச் சொல்லவும்? ஆதித்தியர்கள், கேசினர்கள், சாத்தியர்கள், சவித்ரு, வசுக்கள், மனுதத்தியங்கள், அதர்வன், விசுவேதேவர், குதிரை, முதலியவைகள். அவனிடமுள்ள பொருள்களைச் சொல்லவும்? சுவர்கம், சோமன்பிழிவது, ரைவதசாமன், வைரூப சாமன், மழைகாலம், குளிர்காலம், 33 தேவர்கள், சகதிசந்தஸு அதிசந்தஸு, புருஷ சம்பந்தம், திரிமூர்த்திசம்பந்தம், சந்திரன், வாயு, வருஷம் முதலியவைகள். அவன் வேலையோ? ஈரத்தை பற்றிக்கொள்வதேயாகும்.

சூரியனை அக்னிக்கு எத்தனை பெயர்களுண்டு. அந்நாமங்களைக் காரணங்களுடன் சொல்லவும்?

(9) சூரியனின் பல சோரூபங்கள். சூரியனை அக்னிக்கு ஏழு பெயர்களை இவ் வேதத்தில் காணலாம். அவை:—(1) சவிதுர், (2) பகன், (3) பூஷணன், (4) விஷ்ணு, (5) கேசிகன், (6) விசுவாநரன், (7) விருஷாகபி.

1. இருட்டை அழித்து ஒளியுடன் திவாகரனைத்தூண்டுவதால் (பிரௌஸதி) சவித்ரு எனப்பெயராயிற்று. 2. இவ் வுலகங்களை யெல்லாம் அவன் ஒளியால் பிரகாசிக்கச் செய்வதால் (பாஸயன்) பகன் என

அழைக்கப்படுவான். 3. ஒளியால் இருளை நீக்கி பூமியை உரமுடனுக்க சத்து அளிப்பதால் (பூஷயன்) பாரத்துவாஜர் பூஷணன் என ஐந்து சூக்தங்களில் சொல்லுகிறார். 4. ஒளியை பாத அடிகளாகக் கொண்டு அவன் (திரீணி) உலகங்களையும் பிரகாசிக்கச் செய்வதால் மேதாதிதி மூன்று அடிகளான (திரிவிக்ரமனை) விஷ்ணு எனச் சொல்லுகிறார். எங்கும் வியாப்தமாயுள்ளவன் விஷ்ணு, சூரியனே அனைத்துமாகி ஒவ்வொன்றிலுமிருப்பதால் அவனுக்கே விஷ்ணு எனப் பெயராகும். 5. தங்கி இருள் வந்ததும் நீங்குங்கால் ரோமம் போலுள்ள சுடர்களுடன் மறைவதால் அவனுக்குக் கேசின் எனக் கூறுவது வழக்கம். 6. விசுவத்திலுள்ள நரர்கள் எல்லாம் ஒன்றாகவும் ஒருமையுடனும் அவனைப் புகழ்ச்சி செய்வதால் அவனுக்கு விசுவாநரன் எனச் சொல்வதுண்டு. 7. அவன் சிகப்பான (கபிலம்) காளையாகி (விருஷ) வானத்தி ஏறுவதால் விருஷாகபி எனப்பெயர்.

உலகத்திலே ஒரே ஒரு ஈசுவரனை அக்னியுண்டு. அவன் மூன்றாகி மேற்சொன்னவாறு பல சொரூபங்களுடன் புலனாகிறான் என்பதே ஆதியில் ருக்வேத மறிந்தவர்களின் முடிவு.

இனி ருக்வேத பத்து மண்டலங்களின் சுருக்கத்தைச் சொல்வோம்.

(10) ருக்வேத மண்டலங்கள்—ருக்வேதத்தின் மண்டலங்களிலே முதல் மண்டலமே பெரியதாகும். மண்டலம் என்றால் சக்கரம் எனச் சொல்லலாம். முதல் மண்டலத்திலே 191 சூக்தங்களுண்டு. ஆதியில் இச் சூக்தங்களின் சூட்சமங்களைக் கண்டவர்கள் சுமார் 15 ரிஷிகள். அவைகளில் முதன்மையானவர்கள் குத்ஸர், சுனசேஷபர், கௌதமர், கட்சிவான் முதலியவர்கள். இம்மண்டலத்தில் உபமானாலங்காரமாக பல அற்

புத மொழிகள் சொல்லப்படுகின்றன. சிறந்த சுன க்ஷேபன் கதையை இங்கு காணலாம். இங்குள்ள இந்தி ரன் பசுக்களான மேகக்கோட்டைகளை இடித்து துவம் செய்பவன். சுஷ்ணம் என்னும் அரக்கனைக் கொல் பவன், விருத்திரனை கருமேகங்களை கழிப்பவன். அவனுக்கு ஆயிரம் கண்களான நட்சத்திரங்களுண்டு. அவன் மறையும்சந்திரனை-எலும்புகளை-நட்சத்திரங் களைக் கொண்டு இருட்டான அசுரனை யழிக்கிறான். இந்திரன் என்றால் இங்கு சூரியன். தான் சந்திரனுக்கு அளித்த சோதியை அடைந்து அதை நட்சத்திரங் களுக்கு அளித்து இருட்டை துரத்துகிறான். இது தான் பிற்காலத்தில் ததீசி மகரிஷி கதையாயிற்று. இம்மாதிரியான இந்திரனின் செயல்களோடு சூரிய னின் சக்தி சிறப்புக்களையும் காண்கிறோம். சூரியன் தான் விஷ்ணு எனவும் அவன் மூன்று உலகத்தில் கால்களை வைப்பதால் அவனே திரிவிக்கிரமன் என வும், அவன் காலையில் திடீரென மலையின் பக்கம் பாய்வதால் சிங்கம் போலாவான் எனவும் அவனு லேயே அமாவாசை தோன்றுவதால் அவன் கரியன் எனவும் இம்மண்டலத்தில் அறிவோம். அகஸ்தியர் அறிந்த சில சூக்தங்களும் இம்மண்டலத்திலுண்டு.

11. மண்டலத்தில் சிறியது இரண்டாவதாகும். மொத்தம் சூக்தம் 43. எல்லாம் கிருத்ஸமதர் அறிந் ததே எனக் கூறலாம். மூன்றாவது மண்டலத்தை அதிகமாய் அறிந்தது விசுவாமித்திரர். மொத்த சூக்தம் 62. வாமதேவர் நான்காவதின் எல்லா சூக் தங்களான 58-ம் அறிந்திருந்தார்.

12. அத்திரி முதலியவர்கள் அறிந்தது 87 சூக் தங்களான ஐந்தாவது மண்டலமாகும். பாரத்வாஜர் அறிந்தது 75 சூக்திரங்களான ஆறாவது மண்டலமா கும். வசிஷ்டர் முதலியவர் அறிந்தது 104 சூக்தங்க

ளான ஏழாவது மண்டல மாகும். பிரகாத மெனப்படும் 92 சூக்தங்களுடனுன எட்டாவது மண்டலம் கண்வர் முதலியவர்கள் அறிந்தது. வாலகில்யர்களின் பிரத்யேக சூக்திரங்களும் இம்மண்டலத்தைச் சேர்ந்ததேயாகும். இந்த ஏழு மண்டலங்களிலும் இந்திரன் சூரியன் அக்னி முதலிய பல தேவர்களைப்பற்றியே பற்பல திருஷ்டியினின்று பார்க்கிறோம்.

13. இனி ஒன்பதாவது மண்டலம்—மொத்தம் 114 சூக்தங்களாகும். மதுசந்தஸன் முதலிய ரிஷிகள் இதன் ஞானத்தை அறிந்திருந்தார்கள். இம்மண்டலத்தின் விசேஷம் என்னவெனில் எல்லா சூக்திரங்களும் புனிதமான சோமன் என்னும் தேவரைப் பற்றியதாகும். சோமனின் தந்தை பர்ஜன்யனுகும். இவனைப் பிரஜாபதி எனவும் அழைக்கும். நமக்கு அமுத வாழ்க்கை யளிப்பவன் சோமனே. இந்தச் சோமனை இந்துவான சந்திரன் அணைந்துள்ளான். இந்திரனிடமே சோமன் தன் ரதமுடன் செல்லுவான். அவனுக்கு எல்லா தேவர்களுடன் சம்பந்த முண்டு. இவனே நமக்குப் போரிலே ஜயமளிப்பான். சாதாரணமாய் சந்திரன் எனப்படும் இச்சோமமண்டலத்தின் பெரும் பகுதியினின்றே சாமவேதம் தொகுக்கப்பட்டது.

14. பத்தாவதான கடைசி மண்டலத்தை நோக்குவோம். மொத்தம் சூக்தங்கள் 191. இது ஆப்தியன் முதலியவர்கள் அறிந்த ஞானபண்டாரம். புரூருவன் ஊர்வசி என்பவர்களின் சம்பாஷணைகளையும் எமன் எமிக்கும் நடைபெறும் விசித்திர மொழிகளை இம்மண்டலத்தில் காணலாம். சூரியைக்கு விவாகம் இம்மண்டலத்தில் விளங்கும். இங்குள்ள சில மொழிகளையே விவாக காலத்தில் சொல்லுகிறார்கள். எதிர் கால வாழ்வைப்பற்றி சொல்லும் சில சூக்தங்களின்

ருக்குக்களை அந்தியேஷ்டியில் சொல்லுவார்கள். பத்தாவது மண்டலம் படிப்பதற்கு ருசியாயிருக்கும். சோமனைப்பற்றியும் இம்மண்டலத்தில் காணலாம்.

**15.** இனி ருக்வேதத்திலுள்ள சில சூக்தங்களைச் சொல்லுவோம். இச்சூக்தங்களைப் படிக்குங்கால் தேவர்கள் என்னு மொழியையும், வாக்கு, உணவு, மருத்து, விசுவேதேவர் முதலியவைகளை யெல்லாம் ஆரோபம் செய்யப்பட்ட நாமங்கள் என ஞாபகம் செய்துகொள்ள வேண்டும். துதி செய்வது என்பது அவர்களை நாடி பயன் செய்து கொள்வதைத் தவிர வேறு இல்லை யென்பதையும் கவனிக்கவேண்டும்:—

**16.** வாக்குசூக்தம்—பிரஹஸ்பதியானவர் பொருள்களுக்குப் பெயரை யளிக்குங்கால் வாக்கையே முதன் முதலாய் அனுப்புவித்தார். அவைகளின் அன்பால் மறைந்திருந்த மேன்மையான புதையல்கள் எல்லாம் புலனாயிற்று. சல்லடையால் சுத்தஞ் செய்வதுபோல் மனத்தால் வாக்கை செய்தார்கள். நண்பர்கள் நட்பின் சின்னங்களை வாக்கில் காண்பார்கள். அவர்கள் மொழியில் மங்களமும் ஸ்ரீலட்சமியுமுண்டு. யக்ஞத்தால் வாக்கின் மூலத்தை நாடி ருஷிகள் அகத்தில் இருப்பதாக அறிந்தார்கள். அதை அழைத்துவந்து எங்கும் வியாப்தஞ் செய்ததும் ஏழு புலவர்கள் அவள் துவனியை எதிரொலி செய்தார்கள். ஒருவன் வாக்கை பார்த்தும் பார்ப்பதே இல்லை, செவியிருந்தும் அவளைச் செவியுறுவதே இல்லை, தன் சுந்தர ஆடைகளுடனை ஒரு சுந்தரி தன் அழகை புலனாக்குவதுபோல், அவள், வாக்கு ஒருவனுக்கு தன் அழகை மின்னச் செய்வாள். வாக்கு சூன்யனுக்கு மந்த புத்தி; நட்பிற்கு லாயக்கில்லை; ஒருவனும் வீரச் செயல்களுக்கு அவனைத் தூண்டுவதில்லை. குருடன்போல் மாயையிலே அவன் சுற்றித்

திரிகிருன். அவன் செவியிலும் மொழிகளுக்கு மல ரில்லே, பழமும் இல்லே. நட்பின் நேர்மையை அறிந்த நண்பனே நீக்குபவன் வாக்கின் ஒரு பாகத்தையு மறிவ தில்லே. அவன் செவியுற்றும் பயனில்லே. சுகிருத வழியையும் அவன் அறியான். கண் காதில் அனே வரும் சமமாயிருந்தாலும் கருத்தின் துரிதத்திலே பல வேற்றுமைகள் உண்டு. சிலர் கழுத்து வரை வரும் சலமுடனுன குளங்கள். வேறு சிலர் குளிப் பதற்கு உதவும் சிறு நீர் தேக்கங்களாகும். இருதயத் தால் வடிவமடைந்த மனேமுயற்சியுள்ள பல பிரா மணர்கள் யக்ஞம் செய்யுங்கால் யோக்கியதையற்ற ஒருவன் கீழே சென்று விடுவான். மற்ருெருவன் வேறு இடம் சுற்றுவான். முன்னும் பின்னும் செல் லாமல் புத்தி பிரிந்து, யக்ஞமறியாமல் சிலர், நூல் நூற்கும் கன்னிக் கிழவிகளேப்போல் வாக்கை வீணுன வழியில் அறிவார்கள். சபையில் ஜயித்து வருபவனே அனேவரும் நல்வரவும் கூறுவார்கள். அவன் நமது கண்ணியம் காத்து, உணவு அளித்து வீரச்செயலுக் குக் காரணமாவான். ஒருவன் ருக்குக்களேச்சொல்வான். மற்ருெருவன் சாமகானம் செய்வான். மூன்ருவது புருஷன் பிரமத்தை யறிவித்தால் நான்காவது அறி ஞன் யக்ஞ வழியை சொல்லுவான். (10. 71.)

17. வாக்கின்வாணி:—நான் ருத்திரன். வசுக்கள் ஆதித்யர்கள் விசுவேதேவர்களோடு சுற்றுகிறேன். வருணன், மித்ரன், இந்திரன், அக்னி, அசுவினிகளேத் தாங்குகிறேன். சோமன், துவஷ்டா பூஷனன், பகனே நான் மதித்து ஆதரவளிக்கிறேன். யக்ஞஞ் செய் பவனுக்கு ஐசுவரியமளிப்பவன் நான். நான் இராணி. பொருளே சேகரிப்பவள். பெரும் புத்தியுண்டு. உபா சிக்கத்தகுந்தவனில் முதல் ஸ்தானி. இப்படி தேவர் கள் எனக்கு எங்கும் நிலே அளித்து பல வீடுகளேயும் நிலயங்களேயும் எனக்கு அளித்துள்ளார்கள். உண

வைப் புசிப்பதெல்லாம் என்னாலாகும். காண்பது, கேட்பது, சுவாசிப்பது எல்லாம் என்னால். என்னை ஒருவரும் அறிவதில்லை. ஆனால் என்னருகிலேயே அவர்களிருக்கிறார்கள். நான் வந்தால், மொழி தோன்றினால், தேவர்களும் மனிதர்களும் எனக்கு நல்வரவு கூறுகிறார்கள். நான் அதிகமாய் விரும்புபவனை பலமுள்ளவனாகவோ, பெரிய புத்தியுள்ளவனாகவோ, ருஷியாகவோ, பிராமணனாகவோ, செய்வேன். பக்தியின்பகைவனைக் கொல்லும் ருத்திரனின் வில்லை வளைப்பவன் நானே. சனங்களை எழுச்சியாக்கி யுத்தஞ் செய்யச் சொல்லுபவன் நானே: வானம் நிலமெங்கும் நுழைந்துள்ளேன். நிலத்தின் உச்சியிலே பிதுருக்களை அழைத்து வருவேன். சலமும் சமுத்திரமும் என்வீடுகள். எல்லா சீவப் பிராணிகளிலும் நான் நுழைந்துள்ளேன். என் நெற்றியால் சுவர்கத்தையும் நான் பரிசிக்கிறேன். புசல் பெருங் காற்றைப் போல் நான் பலமான மூச்சு விடுவேன். அனைத்தையும் இணைத்து வைப்பது நான்தான். பூமி வானத்திற் கப்பாலும் பெரியவன் நானே. (10. 125.)

18. மருத்து சூத்தம்—மதுரமான கானங்களுடன் கூரிய ஈட்டி தாங்கி உங்கள் துரித பறக்கும் குதிரைகளுடனான இரதத்திலே இங்கு வரவும். பட்சிகளைப் போல் பெருமையான உணவை இங்கு கொண்டு வரவும். புகழுக்காக சிவந்த குதிரைகளில் அவன் வருவான். இடிமுழக்கம் தரிப்பவனான அவன் பொன்னைப்போல் மின்னுகிறான். இரதசக்கிரத்தால் நிலத்தைச் சதிப்பவனே: சுந்தரவடிவத்திற்கு கத்தி தரித்தவனே! வனத்தை அலறச் செய்வதுபோல் என் மனத்தை எழுச்சியாக்கவும். (1-89)

19. உணவு சூக்தம் :—பெரும்பலத்தை அளிக்கும் உணவை நான் புகழ்ச்சி செய்கிறேன். அதன் சக்தி

யால் திருதன் விருத்திரனை துண்டு துண்டாய் வெட்டி ஞன். ருசியும் தேனுமான உணவே உன்னை எங் களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டேன். எம்மை பாதுகாப்பவன் நீயே. சௌம்யமாய் மங்களமாய் உதவி செய்ய எங்களிடம் வரவும். நீ சுகத்தை அளிப் பவன். பட்சமுள்ளவன். கபடமில்லாத அருமைத் தோழன். எல்லாதிசைகளிலும் உன் ரசம் நிறைந் துள்ளது. வானத்திலும் காற்றைப்போல் உனக்கு ஸ்தானமுண்டு. சுவாதிஷ்டமான உணவே! உன் இரசம் பலமுள்ள சீவப்பிராணியைப் போல் வேலை செய்யும். உணவே! தேவர்களின் சிந்தனைகள் உன் னிடமே தோய்ந்துள்ளன. உன் கொடியின் கீழ் பெரிய வீரச் செயல்கள் செய்யப்படுகின்றன. உன் உதவியால் அரக்கன் அழிக்கப்பட்டான். நீ மேகங் களிடம் சென்ற போதிலும் பக்குவமாகி எங்களுக்கு சந்தோஷமளிக்க வருகிருய். சலம் செடியிலுள்ள உணவின் சக்தியை சோமனே! நீ பெருக்கவும். பாலி லும் சத்திலும் நாங்கள் அனுபவிக்கும் சோமனை வாதாபியே! நீ வளரச் செய்யவும். உணவே நீ சத் தும் சக்தியும் நிறைந்து அதனுல் நாங்கள் பலமுடை ஞக வேண்டும். 10. 187.

20. சிருட்டி சூக்தம் :—ஆதியில் சத்துமில்லை. அசத்துமில்லை. காற்றில்லை. அதற்கப்பால் பாமு மில்லை. ஆதரவளித்தவர் யார்? எங்கே? ஆதரவளித் தது எது? சலமிருந்ததா? ஆழமான நீரில்லை. மிருத்யுவில்லை; அமிருதனையும் காணேம். இரவு பகலைப் பிரிக்கும் சின்னமுமில்லை. ஒரு பொருளிருந் தது. மூச்சில்லை. ஆனுல் தன் சுபாவத்தில் சுவா சித்தது. அதற்குப் பெரியவன் எவனுமில்லை. இருள் மயம் எங்கும்; இதில் அனைத்தும் கலேவரமாய் மறைந்திருந்தது. ஆகாசமொன்றே யுண்டு; வடிவம் என்பதே இல்லை. தபஸின் திடத்தினுல் ஒருவன்

பிறந்தான். அப்பால் காமன் என்னும் விருப்பமே தோன்றினன். அவனே ஆதிமூலம், மனம் என்பதற்கு ஆதிகாரணமானன். இருதயத்திலுள்ளவைகளைத்தேடி சத்திற்கும் அசத்திற்குமுள்ள சம்பந்தத்தை ருஷிகள் கண்டுபிடித்தார்கள். பிரிக்கும் இரேகை குறுக்காய் இரண்டாக்கும். மேலே என்ன? கீழே என்ன? பிதுருக்களான உற்பத்தி செய்பவர்களுண்டு. சுதந்திர செயலும் அங்கு சக்தியுமுண்டு. எப்படிப் பிறந்தன? எங்கு தோன்றிற்று என யாரால் சொல்ல முடியும்? அவனே அறிவான். உலகங்களுக்கு அப்பால் தான் தேவர்கள். எப்படி சிருட்டி என்பதை எவன் அறிவான்? அவன்தான் சிருட்டி செய்தானு, இல்லையா? இவ்வுலகத்தைக் காண்பவனே அறிவான். ஒரு வேளை அவனுமறியான். **10. 129.**

**21.** விசுவே தேவ சூக்தம் :—அக்னியே உன்னல் சண்டையில் நாங்கள் ஜயமடையவேண்டும். உன்னை உதயமாக்கி நாங்கள் ஆதரவுடனுகவேண்டும். உன்னைத் தலைவனுய்க்கொண்டு போரில் ஜயித்து நான்கு திசைகளையும் வணங்கச் செய்து எனக்கு நமஸ்கரிக்கச் செய்யவும். இந்திரன் விஷ்ணு அக்னியோடு மருத்துக்களோடு தேவர்கள் என் பக்கம் இருக்கவேண்டும். நடு வானத்தையும் எனக்குச் சொந்தமாக்கவும்; காற்றும் எனக்கு அனுகூலமாகவேண்டும். எனக்கு ஐசுவரியம் வேண்டும். சண்டைக்காக என்னைச் சுற்றி சிறந்த வீரர்கள் வேண்டும். என் சங்கல்பம் நிறைய வேண்டும். நான் குற்றஞ் செய்யலாகாது. எல்லா தேவர்களும் என்னை ஆசீர்வதிக்கவும். எல்லா திசைகளாலும் நான் சுதந்திரமாக வேண்டும். எங்களால் சத்துருவிற்குச் சகாயங்கூடாது. சோமனே! அக்னியே! என் சத்துருக்களின் கோபமெல்லா மொழிய வேண்டும். இந்திரனே மற்றவர்களுக்கு உணவாக என்னை அளிக்கவேண்டாம். வசு, ஆதித்தியர் ருத்

திரர்கள் என்னை வன்மையுடன் விளக்கி, சிந்தனை யுடன் தலைவனுய் செய்வதால் இந்திரன் அக்னியின் பலத்தால் சத்துருக்களை ஒழிப்பேன்.

**22. சுவஸ்தி ருக்குக்கள்** :—சு வ ஸ் தி வசனங்கள் என்றால் மங்கள மொழிகள் எனச் சொல்வது. வேதத்தில் சுவஸ்தி என்னும் மொழிவரும் மந்திரங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து விவாக முதலிய சுபகாலங்களில் சொல்வார்கள். சில சுவஸ்தி மந்திரங்களுடன் உரைகளைச் சொல்வோம்.

1. *ஸ ந : பிதேவ சூனவே அக்னே ஸூபாயனே பவ. ஸசஸ்வான : சுவஸ்தயே.* 1. 1. 9.

2. *சுவஸ்திநோ மிமீதாமசிவினபக : சுவஸ்தி தேவ்யாதி திரநர்வண : சுவஸ்திபூஷா அசுரோ ததாதுந : சுவஸ்தி தியாவா பிரதிவீ சுசேதுன.* 5. 51. 11.

3. *சுவஸ்தயே வாயு முப ப்ரவாமஹை சோமம் சுவஸ்தி புவனஸ்ய யஸ்பதி : பிரஹஸ்பதிம் சர்வகணம் சுவஸ்தயே சுவஸ்தய ஆதித்யாஸோ பவன்துந :* 5. 51. 12.

4. *விசுவேதேவாநோ அத்யா சுவஸ்தயே வைசுவா நரோ வசுரக்னி : சுவஸ்தயே. தேவா அவன்த் விருபவ : சுவஸ்தயே சுவஸ்திநோ ருத்திர : பாத்வம் ஹஸ :* 5. 51. 13.

5. *சுவஸ்தி மித்ரா வருணா சுவஸ்தி பத்யே ரேவதி, சுவஸ்தின இந்திர ஸ்சாக்னிஸ்ச சுவஸ்திநோ அதிதே கிருதி.* 5. 51. 14.

6. *சுவஸ்தி பன்தா மனுசரேமா, சூர்யா சந்திரமஸாவிவ. புனர் தததாக்னதா ஜானதா சங்கமேமஹி.* 5. 51. 15.

7. *யே தேவானும் யக்ஞியா யஞியானும் மனோர் யஜத்ரா அமிருதா ருதஞ்ஞா : தேநோ ராசன்தா முருகாய மத்ய யூயம் பாத சுவஸ்திபி : ஸதா ந :* 7. 35-15.

8. *யேப்யோ மாதா மதுமத்பின்வதே பய : பீயூஷம் தியௌ ரதிதி ரத்ரி வர்ஹா : உக்தசுஷ்மான் விருஷபரான்த் ஸ்வப்ன ஸஸ்தாம் ஆதித்யாம் அனுமதா சுவஸ்தயே.* 10. 63. 3.

9. *நிருசக்ஷஸோ அனிமிஷன்தோ அர்ஹணா பிருஹத் தேவாஸோ அமிருதத்வமானசு : ஜ்யோதீரதா அஹிமாயா அனாகஸ: திவ : வர்ஷ்மாணம் வஸதே சுவஸ்தயே.* 10. 63. 4.

23. (1) அக்னியே! தந்தை மகனிடம் போல் நீ சுப பதார்த்தங்களை நாங்கள் மங்களமுடனுவதற்கு யளிக்கவும். (2) பகனும் அசுவினிகளும் ஒருவராலும் அசைக்க முடியாத அதிதியும் ஐசுவரியத்தையும் ஆரோக்யத்தையுமளிக்கட்டும். மேகமும் பூஷணமும் மேன்மையையும், விக்ஞானமயமான பூமியும் வானமும் பெருமையையளிக்கட்டும். (3) நான் ஓங்கி விளங்க வாயுவை நாடுகிறேன். புவனத்தின் பதியான சோமனை புகழ்ச்சிக்காக தேடுகிறேன். சர்வ கணங்களுடன் பிரஹஸ்பதி பெருமையையும் அதிதி ஆரோக்கியம் ஐசுவரியத்தையு மளிக்கட்டும். (4) விசுவே தேவர்கள் வைசுவாநரன் வசுரக்னி இன்று மங்களத்தை அளிக்க எங்களுடனிருக்கட்டும். புனித புருஷர்களே! ரிபுக்களே! எங்களைக்காக்கவும். ருத்திரர்கள் துக்கத்திலிருந்து எங்களை நீக்கட்டும். (5) மித்ரன் வருணனே எங்களுக்கு மங்களமளிக்கவும்; பொருளுடனுன பாத்யனே பொன் பொருளை யளிக்கவும். அதிதியே! இந்திரனே! அக்னியே நாங்கள் மேலோங்க வேண்டும். (6) சூரிய சந்திரனைப்போல் நாங்கள் சுகமானவழியில் செல்லவேண்டும். தானஞ் செய்து தூயசெயல் செய்பவனின் துணையே எனக்கு வேண்டும். (7) நாடத்தகுந்த அமிருதம், சத்தியம். சிறந்த ஞானிகளே! எங்களுக்கு விசாலமான வழியை விளக்கவும். எப்பொழுதும் சுவஸ்தியாய் அதாவது எங்களைச் செம்மையாய்ச் செய்யவும். (8) மதுரமான சலத்தை தன் தாயினுல் அடையும் ஆதித்யர்களில் நான் ஆனந்தமாகிறேன். கல்லுபோலுள்ள வானம் கனிந்த அமுதம் நிறைந்தது. மழை நீரால் மேன்மையை யடைந்து சுபகாரியமுயற்சிகளுடனுன தேவர்களை அடைந்துள்ளது. அதனுல் எனக்கு நன்மை வேண்டும். (9) முயற்சியுள்ளவர்களைக்கண்டு சோம்பல் நீங்கி பெருங்குணங்களுடனுன பெரியார்கள் அமிரு

தத்தை அடைந்துள்ளார்கள். அவர்களை சோதி ரதத்தில் ஏற்றி பாவம் நீக்கி பாம்புபோலான புத்தியால் அவர்களை எங்கள் நன்மைக்கு அலங்காரஞ் செய்கிருர்கள்.

24. *சுவஸ்தி மந்திரங்களைப்போல் சன்னோ மந்திரங்கள் என சில வேதமந்திரங்களை ஒன்று சேர்த்து எல்லா மங்களச் செயல்களுக்கும் சொல்வது வழக்கம். இதை சாந்தி மந்திரங்கள் எனவும் சொல்லுவார்கள். சில மந்திரங்களைக்கூறி அதன் உரைகளையும் சொல்லுவோம்.

1. சன்ன இந்திராக்னி பவதாமவோபி: சன்ன இந்திரா வருணாரத ஹவ்யா, சமிந்திரா சோமா ஸுவிதாய சம்யோ: சன்ன இந்திரா பூஷணு வாஜஸாதௌ. 7. 35. 1.

2. சன்னோபக: சமுன: சம்ஸ: அஸ்து சன்ன: புரந்தி: சமுசந்து ராய: சன்ன: சத்யஸ்ய சுயமஸ்ய சம்ஸ: சன்னோ அர்யமா புருஜாதோ அஸ்து. 7. 35. 2.

3. சன்னோ தாதா சமுர்த்தானோ அஸ்து சன்ன உருசி பவது சுவதாபி: சம் ரோதஸி பிருஹதி சன்னோ அத்ரி: சன்னோ தேவாணும் சுஹிவானி சந்து. 7. 35. 3.

4. சன்னோ அக்னிர் ஜ்யோதிரனீகோ அஸ்து சன்னோ மித்ரா வருணுவசுவினு சம், சன்ன: சுகிருதாம் சுகிருதானி சந்து சன்ன இஷிரோ அபிவாது வாத: 7. 35. 4.

1. ஆகுதி பெற்றுக்கொள்ளும் இந்திரன் வருணனே! இந்திரன் அக்னியோடு எங்களுக்கு உதவி செய்யவும். இந்திரன் சோமன் பலம் சுகத்தையும், இந்திரன் பூஷணன் போரில் துணையையும் யளிக்கட்டும். 2. பகனும் சம்ஸனும் சிறந்த சிநேகிதனுகட்டும். புரந்தியும் பொன்னும் எனக்குப் பெருமையை யளிக்கட்டும். அர்யமானின் அருங்குணங்களோடு சத்தியவான் சத்திய சீலர்களின் மங்களமும் அவசியம். 3. கர்த்தாவும் காப்பாற்றுபவனும் எங்களுக்கு நன்மை

யுடனுகட்டும். ஈசுவர சுபாவமுள்ள இரண்டான, வானமும் பூமியும் மலையும் சுகஞ் செய்வதாகட்டும். 4. வருணன், மித்ரன், அசுவினி அக்னியே சோதி முகமுடன் எங்களுக்குக் கருணைபுரியவும். சிறந்தவர்களைப்போல் சிறந்த செயல்களைச் செய்யத், தூண்டவும். காற்றே கருணையுடன் வீசவும்.

# 17. யஜுர் வேதம்

इषे त्वोर्ज्जे त्वा वायवस्थ देवो वः सविता प्रार्पयतु श्रेष्ठतमाय कर्मण आप्यायध्वमघ्न्या इन्द्राय भागं प्रजावतीरनमीवा अयक्ष्मा मा वस्तेन ईशत माघशँसो ध्रुवा अस्मिन् गोपतौ स्यात् बह्वीर्यजमानस्य पशून् पाहि

யஜு. 1. 1.

*இஷேதேவர் ஜேத்வா வாயவஸ்த தேவோவ: ஸவிதா பிரார்பயது சிரேஷ்டதமாய கர்மண ஆப்யாயத்வ மக்ன்யா இந்திராய பாகம் பிரஜாவதீரனமீவ அயக்ஷ்மாவஸ்தேன ஈசதமாகசப்ஸோ துருவா அஸ்மின் கோபதௌ ஸ்யாத் பர்ஹீர் யஜமானஸ்ய பஸூன்பாஹி.*

உணவிற்கும் உத்தம பலத்திற்கும் உன்னை நாடுகிறோம். "நீங்கள் வாயுவைப்போல் வன்மையுள்ளவர்களாக சிரேஷ்டமான செயல்களுக்கு நீங்கள் சவிதாவால் தூண்டப்படுவீர்கள்." எவனாலும் இம்சிக்க முடியாத நீங்கள் ஐசுவரியத்திற்குப் பொருள்களைச் சேர்க்கவும். நோய் நோவுகளினின்று நீங்கி ஒரு பொழுதும் உங்கள் பசு, கூட்டங்களை கள்ளனும் கெட்டெண்ணமுள்ளவனும் ஆட்சி செய்யலாகாது. ஈசனின் பிரஜைகளை நிலையாயிருந்து காப்பாற்றுவது உங்கள் கடமையாகும்.

1. தத்வமஸி என்னும் தத்துவங்களை அறிந்து கொள்ள உதவியளிக்கும் நூலோ யஜுர் வேதமென நவீன வேதாந்திகள் சொல்வார்கள். ருக்குசாமன்

என்னும் சித்திரம் எழுதப்பட்ட சுவரே யஜுர்வேதம் எனப்படும் என சில ரிஷிகள் கூறுவது வழக்கம். யாகாதிகளைப்பற்றி இந்நூல் அதிகமாயுரைக்கும். வீர்யுவிலேயுள்ள அக்னியின் இரகசியத்தை இந்நூல் அதிகமாயுரைக்கும். ருக்வேதத்தின் அநேக ருக்குக்களை இந் நூலில் காணலாம்.

2. கிருஷ்ண யஜுர் வேதம் சுக்கில யஜுர் வேதம் என இரண்டு உண்டு. கிருஷ்ணயஜுர் வேதத்திலே ஏழு காண்டங்கள், 44 பிரபாடகங்கள் அல்லது பிரசினங்கள். அவை 651 அனுவாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மொத்த கண்டிகை 2198. சுக்கில யஜுர்வேதம் 40 அத்தியாங்களாக பிரிக்கப்பட்டு 303 அனுவாகங்களாய் 1975 கண்டிகை கொண்டது. 50 மொழிகள் கொண்டது ஒருகண்டிகை.

இனி இவ்வேதத்தி லுள்ளவைகளை நோக்குவோம்.

கிருஷ்ண யஜுர்வேதம்:—காண்டம் 1. பருவயக்ஞம், சோமயாகம், அக்னி சோமாகுதி, சோமாக்னி பலி, நெருப்பை மறுபடியும் மூட்டுதல், யஜமானன் செயல், யக்ஞகர்த்தா கடமை, இராஜசூய யாகம். காண்டம் 2. பசு யக்ஞம், தனியக்ஞங்கள், பட்ச யக்ஞங்கள். காண்டம் 3. சோமயாக தொடர்ச்சி தனியக்ஞங்கள், இன்னம் பல யக்ஞங்கள். காண்டம் 4. நெருப்பு வைத்தல், நிலம் தயார் செய்தல், ஐந்தடுக்குச் செங்கல்கள், நெருப்பை மூட்டுவது, நெருப்பை எரியச் செய்வது. காண்டம் 5. சட்டியில் நெருப்பை வைத்தல், நெருப்பிற்கு நிலம் தயாராக்குவது, செங்கல்கள், நெருப்பு மூட்டல், பலிவிஷயம் நெருப்பு மூட்டுவது. காண்டம் 6. சோமயாக விளக்கம், பலி விஷயம், இந்திரன் முதலிய கிண்ணங்கள், தட்சிணை முதலியவைகள். காண்டம் 7. சோமயாக விளக்கம், அசுவமேதம், அசுவமேத விருதம் முதலியவைகள்.

சாயன பாஷ்யத்தை அநுசரித்து இவ் வடக்கம் எழுதப்பட்டது. தென்னாட்டிலே இவ் வேத அடக்கத்தை அநுசரிப்பவர்கள் அதிகம்.

ருத்திரம்—இவ்வடக்கத்தில் ருத்திரம் என 16-வது அத்தியாயத்தில் சுமார் 66 மந்திரங்களுண்டு. இம் மந்திரங்களைச் சொல்லி சிவலிங்கத்திற்கு சாமான்யர்கள் அபிஷேகஞ் செய்வார்கள்.

5. உனக்கு நான் நமஸ்காரம் என அடிக்கடி இம்மந்திரங்களில் காணலாம். ருத்திரனுக்குக் கோபமதிகம். கையிலே வில்லும் அம்புமுண்டு. ஔஷத கலசமும் காட்சியாகும். எல்லாசெடிகொடி கணங்களின் தலைவனாகும். புவியிலுள்ள எல்லா நன்மை புன்மைகளுக்கும் அவனே தலைவன். அவன் சபாப்தி, சேனாதிபதி. எல்லாத்தொழில்களின் தலைவன். அவன் நிஷதன், தீண்டாதவன், நாய்களின் நாயகன். அவன் கோரன், கொலைக்காரன். அவன் செடி கொடி பசு பட்சி மிருகங்களில் உள்ளான். புவியிலே ஆயிரக் கணக்கான ருத்திரர்களுண்டு. வானத்திலுள்ள ருத்திரனுக்கு மழையே அம்பாகும். புவியிலுள்ள ருத்திரனுக்கு உணவே அம்பாகும். இந்த குணங்களுள்ள ருத்திரனின் சம்பந்தமான முதல் மந்திரத்தையும் எல்லா மந்திரங்களின் உரையையும் இங்கு எழுதுவோம்.

ஓம் நமஸ்தே ருத்ர மன்யவ உதோத இஷவே நம: பாஹுப்யாம் உததே நம:

ருத்திரனே! உன் கோபத்திற்கு நமஸ்காரம். உன் சரகாண்டத்திற்கும் இரு புஜங்களுக்கும் வணக்கம்.(1) சௌம்யமாய் அகோரமாய் அன்புடன் காணும் ருத்திரனே! இச் சாந்த வடிவத்தால் மலை சுற்றுபவனே! எங்களைப் பார்க்கவும். (2) மலை ஓடியே கையிலுள்ள சரத்தை சிவமாய், மங்களமாய், செய்யவும். புருஷனுக்கும் பிராணிக்கும் ஹிம்சை செய்யாதே. (3) மலையில் வசிப்பவனே! மங்கள

மொழிகளில் நாங்கள் எல்லாரும் சவுக்கியமாகவும் சுகசிந்தனையுடனிருக்க உன்னை மரியாதை செய்கிறோம். (4) நியாயம் பேசி எங்களைக் காத்த முதல் வைத்தியனே! சர்ப்பங்களை அழித்து எல்லா யாதுதானிகளையும் கீழே துரத்தவும். (5)

தாமிரமாய், சிவந்துள்ள உன்னைச் சுற்றியுள்ள திசைகளில் நிலையாயிருக்கும் ஆயிர கோப கணங்களின் ஆத்திரங்களை நாம் விரும்பவில்லை. (6) நீலக்கழுத்தும் சிவந்த நிறமுடன் சரிந்துசெல்லுபவனும், கோபர்களும் நீர் எடுக்கும் கோபிகளும் கண்ட அவன் எங்களுடன் அன்புடனாகட்டும். (7) நீலக்கிரீவனுக்கும் ஆயிரம் கண்களுள்ளவனுக்கும், தாராளமாயுள்ளவனுக்கும் அவன் மனோ புருஷர்களுக்கும் நமஸ்காரம். (8) இருபக்கங்களும் முடிந்துள்ள வில் கயிற்றை விலக்கவும். பகவானே! கையிலுள்ள அம்பை எறிந்துவிடவும். கபர்தினியின் வில் கயிறன்னியிலிருக்கட்டும். அவுன் சரக்கூட்டில் கூறிய அம்புமில்லை. சரக்கண்டத்தை யொழித்த அவன், உறையிலே கத்தியுமில்லை. (10)

தீமைசெய்யமுடியாத சரமில்லாத உன் கைவில்லோடு எங்களை எல்லாப்பக்கங்களிலும் காப்பாற்றவும். (11) உன் அம்புகளைச் சிதற அடித்து சரக்கூண்டையும் எங்களிடமிருந்து தூரமான நிலயத்தில் வைக்கவும். (12) நூறு கண்களும் நூறு சரக்கூடுகள்நிறைந்து வில் வளைக்காதவனே! அம்பின் கூர்மைநீக்கி எங்களுடன்பட்சமாகவும் பிரியமாகவுமிருக்கவும். (13) கயிறற்ற உன் கொடும் ஆயுதத்திற்கும் உன் இருபுஜங்களுக்கும் வில்லிற்கும் நமஸ்காரம். (14) பெரியவன், சிறியவன், வளரும் இளைஞன், வளர்ந்த மனிதன்—எவருக்கும் தீங்கு செய்யாதே. தந்தையையும் தாயையும் கொல்லாதே. எங்கள் தேகத்திற்கு ருத்திரனே! தீங்கு செய்யாதே. (15) எங்கள் சுக்கிலத்திலும் சந்ததியிலும் தீமை செய்யாதே; எங்கள் சீவர்,பசுக்கள், குதிரைகளிலும் கெடுதல் செய்யாதே. உன்கோபத்திலே என் வீரர்களை அழிக்காதே. உனக்கே எப்பொழுதும் வணக்கம். (16) பொன்கையுள்ள சேனைத்தலைவன், திசை பதி பசுஞ் சுருளானமரங்கள், மிருகங்களின் தலைவனுக்கு நமஸ்காரம். பசும்புல்போல் மின்னி வழிகளின் தலைவனாய் யக்ஞோபவீதத்துடன் பொன் ரோமமுள்ளவனே உனக்கு நமஸ்காரம். (17) உணவின் தலைவனாய், சிவந்து குத்துபவனாய் பல ஆயுதம்தரித்தவனே. சகத்தின் பதியே, உனக்கு நமஸ்காரம். பாதகனே, க்ஷேத்திரபதியே, தீமை செய்யாத சாரதியே, வனத்தின்பதியே, உனக்கு நமஸ்காரம். (18) சிவந்த சிற்பியே, விருக்ஷ

பதியே, வையகம் விரிப்பவனே, சிகித்சைசெய்பவனே, ஓஷதிபதி, மந்திரி வைசியன் புதர்தலைவனான பகைவனுக்கு துக்கமளிக்கும் உயர்ந்த கோஷமுள்ள பாதவீரத்தலைவனுக்கு நமஸ்காரம். (19) முழு வேகம்ஓடுபவன் மனோ மன்னனாய் ஜயிப்பவனுக்கு எதிர்க்கும் கணத் தலைவனுக்கு பெரியகத்தியுள்ளவனுக்கு * திருடர்களின் தலைவனுக்கும் நழுவும் கொள்ளைக்காரனுக்கு நாடோடிக்கி அரண்யபதிக்கு நமஸ்காரம். (20)

வஞ்சிப்பவனுக்கு, வஞ்சக சிகாமணிக்கு, கள்ளத்தலைவனுக்கு, கத்தி, சர முள்ளவனுக்கு, கொள்ளையர்பதியனுக்கு, கிருஹ கைமோசக்காரனுக்கு, கள்வர்தலைவனுக்கு, நிசி சுற்றுபவனுக்கு, பகல் கொள்ளைத்தலைவனுக்கு நமஸ்காரம். (21) தலை கவசத்துடன் மலைசுற்றுபவனுக்கு, நிலம் அபகரிப்பவனுக்கு, வில்லும் அம்புமுள்ளவனுக்கு, வளைந்த வில்லுள்ளவனுக்கு, வில்லைச்சரியாக்கி வளைத்து அம்பு எறிபவனுக்கு நமஸ்காரம். (22) விடுபவனுக்கு, குத்துபவனுக்கு, உறங்குபவனுக்கு, எழுபவனுக்கு, படுப்பவனுக்கு, உட்காருபவனுக்கு, நிற்பவனுக்கு, ஓடுபவனுக்கு நமஸ்காரம். (23) சபைக்கு, சபாபதிக்கு, குதிரை, குதிரைத் தலைவனுக்கு, காயஞ்செய்து குத்தும் கணங்களுக்கும் அழிக்கும் அமிருதகணங்களுக்கும் நமஸ்காரம். (24) கணங்களுக்கும், கணபதிகளுக்கும், தீண்டாதவர்களுக்கும், தீண்டாத தலைவர்களுக்கும், கருக்குள்ளவர்களுக்கும், கருங்குள்ளத் தலைவர்களுக்கும், விரூபர்களுக்கும், விசுவரூபிகளுக்கும் நமஸ்காரம். (25) சேனைகளுக்கும் சேனாபதிகளுக்கும், ரதஞ்செல்லுபவர்களுக்கும், செல்லாதவர்களுக்கும், சாரதிகளுக்கும், குதிரை யோட்டிகளுக்கும், பெரியவனும் சிறியவனுமான உனக்கு நமஸ்காரம். (26) தச்சர்களுக்கும் தேர் செய்பவர்களுக்கும், குயவர்களுக்கும் கருமார்களுக்கும் நிஷதர்களுக்கும், புஞ்சிஷ்டர்களுக்கும் நாயாடிகளுக்கும், வேடர்களுக்கும் நமஸ்காரம். (27) நாய்களுக்கும், நாய்தலைவர்களுக்கும், பவன், ருத்திரன், சர்வன், பசுபதி, நீலக்கிரீவன், சிதிகண்டனுக்கு நமஸ்காரம். (28) சடையுள்ளவனுக்கு, ரோமம் நீங்கியவனுக்கு, ஆயிரங் கண்ணுள்ளவனுக்கு, நூறு வில்லுள்ளவனுக்கு நமஸ்காரம். மலையோடி, சிபிவிஷ்டன், உதாரன், அன்புதரித்தவனுக்கு நமஸ்காரம். (29) சின்

* ஒரு நாட்டில் திருடன் முதலியவர்கள் தோன்றுவது சமூகத்திலுள்ள சீரழிவைக் காண்பிக்கும், அவர்கள் தோன்றுவதை எச்சரிக்கையாய் கொண்டு சமூகத்தை திருத்தவேண்டும். அந்த எச்சரிக்கையான ஈசுவரனை ருத்திர சந்தேசாமன அறியவேண்டும்.

னவன், குள்ளவனுக்கு, பெரியவனுக்கு, வளர்ந்தவனுக்கு, பூர்ணமாக வளர்ந்து வளர்பவனுக்கு, ஆதிக்கு முதல்வனுக்கு நமஸ்காரம். (30)

துரிதனுக்கு, முயற்சியுள்ளவனுக்கு, சீக்கிரனுக்கு, சீக்கிரமாய்ச் செல்லுபவனுக்கு, அலைகளில் வசிப்பவனுக்கு, குளங்களிலிருப்பவனுக்கு, நதியிலும் தீவிலு மிருப்பவனுக்கு நமஸ்காரம். (31) ஜ்யேஷ்டனுக்கு, கனிஷ்டனுக்கு, பூர்வனுக்கு, அபரனுக்கு, மத்யமனுக்கு, பக்குவமாகாதவனுக்கு, தாழ்ந்தவனுக்கு, ஆழத்திலுள்ளவனுக்கு நமஸ்காரம். (32) சோப்யனுக்கு, ஜலத்தில் வசிப்பவனுக்கு, எமன் தோழனுக்கு, க்ஷேமஞ் செய்பவனுக்கு, பெரியவனுக்கு, கடையனுக்கு, பயிர்நிலமுள்ளவனுக்கு, கதிரடிநிலையனுக்கு நமஸ்காரம். (33) காட்டிலுள்ளவனுக்கு, கடும்செடிகளிலிருப்பவனுக்கு, சத்தமாயுள்ளவனுக்கு, எதிரொலியாயுள்ளவனுக்கு, துரிதரதம் சைன்யமுள்ளவனுக்கு, சூரனுக்கு, சீரழிப்பவனுக்கு நமஸ்காரம். (34) தலைப்பாகை, கவசம், மேல்கவசம், காப்புக்கவசமணிந்தவனுக்கு, சிறந்தவனுக்கு, சிறந்தசைன்யமுள்ளவனுக்கு, துந்துபியிலிருப்பவனுக்கு, முழக்கத்தால் மலர்பவனுக்கு நமஸ்காரம். (35) தீரனுக்கு, புத்தியுள்ளவனுக்கு, கத்தியும் சரக்கூடும் தரிப்பவனுக்கு, கூரிய அம்புகளோடு ஆயுதம் தரித்தவனுக்கு, நல்ல ஆயுதமும் வில்லுமுள்ளவனுக்கு நமஸ்காரம். (36) வழியிலும் பாதையிலுமுள்ளவனுக்கு, காடுமுரடு நிலத்திலும், மலைபக்கங்களிலும், நீரோட்டம் ஏரியிலும், நதியிலும் நீர்தேக்கத்திலுள்ளவனுக்கும் நமஸ்காரம். (37) கிணற்றிலும் குட்டையிலும், வெளுத்த வானம் சூரியோதயத்திலும், மேகத்திலும் மின்னலிலும், மழையிலும் பருவத்திலுமுள்ளவனுக்கு நமஸ்காரம். (38) காற்றிலும் புசலிலும், வீட்டிலும் வீடுகாப்பவனிலும் இருப்பவனுக்கு, சோமனுக்கு, ருத்திரனுக்கு, தாமிரனுக்கு, அருணனுக்கு நமஸ்காரம். (39) செல்வமளிப்பவனுக்கு, பசுபதிக்கு, உக்ரனுக்கு, பீமனுக்கு முன்னும், தூரத்திலும் கொல்லுபவனுக்கு, அழிப்பவனுக்கு, அடிக்கடி அழிப்பவனுக்கு, பசும் மரங்களுக்கு, விடுதலையாக்குபவனுக்கு நமஸ்காரம். (40)

சந்தோஷம், ஆனந்தம், சந்தோஷமூலன், ஆனந்தமூலன், சிவன் சௌமியமான சிவனுக்கு நமஸ்காரம். (41) எட்டியுள்ளவன், இங்குள்ளவன், தாண்டுபவன், தாண்டிவருபவன், படகில் நதியோரத்தில் நுண்ணிய புல் நுரையிலிருப்பவனுக்கு நமஸ்காரம். (42) மணலிலும், பிரவாகத்திலும், கல்லிலும், நீர் தேக்கத்தினுமுள்ளவனுக்கு நமஸ்காரம், சடையுள்ளவன், சம ரோமமுள்ளவனுக்கு, பாலை

வனத்தில் பெரிய வழியிலுள்ளவனுக்கு நமஸ்காரம். (43) மந்தை மாட்டுக்கூட்டம், சயனம், வீட்டிலுள்ளவனுக்கு, இருதயங்கள், சுழல்கள், கிணறுகள், பெருங்குழிகளில் உள்ளவனுக்கு நமஸ்காரம். (44) காய்ந்ததிலும், கசிந்ததிலும், தூளியில் வேப்பத்திலும், மூலைமுடுக்கிலும், செடிகொடியில் நிலம் நல்ல வனத்திலுள்ளவனுக்கு நமஸ்காரம். (45) இலையிலும், விழும் இலையிலுள்ளவனுக்கும் உக்கிரகோஷனுக்கும், உயிரை அழிப்பவனுக்கும்,கஷ்டம் கடூரமளிப்பவனுக்கும் நமஸ்காரம். அம்பு செய்பவர்களுக்கு, வில்லுசெய்யும் உங்களுக்கு, தெளிப்பவர்களுக்கு, தேவ இருதயங்களுக்கு, பகுத்தறிவுள்ளவர்களுக்கு, பாழாக்குபவர்களுக்கு, பழுதுபடாதவனுக்கு நமஸ்காரம். (46) பிடிப்பவனே! சோமத் தலைவனே! தரித்திரனே! நீலமுடன் சிவந்தவனே! எங்களைப் பிரிக்காதே. எங்கள் பிரஜைகளைக் கொல்லாதே. எங்கள் பசுக்களையுமடிக்காதே. எங்களிடமிருப்பவைகளுக்கு நோயும் வேண்டாம். (47) திடமான ருத்திரனுக்கு, தீரர்களின் தலைவனுக்கு, சடைமுடியுள்ளவனுக்கு, பசுக்களும் நாங்களும் கிராமத்திலுள்ளவர்களும், சுகமுடனும் நல்ல உணவுடனுமிருப்பதற்கு இந்த துதியைச் செய்கிறோம். (48) விசுவ சிகித்ஸனே! தினந்தோறும் நிவர்த்தி செய்யும் வடிவங்களையுடையவனே! நாங்கள் வாழ்வதற்கு நீ அன்புடனாகவும். (49) உங்கள் அம்புகளினின்று எங்களை நீக்கவும். உங்கள் கடுங்கோபம் எங்களிடம் வேண்டாம். எங்கள் அரசர்களிடமிருந்து வன்மையான வில்லை நீக்கவும், எங்கள் சுக்கிலம் சந்ததியுடன் சாந்தமுடனிருக்கவும். (50)

தாராளமானவனே! தூயசுபாவ முள்ளவனே! சிவமாய் சுமனசுடனாகவும். மூலையிலுள்ள ஏதோ ஒரு மரத்தின்கீழே உன் ஆயுதத்தை வைக்கவும். சர்மம் தரித்து வில்லுடன் அணுகவும். (51) காயம் செய்யாதவனே! சிவந்தவனே! பகவானே! நமஸ்காரம். உங்கள் ஆயிரம் அம்புகள் எங்களைத்தவிர மற்றவர்களைக் கொல்லட்டும். (52) ஆயிரமாயிரமான சரக்கூடுகளும் அம்புகளும் உன் கைகளிலுண்டு. வன்மையுள்ள பெரியாரே! எங்களிடம் பிரயோகஞ் செய்ய வேண்டாம். (53) பூமியிலே ஆயிரக்கணக்கான ருத்திரர்களுண்டு. இந்த ருத்திரர்களின் வில்லுகளை ஆயிரமைல்களுக்கப்பால் விஸ்திரிப்போம். (54) ஆயிரக்கணக்கானபவர்கள் இந்த பெரிய அலைகளுடனான வானத்திலுள்ளார்கள். நீலக் கழுத்தோடும் வெண்மையான தொண்டையோடும் ஆகாசத்தை ஆசிரியித்த ருத்திரர்கள் உள்ளார்கள். பூமியின் கீழும் அப்படியே சர்வர்களும், மரங்களில் பசும்புற்களைப்போல்

முடியில்லாமல் சடையோடு பூதர்களின் தலைவர்களும் வாழ்க்கைக்கு யுத்தம்புரிந்து பதிகர்களை ரக்ஷித்து உணவுகொண்டு வருபவர்களான ருத்திரர்களின் விற்களையெல்லாம் விஸ்தாரஞ் செய்கிறேன். (55-60.)

தீர்த்தங்களில் பிரசாரஞ் செய்து கத்தியும் அம்புகளும் தரித்து உணவில் சாய்ந்து பருகுங்கால் புலனுருகுபவனும் திசைகளிலேயுள்ள கணக்கில்லாத ருத்திரர்களின் விற்களையெல்லாம் ஆயிரமைல்களுக்கப்பால் விஸ்தாரஞ் செய்கிறேன். (61–63.) மழைகளை அம்புகளாக உள்ள வானத்திலுள்ள ருத்திரர்களுக்கு நமஸ்காரம். அவர்களில் பத்து கிழக்கில், பத்து தெற்கில், பத்து வடக்கில், பத்து மேலுள்ளவர்களுக்கு நமஸ்காரம். அவர்கள் எங்களைக் காத்து ரட்சிக்கவேண்டும். எங்களை வெறுப்பவனையும், நாங்கள் விரும்பாதவனையும் உன் வாயிலே தள்ளுவோம். காற்றிலிருந்து மழைகளை அம்புகளாயுள்ளவனுக்கு.............பூமியிலுள்ள மனிதர் உணவை அம்புகளாக அணிந்துள்ள ருத்திரர்களுக்கு நமஸ்காரம். எங்களை வெறுப்பவனையும், நாங்கள் விரும்பாதவனையும் உனக்கு உணவாயளிப்போம். (64–66.)

**6. சமகம். சமகம் என ருத்திர ஜபத்தோடு சில மந்திரங்களைச் சொல்வார்கள். ச என்னும் எழுத்தும் ம என்னும் எழுத்தும் அடிக்கடி சேர்ந்து சொல்லப்படும் மந்திரங்களே சமகமாகும். இதை 18-வது அத்தியாயத்தில் காணலாம். ஒரு சமக மந்திரம்—**

ருதஞ்சமே அமிருதஞ்சமே, அயக்ஷ்மஞ்சமே, அனுமயஸ்சமே, ஜீவாதுஸ்சமே, தீர்காயுத்வம்சமே, அனமித்ரஞ்சமே, அபயஞ்சமே, சுகஞ்சமே, சயனஞ்சமே, ஸூஷாஸ்சமே, சுதினம்சமே, யக்ஞேனகல்பந்தாம்.

**எனது சத்திய விக்ஞானமும் அமுத வாழ்க்கையும், என் க்ஷயம் நீக்கமும் நோய் நீங்கலும், என் ஜீவனும் சாசுவத வாழ்க்கையும் பகை நீங்கி விபத்துப் பிரிவும் என் சுகமும் துக்கமும் என் காலையும் தினமும் யக்ஞத்தால் வளரட்டும்.**

**ருத்திரம் சமகத்திற்கப்பால் புருஷ சூக்தம் எனப்படும் மந்திரங்களும் பெயர்போனவை. சிருஷ்டியையும் சர்வேசனையும் ஆரோபித்துச் சொல்லும் அற்புத**

**மந்திரங்களை அறியாதவர்கள் இல்லை. இச் சூக்தத்தின் (31-வது அத்தியாயம்) முதல் மந்திரத்தைச் சொல்லி இதன் பூர்ண உரையையும் இங்கு எழுதுவோம்.**

## 7. புருஷ சூக்தம்.

*சஹஸ்ர சீர்ஷா புருஷ: சஹஸ்ராக்ஷ: சஹஸ்ரபாத்; சபூமிம் சர்வதஸ் பிருத்வா த்யதிஷ்டத் தசாங்குலம்.*

(1) ஆயிரம் தலை கண் கால்களுள்ள புருஷன் புவியில் எங்கும் பரவி பத்து புலன்களில் நிறைந்துள்ளான். (2) அவன் அன்னத்தினாலே அபிவிருத்தியாகும் அமுதத்திற்கும் இருந்ததற்கும் இருக்கப் போவதின் பொருள்களின் அனைத்துமாவான். (3) அவன் மகிமையே மகிமை. அம்மகிமையை விட பெரியவன் புருஷன். முக்காலத்தின் அமுதம் அவனிடமேயுண்டு. விசுவ முதலியவைகள் ஒருபாத அம்சமாகும். (4) முக்காலமான மூன்று பாதங்களால் புருஷன் எழுந்தான். ஒரு பாதமே இங்கு உண்டு. புசிப்பதும் புசிக்காததுமான அனைத்திலும் அவன் செல்லுகிறான். (5) அவனிடமிருந்து விராசன் அல்லது வையகப்பொருள்கள் அனைத்தும் பிறந்தான். பிறகு விராஜனிலிருந்து புருஷன் பிறந்தான். பிறந்தவுடன் மேற்கிலும் கிழக்கிலும் நிலத்திற்கப்பால் விரிந்தான்.

(6) அந்த யக்ஞத்திலிருந்து எல்லாப்பொருள்களு முண்டாயிற்று. வாயுப் பிராணிகளையும் நாட்டு காட்டு மிருகங்களையும் அவன் செய்தான். (7) ருக்குசாமன்கள் அந்தப் பெரிய யக்ஞத்தினின்றே உண்டாயிற்று. சந்தஸுகளும் தோன்றிற்று. யஜுரும் அங்கிருந்தே பிறந்தது. (8) குதிரைகளும் இருவரிசை பற்களுமான பசுக்களும் கன்றுகளும் ஆடுகளும் அவனிடமிருந்து தோன்றிற்று. (9) தேவர்களும் சாத்தியர்களும் ருஷிகளும் முன்னர் தோன்றிய யக்ஞமான புருஷனை யக்ஞத்தில் (மானஸ) பலி யளித்தார்கள். (10) புருஷனை எப்படி அவர்கள் வகுத்துப் பிரித்து அறிந்தார்கள். அவன் முகம் எது? கைகள் எவை? அவன் தொடைபாதங்களின் பெயரென்ன?

(11) பிராமணன் முகம்போலாவான். புஜங்களால் க்ஷத்திரியர்களானார்கள். வைசியனும் சூத்திரனும் தொடை பாதங்கள் போலானார்கள். (12) மனத்திலிருந்து சந்திரனும் கண்ணிலிருந்து சூரியனுமானான். செவிகளிலிருந்து வாயுவும் பிராணனும் வாயினின்று அக்னி பிறந்தான். (13) நாபியிலிருந்து அந்தரிட்சமும், சிரமான சாமர்த்தியத்தால் சோதியுலகமும், பாதங்களிலிருந்து பூமியும், செவிகளி

னின்று திசைகளுமாயிற்று. இப்படி உலகங்களைச் செய்தார். (14) புருஷனை பலியாகச்செய்து யக்ஞ செய்யும் வசந்தம் நெய்யாகி கிரீஷ்மம் ஆகுதியாகி சரத்து சமித்தாயிற்று. (15) இந்த யக்ஞத்திற்கு ஏழு காயத்திரிகள் சுற்றுக்குச்சிகளாகி 21 தத்துவப் பொருள்களான 12 மாதம் 5 பருவம் மூன்று உலகம் காற்று வானம் சூரியன் எரியும் சமித்துக்களால் புருஷனை யக்ஞம் செய்தார்கள்.

(16) தேவர்கள் யக்ஞம்செய்து யக்ஞத்தை பலியளித்தார்கள். இதுவே பழைய தர்மச்செயல்கள். மகத்துவ மனிதர்கள் சாதனத்தால் பெரிய பதவியை யடைந்தார்கள். (17) சலத்தினின்றும், நிலத்தினின்றும், விசுவகர்ம சத்தினின்றும் அவனைச் செய்தார்கள். ரூபங்களை அளித்து துவஷ்டா செல்லுவான். இதுவே ஆதிதேவரும் மனிதரின் ஜன்மமாகும். (18) மகத்தாய், சூரிய நிறமாய், இருளிற்கு அப்பாலுள்ள புருஷனை நான் அறிவேன். அவனை அறிபவனே தன். பின் மரணத்தைவிட முடியும். செல்லுவதற்கு இதைத்தவிர வேறுவழியில்லை. (19) கர்ப்பத்திலே பிரஜாபதி செல்லுகிறான். அனைத்திலும் புலனை போதிலும் அவன் பிறப்பதே இல்லை. அவன் தோன்றும் நிலயை எது என அறிஞர்களே காண்பார்கள். புவனங்கள் எல்லாம் அவனிலேயே நிற்கும். (20) தேவர்களுக்கு ஒளியையும் தவத்தையும் அளிக்கும் தேவ புரோஹிதருக்கு, தேவர்கள்முன் உள்ளவனுக்கு, ருசியான பிரமத்திற்கு நமஸ்காரம்.

(21) அவர்கள் சோதியான பிரமத்தை அறியுங்கால், பிரமமே! உன்னை இப்படி அறிபவன் தேவர்களையெல்லாம் சுவாதீனம் செய்து கொள்வான் என்பார்கள். (22) அழகும் ஐசுவரியமும் அவன் மனைவிகள். உன் இருபக்கங்களில் இரவு பகலுமுண்டு. நட்சத்திரங்கள் உன் வடிவம். விரும்பி அங்குள்ள உலகத்தை விரும்பி சர்வலோகத்தையும் என்னுடையதாக வேண்டுமென அவாவுள்ளவனுகிறேன்.

இனி நிருக்த பாஷ்யம்போல் வேத அடக்கத்தை பார்ப்போம்.

**சுக்ல யஜுர்வேதம்—முதல் இரண்டு அத்தியாயங்கள்—ஈசோபாசனை, சத்துருக்களை நாசஞ் செய்வது, ராஜ்யபரிபாலனம் செய்வதெப்படி, நிலம் நீரிலிருந்து எல்லா நன்மைகளையு மடையவும். (மொத்த மந்திரங்கள். 31+34) அத்தியாயங்கள் 3, 4, 5. அக்னி ஹோத்திர இரகசியம், சூரியன் இந்திரனின் குணங்கள், பெற்றோர் பெண் பிள்ளைகளின் கடமை**

கள், சூரவீரர்களின் லட்சணங்கள். (ம. 63+37+43) அத்தியாயம் 6. ராஜ்யாபிஷேக முகவுரை, ராஜ கிருத்யம், ராஜப்பிரஜை பரஸ்பர ஆதரவு,, சபைத் தலைவன் செயல், விஷ்ணு, பரமபத விளக்கம், ராஜப்பிரஜை கடமை, குருசிஷ்ய கடமை, யக்ஞ அனுஷ்டானம், மனிதர்கள் பரஸ்பரம் வாழும் வழி. துஷ்ட நிவர்த்தி பயன், ஈசுவரப் பிரார்த்தனை எப்படி? ரணத்தில் வீரர்களின் வர்ணனை, யுத்தத்தில் எப்படி இருக்க வேண்டும்? வீரர்களுக்கு உற்சாகமளிக்கவும் ராஜ்யப்பிரபந்த சாதனம், ராஜாவிற்கும் சபைக்கு முள்ள சம்பந்தம், சபைத்தலைவனை எடுத்தல், சபையின் புதிலட்சணம். சபாபதி கடமை, ஸ்திரீ புருஷ கடமை ராஜப்பிரஜைகளுக்கு உபதேசம். (மொத்த மந்திரங்கள் 37.) அத்தியாயம் 7. ஆத்மாவின் குணம், மனோ சுபாவம், யோகாப்யாஸம், யோகலட்சணம், படன பாடனவழி, அந்தக்கரணசுத்தி அவசியம், யஜமானன் சேவகன் கடமை, சேனாதிபதியை தேர்ந்தெடுப்பது,யுத்த லட்சணம், யுத்த வீரர்களின் கடமை, பிரமசாரிய வழி. (மொத்த மந்திரங்கள் 48.) அ. 8-20. கிருஹவாழ்க்கை, ராஜதர்மம், எல்லா மனிதர்களின் கடமைகள், சீவர்களின் ரகசியம், வசந்தாதி ருதுக்களின் இரகசியம், வீர புருஷனுக்கும் லட்சணம், ருத்திர மகிமை, கணிதவித்தை, யோகலட்சணம், கிருஹஸ்த லட்சணம், பயமன்னியில் ஏன் இருக்கவேண்டும்.(63+40+34+83+116+58 + 31+65+66+99+77+95 +90.) அ. 21-39.வருணனின் இரசியம்,யக்ஞசூட்சமம், ஸ்திரீ புருஷ பரஸ்பர லட்சணம், பசுபட்சி பிராணிகளைப்பற்றி ஆத்மஞானம், புருஷார்த்த பலன், சிற்ப சாஸ்திரம், சத்தியத்தின் சிறப்பு, வாயுபெருமை, வீரம் வேண்டும், சத்துரு சம்ஹாரம், பரமேசுவர சுவரூபம், பிரம க்ஷத்திரிய கடமைகள், பஞ்சப்பிராண சூட்சமம், மனோரகசியம், மறுஜன்மம், நித்யகடமை,

சக்திவேண்டும். (61+34+65+40+48+26+45+46+60+22+31+16+97+58+22+24+21+18+13)

அ. 40. ஈசோபநிஷதம், 17 மந்திரங்கள்.)

இனி இந்த வேதத்திலுள்ள அமுத மொழிகளை நோக்குவோம்.

1. அக்னியிலே அனல் மின்னல் சூரியன் என மூன்று பிரிவினைகள். அவைகளையெல்லாம் அறிந்து பயன் செய்துகொள்ளவேண்டும். (2. 3.) 2. அனல் சலம் மின்னலின் உண்மைகளையெல்லாமறிந்து அறிஞர்களாகி சத்துருக்களை அழிக்க வேண்டும். (2. 15) செயலுக்கு ஏற்றவாறே நாம் அனுபவிப்பதால் நல்ல செயல்களை செய்வது கடமை. (2. 28) 3. துஷ்டர்களை தண்டித்து சாதுக்களை ரட்சிப்பது தர்மம். (2. 29.) 4. வாணியானது அகத்திலுள்ள மின்னலான அக்னியால் விளங்குவதால் அறிஞர்களை அணுகி அதை அபிவிருத்திசெய்து கொள்ளவும். (2. 30.) 5. அக்னி வாயு முதலியவைகளை அறிந்து அரச பதவி ஐசுவரியங்களையெல்லாம் அனுபவிக்கவும். (2. 31.) 6. சோம்பல் வேண்டாம்; சதாகால முயற்சி அத்தியாவசியமாகும். (2. 32.) சீடன் ஒரு பிள்ளை; தேகசம்பந்த பிள்ளை ஒன்று. ஆக இருவர். (2. 38.) 7. ருக்கு சாமன் முதலியவைகளை அறிந்து அம்மந்திரங்களினின்று சாக்ஷாத்காரமாகும். சிற்பம் முதலிய எல்லா சூட்சமங்களையுமறிந்து சுகத்தை அடையவும். (4-10.) 8. ஞானத்தைப் பிரசாரம் செய்வது மனிதர்கள் கடமையாகும். (5. 3.) 9. வாணியிலே மூன்று. ஒன்று சிட்சை; இரண்டு சத்தியம் பேசுவது; மூன்று சுவீகரிப்பது. (5. 10.) 10. ஆத்மசரீர பலத்தைப் பெருக்கி சத்துருக்களை யொழித்து அரசு புரிவதே மனிதர் தர்மமாகும். (5. 25.)

சமுத்திரம் கச்ச சுவாஹா, அந்தரிட்சம் கச்ச சுவாஹா, சவிதாரம் கச்ச சுவாஹா, மித்ரா வருணௌ கச்ச சுவாஹா.................. பிருதிவீம் பஸ்மணு பிருணு சுவாஹா, (6. 21.)

11 தர்ம அர்த்த காமமோட்சம் ராஜ்யம் வியாபாரம் முதலியவைகளை விரும்புபவர்கள், நிலம் கடல் வானம் முதலியவைகளை யெல்லாம் சடுதியில் சுற்றி அறிவதற்கான வாகனம் விமானம் கலைகளை யெல்லா மறிந்து அனைத்தையும் ஒன்று சேர்த்து பொன் ,பொருள் அரச பதவியான யாவற்றையும் அடையவேண்டும்.

12 இந்திர அக்னி சூரிய வருணன் முதலிய பெருங் குணங்களை பிரகாசிக்கச் செய்பவனுக்கே இராஜ்யபடதவி வேண்டும். (6. 32.) 13 மனிதன் சிறந்த ஆச்சாரம் செய்யாதவரை ஈசுவரன் அவனை சுவீகாரஞ் செய்துகொள்வதில்லை. ஈசுவர சுவீகாரமில்லையேல் ஆத்ம பலமில்லை. ஆத்ம பலமில்லையேல் ஆனந்தமேஇல்லை. (7. 6.) 14 ராஜன், பிரஜைகள் பரஸ்பரம் பிரீதியுடனும் அன்புடனிருக்கவேண்டும். அறியாமைமையை அகற்றுவது அவசியம். (4. 27.) 15 பிரஜைகளிஷ்டமன்னியில் அரசுபுரிய இராஜனுக்கு அதிகாரமில்லை. (6. 2.) 16 அறிவு எங்கும் பெருக பிரமசரியமனுஷ்டிப்பவனையே மகா சபையின் தலைவனாகச் செய்யவேண்டும். (7. 23.) 17 யோகவித்தையன்னியில் பூர்ணஞானமில்லை. பூர்ணஞானமில்லையேல் பரம் புலனாகாது. பரத்தின் ஞானமில்லையேல் பாமரர்களைக் காக்கமுடியாது. (7. 28.) 18 சபாபதியான ராஜாவானவன் நியாயமாய் அரசுபுரிய வேண்டும். (7. 29.) 19 ராஜீய செயல்கள் எல்லாம் மகாசனங்களின் சபை மூலமாகவே நடப்பது அவசியம். (7. 32.) 20 தேசத்திலே எல்லாப் பெண்கள் பிள்ளைகள் படிப்பதற்குச் சந்தர்ப்ப மிருக்கவேண்டும். (7. 33.)

21 சூரியகிரணத்தால் சோதியை அடைவது போல் சிறந்த புத்தியால் சனங்கள் பிரகாசத்தை அடைவார்கள். (7. 42.) (22) போர்க்காலத்தில் நால்வர் அவசியம். வைத்தியன், உற்சாகமளிப்பவன்,

சத்துருவை நிந்திப்பவன், சத்துருவை அழிப்பவன். (7. 45.) 23 தன் பிள்ளையைப்போல் எண்ணாத அரசனின் நாட்டில், சத்தியமில்லாத ஆட்சியில் சுகமென்பதில்லை. (8. 51.) 24 ராஜசம்பந்தமான ஸ்திரீ புருஷர்கள் முற்றவர்களின் மேன்மையையே மதித்து அறிஞர்களுடன் சேர்ந்து ராஜதர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் (9. 8.) 25 அறிவில் சிறந்தவனே ! சத்துருவைக்கொன்று ஐசுவரியத்தை அடைய முடியும். (10. 10.) 26 நிலத்தின் கீழேசென்று அக்னியின் துணையோடு பொன் முதலிய உலோகங்களை கிரகிக்கவும். (11. 10.) 27 கன்னிகைகளுக்கு கர்ப்ப வித்தையையும் ஔஷதங்களைப்பற்றியு மறிவிக்கவும். (11. 48.).

28 ஸ்திரீயும் புருஷனும் பரஸ்பரம் சந்தோஷமாயிருக்கவேண் டும். சதாகால சௌஜன்யபத்துடனிருக்க வேண்டும் 16-50. 29 கிரகவேலைகளை யெல்லாம் ஸ்திரீகள் அறியவேண்டும். எல்லாம் அவள் கையிலிருக்கவேண்டும். (11. 62.)

30 அக்னிப்பிரியேஷு தாமாஸுகாமோ பூதஸ்ய பவ்யஸ்ய, ஸம்ராடேகோ விராஜதி. (12. 117.) பரமாத்மாவின் குண கர்ம சுபாவங்களுக் கேற்றவாறு ஒருவன் நடந்தால் சக்ரவர்த்தியின் நிலையையும் அடைவான்.

31 ராஜபுருஷர்கள் யுத்தவித்தை முதலியவைகளை யெல்லா மறிந்து மனிதன் முதலியவர்களுக்கு ஒரு நாளும் தீமைபுரியலாகாது. (ருத்திரம். 3) 32 கிழவர்கள் குழந்தைகள் ஸ்திரீகள், வீரர்களின் பெற்றோர்கள், பார்ப்பவர்கள், தூதர்கள் முதலியவர்களை போரிலும் கொல்லலாகாது. (ருத்திரம். 15.) 33-34 யுத்தகளத்தில் உபகாரமிருகங்களான மாடுகுதிரைகளையும் கொல்லாதே. (ருத்திரம்.6.) 35 தேசசஞ்சாரம் செய்யவில்லையானல் ஐசுவரியங்களைச் சேகரிப்பது கஷ்டம். (ருத்தி

ரம் 14.) 36 அனுதிகளை ரக்ஷிப்பது நமது கடமை. (ருத்திரம் 19.) 37. அக்னி சம்பந்தமான அஸ்திரங் களை யெல்லாம் நன்றாய் அறிந்து கொள்ளவும் (ருத் திரம் 21.) 38 புவியிலே இரு தீர்த்தங்களுண்டு. ஒன்று கல்வி கற்பிப்பது. இரண்டு, கடல்முதலிய பெரிய நீரா சயங்களைத் தாண்டுவது. (ருத்திரம் 22.) 39. எல்லா திசைகளிலுள்ள வாயுக்களை அறிந்து பயன்செய்து கொள்ளவேண்டும் (ருத்திரம் 23.)

40 பிருதீவீசமே இந்திரஸ்சமே அந்தரிட்சம்சமே இந்தரஸ்சமே தியௌஸ்சமே இந்திரஸ்சமே சாம ஸ்சமே இந்திரஸ்சமே நட்சத் ராணிசமே இந்திரஸ்சமே திசஸ்சமே இந்திரஸ்சமே யஞேன கல்பன் தாம். (18. 18.) பூமி முதலியபிரபஞ்ச எல்லாப்பொருள் களையும் அறிவதால் பெரும் பலமுள்ளவனுகின்றான்.

(41) பிதுருப்ய: சுவதாயிப்ய: சுவதாநம: பிதாமஹேப்ய: சுவதாநம:, பிரபிதாமஹேப்ய: சுவதாயிப்ய: சுவதாநம, அக்ஷன் பிதரோ அமீமதன்த பிதரோ அதீதிருபன்த பிதர:, பிதர: சுன் தத்வம், (19. 36.) பிள்ளைகளே, வதுக்களே, சீடர்களே, உயர்ந்த உணவு முதலியவைகளால், பெற்றோர்கள் உங்களுக்குக் குழந்தைப் பருவத்தில் செய்ததுபோல் நிரன்தரமாய் அவர்களுக்கு சத்காரஞ் செய்யவும். அதனுல் அவர்கள் சந்தோஷமாவார்கள்.

(42) காலைபானது இருளையும் மாலைப் பகலையும் எப்படி அழிக்கின்றதோ அப்படியே அறியாமை முதலியவைகளை அழித்து அறிவைப் பரவச்செய்ய வும். (20. 61.) 43. சதாகால முயற்சியுள்ளவன் ஐசு வரியத்தை அடைவான். (21. 5.) எட்டு வசுக்கள், ஏகா தசருத்திரர்கள் 12 ஆதித்தியர்களை அறிபவன் அக்ஷய சுகத்தை அடைவான். (21. 28.) 43. புவிமுதலிய சகங்களிலுள்ள சமஸ்த வேகமான துரிதப்பொருள் களான அக்னியின் சூக்ஷமங்களை அறியாதவன் உலக இன்பத்தை அனுபவிக்கப்போவதில்லை. (22. 19.) 44

புவிக்கு ஒரே ஒரு அரசனுண்டு; அவன்தான் பரமன். அவன் ஒருவனையே உபாசனை செய்வதால் தர்ம அர்த்த காமமோட்ச எல்லா புருஷார்த்தங்களையு மடையலாம். (23. 3.) 45. சூரவீர விஜயங்களின் காரணமான குதிரை முதலியவைகளை அடைந்து புவி யின் எல்லாபோகங்களையும் அனுபவிக்கவும் (29. 18.) 46 விஷ்ணு மூன்று அட்சரங்களால் மூன்று உலகங் களை ஜயித்தான். நானும் அவைகளை ஜயிக்கட்டும் (9. 31.) 47. உன் முழக்கத்தை சகம் சுவர்க்கத்தின் வழி யாய் முழங்கவும். இந்திரன் தேவர்களோடு தோய் ந்து எங்கள் சத்துருக்களை வெகுதூரத்திற்கப்பால் துந்துபியே! துரத்தவும். பலத்தை முழக்கஞ்செய்ப வும். ஓஜஸை அளித்து எல்லா விபத்துக்களையும் துரத்த முழக்கஞ்செய்யவும். போர்முழக்கமே! துர திர்ஷ்டத்தைத் துரத்தவும். முதல் இந்திரனை நீ நிலையை காண்பிக்கவும். (19. 55. 56.)

(48) *பிரேதே ஜயதா நரஇந்திரோவ: சர்ம யச்சது, உக்ராவ: ஸன்து பாஹவோ அனுதிருப்யா யதா சதா.* (17. 46.) *அவசிருஷ்டா பராபத சரவ்யே பிரம சகும்சிதே, கச்சாமித்ரான் பிரபத்யஸ்வ மாமீஷாங் கச்சனேச்சிஷ:* (17. 45.) வீரர்களே; முன் சென்று ஜயிக்கவும். இந்திரன் நமது நிலையான பாதுகாப்பாகட்டும். ஒருவரும் உங்களுக்குத் தீமை புரியாமலிருக்க நீங்கள் பெரும் புஜபலமுள்ளவர் களாகவேண்டும். 49 எங்கள் மொழிகளால் கூர்மை யாகி வில்லினின்று பாய்ந்து சத்துருவை அடியோடு ஒழிக்கவும். அங்கு ஒருவரும் பிழைத்தல் கூடாது.

# 18. சாமவேதம்.

अग्नआ याहि वीतये गृणानो हव्यदातये। निहोता सत्सि बर्हिषि ॥ १ ॥

त्वमग्ने यज्ञानां होता विश्वेषां हितः। देवेभिर्मानुषे जने ॥ २ ॥

*அக்னஆ யாஹி வீதயே கிருணுனோ ஹவ்யதாதயே, நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி (1) துவமக்னே யக்ஞானும் ஹோதா விசுவேஷாம் ஹித: தேவேபிர்மானுஷே ஜனே.*

*அக்னியே! தேஜசுக்காக துதிக்கப்படும் நீ தேவர்களுக்கு ஹவ்யத்தை அளிக்க நீ எழுந்தருளவும். ஹோதாவான நீ இருதயமான எங்கள் தர்ப்பைகளில் வீற்றிருக்கவும். மனிதர்களில் தேவர்களால் விசுவத்திற்கு ஹிதஞ்செய்யும் யக்ஞஹோதாவான அனலே நீயாகும்.*

1. சத்யம் ஞானமனந்தம் பிரம என்னும் அமுதமொழியே சாமவேத ரகசிய மென்பார்கள். உபாசனை செய்வதற்கு உயர்ந்த மொழிகளை அடைந்துள்ள நூலே சாமன் என்பது சகஜம். ராவணன் தன்னை காத்துக்கொண்டது சாமவேதத்தின் மகிமையினுல் என புராண கற்பனைக் கதைகள் கூறும். அது ருத்திரனின் துதியை அதிகமாய் கானஞ் செய்வதால், அவன் அழிக்கும் தேவனுகையால் அதைச் சொல்லுவது நன்மையாகாது என சில ஸ்மிருதிகள் கூறும். ருக்வேதம் தேவரைப்பற்றியதாலும் யஜுர்வேத நோக்கம் மனிதனுகையாலும் இவைகளைச் சொல்வதில் தோஷமில்லை, பிதுருக்களைப் பற்றியே சாமன் சொல்வதால் அதைச் சொல்வது உசிதமில்லை என மனு நூல் (4-1. 3.) சொல்லும். ஆனுல் பரமசிவனுக்கு சாமனைக்கண்டால் பிரியமதிகம் என இதை வாழ்த்துபவர்களுண்டு. சாமவேத நூல்களிலிருந்தே கீதமென்பது வெறும் சொற்களில்லை, ஆனுல் சகத்தி

லுள்ள ஒவ்வொரு பொருள் செயல் நிலைகளின் பற்பல வேற்றுமை எனத் தெரிந்து சமமாய் அவைகள் சிறந்தோங்கும் வழியைக் காண்கிறோம். அதையே சக்த்தின் சங்கீத சாமன் என்பார்கள். அதற்கான வழிகளைக் காட்சியாக்குவதே இந்நூல்.

2. சாமவேதம் இரண்டு பாகங்களாய் பிரிக்கப்பட்டு பூர்வார்சிகம் உத்தரார்சிகம் என அழைக்கப்படும். பூர்வார்சிகத்திற்கு பிரபாடகம் என்னும் பெயருடன் ஆறுபிரிவினைகளுண்டு. உத்ரார்சிகத்திற்கு ஒன்பது பிரபாடகங்கள், மொத்தம் 30 அத்யாயங்கள், 446 தசதிகளாக தனிமை யாக்கப்பட்டு சுமார் 1868 கானங்களாக ஓதப்படும்.

3. சாமன் என்னும் வேதமானது ருக்வேதத்திலுள்ள பல ருக்குக்களுடன் செம்மையாகும். அந்த மொழிகளை கானஞ்செய்வதற் கேற்றவாறு சுவர பேதங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. சாந்தோக்கியத்திலிருந்து (ஆசிரியரின் உபநிஷதக் கதைகளைப் பார்க்கவும்) சாமனுக்கு ஹிங்காரம், பிரஸ்தாவம், உத்கீதம், பிரதிஹாரம், நிதனம் என ஐந்து அம்சங்களுண்டு. பூமண்டலத்திலே ஒவ்வொரு பரிபூர்ண செயலுக்கு இவ்வைந்து அம்சங்கள் உண்டு. உதாரணம் மழைய பெய்யும் செயலைப் பார்ப்போம். அதற்கு காற்று, மேகம், பொழிவது, மின்னல், நிற்பது, என ஐந்து பாகங்களுண்டு. இவ்வைந்துமே முறையே மேற்சொன்ன சாமானின் ஐந்து அம்சங்களாகும். இந்த சுபாவங்களை சப்த சுவரமாய் இன்னம் பற்பல பிரிவினைகளுடன் சாதாரணமாய் வேதமந்திரங்களை இவ்வேதத்தில் பாக்களாக அமைத்தார்கள். இதற்கும் நான்கு பேதங்களுண்டு. (1) கேயம், (2) ஊஹம், (3) ஊஹ்யம், (4) ஆரண்யகம். கேயமென்றல் கிராமத்தில் சொல்வதற்காகும். ஆரண்யகம்

என்பது வனத்தில் சொல்லவேண்டுவதாகும். இவ்விரண்டும் பூர்வார்சிகத்தைத் தழுவி நிற்கும். சாதாரணமாய் மூன்று வரிசைகளோடு அமைந்ததே ஊஹம் ஊஹ்ய கானமாகும். இவை இரண்டாவ்தார் சிகத்தைத் தழுவியதாகும்.

4. சில சாம மொழிகள். ஒவ்வொரு கிரகத்திலும் பூஜிக்கத்தகுந்த ருத்திரனை அன்புடன் துதிக்க அக்னியே நீ எனக்கு உதவி செய்யவும். பெரியவன் பரவியவன் புகைக்கொடியுண்டு புகழும் சோதியான் எங்களுக்குப் புனித எண்ணத்தையும் பரம ஐசுவரியத்தையு மளிக்கவும். (2. 8. 2. 3.) தந்தை மகனுக்கு ஞானத்தைக் கற்பிப்பதுபோல் நீ எமக்கு அறிவை அளிக்கவும். நாங்கள் சோதியை அடைய நீ வழிகாட்டவும். (2. 4. 3. 6.)

குறிப்பு:— வேதமொழிகளை கானஞ் செய்வதிலிருந்தே உரையை அறிய வேண்டுமென சாமகானம் தொகுக்கப்பட்டதால் இவ்வேதத்தின் கருத்துரையை நாம் அதிகமாய் எழுதவில்லை. இச் சாமவேதத்தின் கௌதம சாகிகளே நமது தென்னாட்டில் அதிகம். வழக்கம் என்பதில் சாய்ந்து. இச்சாமனை அபசுவரத்துடன் தமிழர்களில் பலர் சொல்லுகிறார்கள் என ஒரு பெரிய கிளர்ச்சி நடந்து வருகிறது. இக்கிளர்ச்சிக்குத் தலைமை வகிப்பவர்கள் தஞ்சாவூர் ஜில்லா வரகூர் கிராமத்திலுள்ள ஸ்ரீ இராமச்சந்திர சிரௌதிகளின் குடும்பத்தைச் சேர்ந்த பிரமஸ்ரீ வேம்பு சிரௌதிகளும் அவர் மகன் ஸ்ரீ. வே. அகோர சிரௌதிகளுமாகும். அவர்கள் சொல்வதாவது:—

நமது பிராமணர்கள் 5-வது சுவரத்தை 2-வது சுவரமாகவும், மூன்றுவது சுவரமாகவும் தப்பும் தவறுதலுடன் சொல்லுகிறார்கள். பிரதி சாக்கியத்திலுள்ள அடியிற் கண்ட சில இலட்சணங்களை யாவது அவர்கள் அறிவதில்லை. சாம சுவரத்திற்கு ஸ்தானங்கள் மூன்று. ஒரு ஸ்தானத்திற்கு சுருதி 22. ஒவ்வொரு ஸ்தானத்திலும் ஏழு சுவரங்களுண்டு. ஒவ்வொரு சுவரத்திற்கும் சுருதியைப அறிந்துகொண்டு கானஞ் செய்யவேண்டுமென நாரதர் சொல்லுகிறார். கானஞ் செய்யுங்கால் காலத்தை அறியவேண்டும். காலங்கள் மூன்று ; 1. ஹ்ரஸ்வம் (ஒருமாத்திரை), 2. தீர்க்கம் (2 மாத்திரை)

3.விருத்தம் புளுதம்(3 மாத்திரை), ஒவ்வொரு எழுத்தின் காலத்தைத் தெரிந்துகொண்டு கானஞ் செய்யவேண்டும் என வரருசி சொல்லுகிறார். எழுத்துக்களிலே அடியிற்கண்ட இரகசியங்களை அறிவது அவசியம். அவை—பரிசம், அந்தஸ்தை, ஊஷ்மை, வியஞ்சனம், சுவரம், ஸம்யோகம், யமம், அனநத்யம், அநத்யம், த்விர்பாவம் வர்க்கம், உபத்மாநீயம், ஜிஹ்வமூலம், விசர்ஜனீயம் அனுசுவரம்.

இவர்கள் சாமகானம் அதன் சம்பந்தமான பல வடமொழி நூல்களை பிரசுரஞ் செய்துள்ளார்கள். வேதம் ஓதுபவர்களுக்கு அவை மிகவும் அவசியமாகும்.

---

## 19. அதர்வம்.

---

**ये त्रिषप्ताः परियन्ति विश्वा रूपाणि विभ्रतः ।**
**वाचस्पति र्बला तेषां अद्य दधातुमे ॥**

அத. 1. 1. 1.

யேதிரிஷப்தா: பரியந்தி விசுவாரூபாணி விப்ரத. வாசஸ்பதிர் பலாதேஷாம் தனவோ அத்ய ததாதுமே.

விசுவமான வடிவங்களை எடுக்கும் திரிசப்தனும் எங்கும் சுற்று பவனின் பலத்தையும் வன்மையையும் வாசஸ்பதியானவன் எனக்கு அளிக்கட்டும்.

1. அதர்வவேதம். இவ்வேதத்தை 20 காண்டங்களாகப் பிரித்து 34 பிரபாடகங்களாய் வகுத்து அனுவாகங்கள், வர்க்கங்கள், சூக்தங்களாவும் மந்திரங்களாவும் பிரித்துளார்கள். இவ்வேதத்தில் மொத்தம் 111 அனுவாகங்கள், 733 வர்க்கங்கள், 760 சூக்தங்கள், 5847 மந்திரங்கள். முதல் காண்ட ஒவ்வொரு சூக்திரங்களில் நான்கு மந்திரங்களும், இரண்டாவது காண்டத்தில் ஐந்தும் மூன்ருவதில் ஆறும், நாலாவதில் ஏழும், ஐந்தாவதில் எட்டி லிருந்து பதினெட்டு வரையும், ஆருவதில் மூன்றும், ஏழாவதில் பதினொன்று வரை சாதாரணமாயுண்டு. எட்டாவது

காண்டத்தினின்று 20-வது காண்டம்வரை ஒவ்வொரு சூக்தங்களில் சில இடங்களில் 80 மந்திரங்கள் வரையுண்டு.

2. அதர்வ உண்மை. அதர்வவேதத்தை அதர்வணமெனவும், அங்கிரஸன் எனவும், அதர்வாங்கிரஸமெனவும் அழைப்பார்கள். பிருகுவாங்கிரஸன் எனவும் இதைச் சொல்வதுண்டு. ருக்வேத காலத்திலே இருந்த அதர்வணன், அங்கிரஸன், அதர்வாங்கிரஸன், பிருகுவாங்கிரஸன் இச் சூட்சமங்களை அதிகமாய் அறிந்திருந்தபடியால் அதர்வவேதம் அவர்கள் பெயரால் அழைக்கப்படலாம். இதை பிரமவேதமெனச் சொல்வார்கள். யக்ஞஞ் செய்யுங்காலத்தில் ஹோதாவான ருக்வேதி சொல்பவனுனல், உத்காத்ரியான சாமன றிந்தவன் பாடுபவனுய், யஜுர்வேத அத்வர்யு யக்ஞம் செய்தால், அதர்வவேதி வழிகாட்டியாகவும் பிரதான அறிஞுன புரோகிதனுகையால் பிரமன் என அழைக்கப்படுகிருன். அதனுல் இதை பிரமவேதம் அல்லது இக, பரம், என்னும் இரண்டையும் அறிவிக்கும் வேதமெனச் சொல்லவேண்டும்.

சிலகாலத்தின் முன்னர் தான் இவ்வேதம் ஏற்பட்டது என சிலர் சொல்வார்கள். ஆனுல் சற்று ஆராய்வோமானுல் வேதங்களில் முதன்மையான கிரியை யக்ஞம். அந்த யக்ஞத்திற்கு பிரதான புருஷன் பிரமனுன அதர்வனுகும். வேதகாலத்தில் யக்ஞமிருந்தது. அப்பொழுது அதர்வம் இருந்துதானிருக்கவேண்டும், என்பது புலனுகும்.

அதர்வம் அதமமான வேதம் என சிலர் சொல்வதை நாம் பார்க்கிருேம். அடியிற்கண்ட சில சம்பவங்களே காரணமாகலாம்.

3. சுமார் 1575-ம் வருஷத்திலே பஹாவன் என்னும் ஒரு பிராமணன் அக்பரினுல் மகம்மதியனுனுன்.

பல நண்பர்களின் உதவியைக்கொண்டு அதர்வ வேதத்தைப் பார்ஸி பாஷையில் செய்தான். அதை சில மகம்மதியர்கள் அனுஷ்டானஞ் செய்தார்கள். வேதமே அறியாத நமது நவீன ஹிந்துக்கள் சில மகம்மதியர் அவ்வேதத்தை அனுஷ்டித்ததால் அதமம் என அழைத்திருக்கலாம். அல்லது, அதர்வத்திலுள்ள மந்திரோச்சாடனைகள், பிரயோகங்கள் மொழிகளின் இரகசியங்களை அறியாமல், அதன் சரியான உரை நாட்டிலே இல்லாததால் அஞ்ஞானத்தால் கூறப்படலாம்.

4. அதர்வ ரகசியம். சொல்லப்போகில் அதர்வ வேதமென ஒன்று தனிமையாக ஆதியில் கருதப்படவில்லை. மூன்று வேதங்களினின்றும் முதன்மையாய் ருக்வேதத்தினின்று சுமார் 1,200 ருக்குக்களை இவ்வேதத்தில் காணலாம். யஜுஸ் சாமனின் சூட்சமங்களும் இங்கு உண்டு. பிரமசரியத்தின் மகிமையையும், விவாகம், கடைக்காலத்தைப்பற்றியும், பெரிய வாழ்க்கைபெற நோய்களினின்று நீங்கும் வழியையும் விஸ்தாரமாக இந்நூல் அறிவிப்பதால் மற்ற மூன்று வேதங்களுக்கும் இதையே வழிகாட்டி எனச் சொல்லி பெரிய வேதமெனச் சொல்லலாம். உபநிஷதங்களும், உண்மையை அறிவிக்கும் வானசாஸ்திர சூட்சமங்களும் ரகசியங்களும் இவ்வேதத்திலிருப்பதால் இக்காலத்தில் நமக்கு அவசியமாய் இவ்வேதம் உதவும் என்பதில் சந்தேகமே இல்லை.

5. அதர்வ வேதத்தில்வரும் சில முக்கியமான ருஷிகள்—கண்வம், பாதராயணர், விசுவாமித்ரன், கசியபன், கக்ஷிவான், புருநீதன், அகஸ்தியர், ஜமதக்னி, வாமதேவர்.

6. அதர்வத்தில் இருப்பவை என்ன? இவ்வேதத்தை பாக்களாலும் வசன நடைகளாலும் விளக்கி

யுள்ளார்கள். இவ்வேதத்திலே சலத்தாலும் நிலத்தாலும் காற்றாலும் கனலாலும் ககனத்தாலும் நோய்களை எப்படி சிகித்சை செய்யலாமென்பதையும் மனோசக்தியால் வனப்பிராணிகளை எப்படி வசியஞ் செய்பவர் மென்பதையும் காணலாம். சூரியன் சந்திரன் நட்சத்திரம் ஆறு சலம் கடலினின்று அமுதத்தை அடையும் வழியையும் இந்நூல் அறிவிக்கும். ஐசுவரியம் நாடும் வழி பெண்பிள்ளைகளை அனுபவிக்கும் வழி இவைகளை அறிய இந்நூலே குறுக்கு வழிபோலாகும்.

முதல் 13 காண்டங்கள் வரை—சுரமருந்து, இருமல் நீங்க, மஞ்சக்காமாலைக்கு மின்னலை நாடவும், சோபைக்கு ஔஷதம், அம்பு பாய்ந்தால் மருந்து, வாதமானல் சூரியனை நாடு, குஷ்ட சிகித்சை, எலும்பு ஒன்று சேரும், புழுக்கள் சிகித்சை, விஷம் நீங்கும் வழி, நாய் கடி நீங்க, ரோமம் வளர, ராட்சதர்களை பாழாக்கும் வழி, சுத்த சலமே சகல ஔஷதம், முத்துக்கள் தீர்க்காயுளையளிக்கும், தங்கமே வெகு நாள் வாழ வழி, புருஷவசியம், ஸ்திரீவசியம், கர்ப்பமாகும் வழி, ஆண் மகவு மார்க்கம், பிரமசாரி பெருமை முதலியவைகளைப்பற்றி அறிகிறோம். 14-வது காண்டத்தில் விவாக விஷயம், 15-விராத்யன், சரிதை துறவியின் நோக்கம் 16. 17—சத்துருவைக் கொன்று இந்திரனை நாடும் வழி, 18-வது காண்டத்தில் அன்தியேஷ்டி அல்லது கடைசிக்காலம் முதலியவைகளைப்பற்றியாகும். 19-வது காண்டத்தில் ஜபமுழக்கம், நம்மால் எலக்ஷனை அரசனுக்கு ஆசீர்வாதம், காம சூக்தம், காலசூக்தம் முதலியவைகள் உண்டு. 20-வது காண்டத்தில் பற்பல விஷயங்களைப்பற்றியுண்டு. குந்தப சூக்தங்கள் என சில சூக்தங்கள் கடைசியிலுண்டு. இந்திரன் முதலியவைகளைப் பற்றியே அவை சொல்லும்.

7. இவ்வேதத்திலுள்ள சிலமொழிகள்-காலன் இரகசியம்—காலத்தினின்றே சலம், பிரமம், தவம், திசைகளுமாகும். சூரியன் உதயம் அஸ்தம் காலத்தினுலாகும். காற்று வீசுவதும் அவனுலே. அவனுலே நிலம் விரிந்துள்ளது. பெரிய வானமும் காலத்தையே கட்டியுள்ளான். ருக்கு யஜுர் காலத்தினின்றே தோன்றிற்று. அனைத்தையும் ஜயித்து அவனே பெரிய தேவனாக முன் அணி செல்லுகிறான். அதர்வ. 19. 5. 4. 1. காலனை குதிரை ஏழு ரசமிகளுடன் ஆயிரம் கண்களோடு அழியாதவனும் அதிவீர்யத்தை நம்மை முன் எடுத்துச் செல்லுகிறான். ருஷிகள் அவனில் ஏறுகிறார்கள். எல்லா உலகங்களும் அவன் சக்கிரங்கள். ஏழு சக்கிரங்களில் செல்லுகிறான். அவனுக்கு ஏழு நாபிகள். அமிருதமே இருசு போலாகும். அவனே இப்பொழுது எல்லா உலகங்களாகும். முதல் தேவனும் அவனே முன் அணி செல்லுகிறான். காலத்திலே பூர்ண கும்பமுண்டு. பல வடிவங்களுடன் அவனைப் பார்க்கிறோம். எதிர்காலத்தில் அவனே இந்த எல்லா உலகங்களாவான். அவனையே பரமசுவர்க்கம் என்ச் சொல்வார்கள். அவனே உலகத்தை உதயமாக்கி அதைச்சுற்றிலுமானான். அவைகளின் பிதாவாகி புத்திரனுமானான். அவனுக்குப் பெரியவனில்லை. வானத்தையும் வையகத்தையுஞ் செய்தவன். காலத்தின் விருப்பமே சென்றதும் இனிவரப்போவதும். காலத்தால் பூமியாயிற்று; சூரியன் எரிவான். அதனுல் எல்லாப்பொருளும் நிலைக்கும். அவனுல் கண் காணும். மனம், மூச்சு, பெயர், எல்லாம் காலத்தை அணைந்துள்ளன. எல்லா சீவர்களும் காலன் வந்தால் சந்தோஷமாகும். காலத்திலே தவம், ஜ்யேஷ்டம், பிரமம் சேர்ந்துள்ளன. காலனே எல்லாப் பொருள்களின் சர்வேசுவரன். பிரஜாபதியின் பிதாவாகும். காலனே உலகத்தை தோற்றுவித்து காப்பாற்று

கிருன்—சுவயம்புவான காசியபன் காலத்தினின்றே தோன்றினன்.

அதர்வ. 19. 5. 3.

8. இவ்வேதத்திலுள்ள விராத்யன் கதை. (அதர்வம். 15-வது காண்டம்) விராத்யன் என்னும் வட மொழிக்குத் தீண்டாதவன் எனச் சொல்லலாம். எங்கும் சுற்றும் விராத்யன் ஒருவனிருந்தான். பிரஜாபதியை செயலுக்காக எழுச்சியாக்கினன். உடனே அவன் தன்னிலுள்ள தங்கத்தைக்கண்டான். சனனஞ் செய்தான். அது ஒப்பில்லாப் பொருளாகி உயர்ந்து மகத்தாயிற்று. பெரியதாயிற்று. பிரமமாயிற்று, தவமாயிற்று, சத்தியமாயிற்று. அது வழியாய் அவன் பிறந்தான். அவன் வளர்ந்தான், பெரியவனுனன். மகாதேவனுனன். அவன் தேவர்களுக்கு ஈசனுகித் தலைவனுனன். அவன் பெரிய விராத்யனுனன். கையில் இந்திரன் வில்லைத்தரித்தான். அவன் உதரம் நீலநிறம். அவன் முதுகு சிகப்பு. பல நிறத்தால் பிரியமற்றவனை சூழ்ந்து தன்னை வெறுப்பவனை சிகப்பால் சிதைப்பான். இப்படித்தான் பிரமவாதிகள் சொல்லுகிறுர்கள்.

அதர்வம். 19. 5. 1.

9. இனி அதர்வத்தின் சில அமுத மொழிகளைப் பருகுவோம்:—

(1) வேத பிராமணன்.—நைதாம்தே தேவா அத்துஸ்துப்யம் நிருபதே அக்தவேமா பிராமணஸ்ய ராஜன்யகாம் ஜிகத்ஸோ அனுத்யாம். அரசனே! தேவர்களின் இந்தப் பசுவை (பூமியை) நீ புசிப்பதற்காக அளிக்கவில்லை. ஒருவரும் புசிக்கக்கூடாத பிராமணன் எனப்படும் புத்தி அறிபவர் பூமியை நாடாதே. (2) பிராமணனின் பூமியை புசித்து உருசியிருப்பதாக எண்ணுபவன் தின்னபோதிலும் சீரணத்தை அடையான். ஏனெனில் அதில் நூற்றுக்கணக்கான பற்களுண்டு. பிராமணன் யார்? அவன் நாக்கு வில் கயிறு, வாக்கு அம்பின் கழுத்து, பற்கள் அனல் மயமான கூறிய அம்புகள். அவன்

தேவ ஆயுதங்களால் இருதயத்தை அமைதியாக்கி அம்புகளால் துவேஷிகளைத் தொலைப்பான். (3) பிராமணர்கள் வில்லில் சரம் நாட்டி ஆயுதமணிந்து கூறிய அம்புகளால் தாக்கினால் ஒருபொழுதும் தவறுவதில்லை. கொடுங்கோபத்தோடு ஆத்திரமுடன் வெகு தூரத்திலிருந்தே சத்துருக்களைத் துளைப்பார்கள். (4) ஆயிரக்கணக்கான அரசர்களை அவர்கள் அழித்துள்ளார்கள். பிராமணனின் பசுவை (பூமியை) புசித்ததால் வைதஹவ்யர்கள் அழிக்கப்பட்டார்கள். (5) பிராமணன் (பகுத்தறிவுள்ளவன்) வம்சங்களுக்கு அநியாயஞ் செய்த ஆயிரக்கணக்கானவர்களை இப்பூமி உதறித் தள்ளிவிட்டது. அவர்கள் நிர்மூலமாய் அழிந்து விட்டார்கள். ஏனெனில் அவர்களின் பசுவான பூமி அபகரிக்கப்பட்டாள்.

इषुरिव दिग्धा नृपते पृदाकूरिव गोपते ।
स ब्रह्मणस्येषु घोरा तथा विध्यति पीयतः ॥

(6) அரசனே! நஞ்சுள்ள அம்பைப் போலும் விஷப்பாம்பைப் போலுமான, கோபதியே! பிராமணின் அம்பு கோரமுள்ளதாகும். அவைகளால் அவன் சத்துருக்களைத் துளைக்கிறான்.

उग्रो राजा मन्यमानो ब्राह्मणं यो जिघत्सति ।
परा तत सिच्यते राष्ट्रं ब्राह्मणो यत्र जीयते ॥

(7) எனக்கு பலமுண்டு என நினைத்து எந்த அரசன் பிராமணனை புசிக்கிறானோ அந்த பிராமணனை ஜயிக்கப்பட்ட அந்த இராஜ்யம் துண்டு துண்டாக்கப்படும். (5. 18. 19.)

**10. அநியாயம் வளராமலிருக்க ஆயுதத்தை சரணாகதி அடையவேண்டுமென்பது வேத ஆக்ஞை. சத்துருவைக் கொல்லும் வச்ராயுதத்தை தெய்வம் போலவே போற்றி அதை எப்படி பயன்செய்தார்கள் என்பதை ஆறாவது காண்டம் 104-வது சூக்தமான அடியிற்கண்ட மொழிகள் உண்மைகளை விளக்கும்.**

(1) சத்திய நிறைவினின்று திருப்தியாகி இந்த வச்ராயுதமானது சக்திப் பிரபு, விருத்திரனின் கழுத்தை துண்டித்ததுபோல் சீவனைச் சீரழித்து ராஜ்யத்தை நிர்மூலமாக்கி கண்டங்களைத் துண்டித்து பிடரிகளைப் பிளக்கவேண்டும். (2) ஜயபுருஷர்களின் பாதங்களில் விழுந்து பூமியில் மறைந்து பகைவன் எழுந்திருக்காமல் வச்சிராயுதத்தால் அடிபட்டு கீழே கிடக்கவேண்டும். (3) குரூர

கொடுங்கோலனைத்தேடி கொடுமையுள்ளவனையே கொல்லவும். வச்ரா யுதமே! உன் பூர்ண நீளத்துடன் குரூர கொடுங்கோலன் தலையிலே அடிக்கவும். (6. 10. 14.)

**11. சத்துரு அடித்தால் அவனை வணங்கவும் என்னும் விபரீத சித்தாந்தம் வேதத்தில் இல்லை, சத்துரு சம்ஹாரம் பரிபூர்ணமாயிருக்கவேண்டுமென ஆறுவது காண்டம் 135-வது சூக்தத்தினின்று அறிகிறோம். அவர்களை அக்னி முதலிய அஸ்திரங்களால் அழிக்க வேண்டுமெனவும் அறிகிறோம்.**

(1) நான் புசிப்பதையெல்லாம் பலம் என்னும் வன்மையாய் மாற்றுகிறேன். இப்படிச் செய்து நான் வச்சிராயுதத்தைப்பற்றி இந்திரன் விருத்திரன் கழுத்தைத் துண்டித்ததுபோல் அந்த மனிதன் தோள்களைத் துண்டம் துண்டமாகச் செய்வேன். (2) கடலனைத்தையும் குடிப்பதுபோல் பருகுவதையெல்லாம் பூர்ணமாய்ப் பருகுவேன். அவன் உயிரைக்குடித்து அவனைப் பூர்ணமாய் பருகி விழுங்குவேன். (3) அக்னேயக்தே தபஸ்தேன தம் பிரதி தபயோ உஸ்மான் துவேஷ்டி யம்வயம் த்விஷ்ம:, அக்னேயக்தே ஹரஸ் தேன........., அக்னேயக்தே அர்சிஸ்தேன..............அக்னேயக்தே சோகிஸ்தேன........., அக்னேயக்தே தேஜஸ்தேன.........(2, 19.) என்னை வெருப்பவனையும் நான் வெறுப்பவனையும் அனலே உன் சூட்டால் எரித்துவிடவும். உன் சுடரால், சோதியால் சுவாலையால் திவ்ய தேஜஸால் நான் வெறுப்பவனையும் என்னை வெறுப்பவனையும் நிர்மூலமாக்கவும்.

**12. பயமில்லை, பயமில்லைஎனவே பல மொழிகளில் காண்போம். பகவானுக்கும் பயப்படாதே எனச் சொல்லும் சில சொற்களை பார்ப்போம்.**

**यथा द्यौस्च पृथिवी च न विभीतो न रिष्यतः एवा मे प्राण मा विभेः। यथाहस्य रात्री च ........। यथासूर्यस्य चन्द्रस्य ............। यथाब्रह्म च क्षत्रं च ........। यथा सत्यं चानृतं च ............। यथा भूतं च भव्यं च........।**

(1) வானமும்பூமியும் பயப்படுவதில்லை; அதனால் அவைகளுக்கு ஒருபொழுதும் சேதமும் சேரழிவுமில்லை ; அப்படியே என் பிராணன்

உனக்கு பயமன்னியி லாகட்டும். (3) பகலும் இரவும், சூரியனும் சந்திரனும் பிராமணனும் க்ஷத்திரியனும், சத்தியமும் அசத்தியமும், இருந்ததும் இருக்கப்போவதும் பயப்படுவதில்லை; அதனால் ஒரு பொழுதும் அவை நஷ்டம் கஷ்டத்தை அனுபவிப்பதில்லை. அப்படியே என் பிராணன் உனக்கு பயமன்னியிலாகட்டும். (2. 15.)

## 13. கோபங் கூடாதென சனங்கள் சொல்வதை நாம் கேட்டுள்ளோம். ஆனால் கோபமன்னியில் பெரிய செயல் செய்ய முடியாதென அறிந்து அதைப் பற்றிக் கூறும் அமுதமொழிகளை நோக்குவோம்.

(1) மன்யுவான கோபமே: மருத்தால் சுற்றப்பட்டு எங்கள் வீரர்கள் உற்சாகம் உக்கிரத்துடன் அக்னிரூபத்தோடு கூருன அம்புகளுடன் களிப்புடனாகி ஆயுதங்களை நீட்டிக்கொண்டு முன்னணி பாய்ந்து செல்லட்டும். (2) அக்னிபோலுள்ள ஜயிக்கும் மன்யுவே! சேனையின் தலைவனாய் அழைக்கப்பட்ட எங்கள் சத்துருக்களைக் கொன்று, அவர்களின் பொருள்களை பங்களித்து உன் வன்மையை விளக்கி எங்களை வெறுப்பவர்களைச் சிதறடிக்கவும். (3) மன்யுவே! எங்களைத் தாக்குபவர்களைத் தொலைத்துக்கொன்று. நாசமாக்கவும் உன் உக்ர வன்மைகளை அவர்கள் அடக்கவில்லை. பலமுள்ளவனே! அவர்களை அடக்கிவிடவும். (4) மன்யுவே! பலர்களில் நீ யொருவனே பூஜிக்கப்படுகிறாய். ஒவ்வொரு கூட்டத்தையும் யுத்தத்திற்கு அவர்களின் கடும் உணர்ச்சியையும் கூர்மையாக்கவும். (5) உன் உதவியோடு, புனிதசோதியே! ஜயத்திற்காகச் சிறந்த யுத்த கோஷஞ் செய்கிறோம். (6) அடக்க முடியாமல் இந்திரனைப்போல் ஜயங்கொண்டு வருபவனே! கோபமே! நீயே எங்கள் அதிபதியாகவேண்டும். உன் பிரியமான நாமத்திற்கு நாங்கள் ஸ்துதி செய்கிறோம்: உன் உதய ஊற்று மூலத்தை நாங்கள் அறிவோம். (7) வன்மை வெல்லும் வச்ராயுதத்துடன் இணைந்து பிறந்தவனே! ஜயமளிக்கும் சிறந்த வன்மை உன்னுடையதாகும். அடக்குபவனே! பெரியபதறும் போர்க்களத்திலே எங்களுக்கு நன்மையை யளிக்கவும். (8) வருணனும் மன்யுவும் அங்கு குவிந்த பொருள்களை எங்களுக்களிக்கவும். சத்துருக்கள் சோர்ந்து பயமுடனாகி தோல்வியடையட்டும். 4. 31. (9) அழிக்கும் வச்ராயுதமே! விளங்கும் கோபமே! உன்னை வணங்குபவன் ஜயசக்தியின் ஸ்தானமாவான். உன் சக்தியால் தாசர்களை ஜயிப்போம் (10) கோபமே இந்திரன், கோபமே கடவுள், மன்யுவே ஹோதா, வரு

ணன் ஜாதவேதஸன், மனிதவர்க்கங்கள் எல்லாம் உன்னையே வணங்கும். உன் தவத்தால் எங்களைக் காக்கவும்.

(11) மன்யுவே ! மகத்திலும் மகத்தான நீ இங்கு வரவும். உன் தவத்தால் எங்கள் சத்துருக்களை அழிக்கவும். விருத்திரன். பகைவன் தஸ்யுவை அழிப்பவனே ! பொன் பொருள்களை எங்களுக் களிக்கவும் (12) உன் சக்தியோ அபரிமிதமாகும். குரூரமாய் கொடுமையுடன் பகைவனை அழிக்கும் சுவயம்புவே ! எல்லா மனிதர்களுக்கும் பங்காகி ஜயமுள்ளவனே ! அடக்குபவனே ! சண்டைகளிலே எனக்கு அதிகபலத்தை அளிக்கவும் (13) மன்யுவே! இங்கு வரவும். என் சர்வமும் உன்னுடையது. எல்லாமளிக்கும் ஜயசாலியே ! வச்ராயுதம் சுற்றுபவனே ! உன் நண்பனை நினைத்து தஸ்யுக்களைக் கொல்லவும். (4. 32.)

**14. சண்டைசெய்தால் உற்சாகமளிக்க ஒரு பொருள் வேண்டும். அதுவே துந்துபி என்னும் போர் டமாரம் எனப்படும். போர் டமாரத்தைபற்றி அவர்கள் சொல்லும் மொழிகளிலிருந்து புவியில் அமைதியுடன் வாழ நமது பகைவர்களைக் கொல்லும் எல்லா சாதனங்களையும் அறியவேண்டுமென அறிகிறோம்.**

(1) மரத்தால் செய்யப்பட்டு சர்மத்தால் திடமான ரணபேரிகை (துந்துபி) வீரனைய் விளையாடுங்கால் கோஷஞ்செய்து நுண்ணிய துவனியுடன் சத்துருக்களை ஒழித்து ஜயிக்கும் சிங்கத்தைப் போல் உச்சகர்ச்சனை செய்யட்டும். (2) கடாரியிலே பாயும் காளை போல் ரணபேரிகை சிங்கத்தைப்போல் கர்ச்சனை செய்யட்டும். நீ விருஷபம், உன் பகைவர்கள் பலங்குறைந்தவர்கள், சத்துருவைச் சிரழிக்கும் இந்திரன்சக்தி உனக்கு உண்டு (3) பசுக்கூட்டங்களில் பலத்தில் பெருமையுள்ள விருஷபம் கன்று தேட முழக்கமாகி பொருளை ஒன்று திரட்டுவதுபோல் சத்துருவின் மனத்தை துக்கத்தால் துளைத்து அவர்களின் நிலைகளினின்று ஓடச்செய்யவும். (4) போரில் ஜயமாகி உயர்ந்த கோஷமுடன், எங்கும் நோக்கி அகப்படுவதையெல்லாம் சுருட்டவும் ; உன் தெய்வ வாக்கால் ஜயகோஷஞ் செய்து புரோகிதனைப்போல் பகைவன் பொருள்களை யெல்லாம் கொண்டுவரவும். (5) தூரத்தில் ஒலிக்கும் துந்துபியின் ஒலியைக் கேட்டு பகைவரின் ஸ்திரிகள் எழுச்சியாகி கலங்கி தன்மகனைப்பிடித்து கொடூர ஆயுதங்களின் நடுவே அலறி திரும்பிஓடட்டும். (6) சத்

துருவை ஜயிப்பவனே! ஜயபுருஷனே! பொருள்நாடி அழித்து பெருமையாக்குபவனே! மந்திராலோசனை சபையில் வாதிபேசுவது போல் சண்டையிலே ஜயிக்க பலத்தைப்பற்றியே எங்களிடம் சொல்லவும். (7) அசைக்காததை அசைப்பவனே! சண்டைக்குத் தயாராயுள்ளவனே! சத்துருவை ஜயிக்கும் அடக்கமுடியாத தலைவனே! இந்திரனால் காக்கப்பட்டு எங்கள் சபைகளை உற்றுநோக்கி எங்களை வெறுப்பவன் மனங்களைப் பிளக்கத் துரிதமாய் சொல்லவும். (8) விஹ்ருதயம் வைமனஸ்யம் வதாமித்ரேஷு துந்துபே, வித்வேஷம் கச்மசம் பயமமித்ரேஷு நிதத்மஸ்யவைனன் துந்துபேஜஹி. கலக்கத்தையும் வீரக்குறைவையும் எங்கள் சத்துருக்களுக்குச் சொல்லவும். பயம் பரஸ்பர துவேஷம் வெறுப்பை அவர்களில் உண்டுபண்ணுவோம். துந்துபியே! சத்துருக்களைத் துரத்தவும். (9) ஓநாய் வந்தால் ஆடுகள் அலறி ஓடுவதுபோல் துந்துபியே சத்துரு நெஞ்சு கலங்கவும் பதரவும் நீ முழக்கஞ் செய்யவும். (10) சண்டையில் சிறப்பு அளிக்கும் எல்லா தேவர்களும் மான் சர்மத்துடனான துந்துபியால் சத்துருக்களை பயமுடனாக்கட்டும்.

(11) சூரியனைப்போல் சோதியுடனுள்ள இந்த தேவ சேனைகள் எல்லாம் — இவர்களுக்கெல்லாம் — மங்களம். ஒரு சித்தமுடனாகி எங்களை நம்மை வெறுப்பவனை யெல்லாம் ஜயிக்கவும். 5. 20. 21. (12) சத்துருக்களை ஜயிக்கவும். நாங்கள் ஜயமுடனாகவேண்டும். போர் சின்னமென துந்துபி முழங்கட்டும். எங்கள் மனிதர்கள் குதிரை சிறகு தரித்து ஒருமையாய் பறக்கட்டும். இந்திரனே! எங்கள் ரத வீரர்கள் ஜயமுடனாகட்டும். (6. 126.)

## 15. பலமிருந்து போரில் ஜயமடைவது மாத்திரம் போதாது. பலத்துடன் பேரறிவு வேண்டுமென அதர்வம் அடிக்கடி மொழியும். அறிவைப்பற்றி அவர்கள் சொல்லும் சில அமுத மொழிகளை இங்கு சொல்லுகிறோம்.

(1) பசு குதிரைக் கூட்டங்களோடு மேதை எனப்படும் அறிவே எங்களிடம் முதலில் வரவும். சூரிய ரசிமியோடு கூடிய நீ வணங்கி போற்றத்தகுந்தவன். முதன்மையாய் பிரமமயமாய் அறிஞர்களால் போற்றப்பட்டு ரிஷிகளால் துரிதமாய் பிரமசாரியால் நம்பட்ட உன்னை தேவர்களின் கருணைக்காக அழைக்கிறேன். (2) ரிபுக்களாலும் அசுரர்களாலும் ரிஷிகளாலும் அறியப்பட்ட அறிவு எங்களிடம்

நுழையக் காரணமாவேன். அக்னியே! ஞானம் நிறைந்த மனிதர்கள் அறிந்த, சிருட்டிக்கும் ருஷிகள் அறியும் அறிவை எமக்கு அளிக்கவும். (3) மேதாம் ஸாயம் மேதாம் பிராத: மேதாம் மத்யான் தினம் பரி; மேதாம் சூரியஸ்ய ரசிமிபிர் வசஸாவே சயாமஹே. மாலையில் அறிவு, காலையிலும் பகலிலும் அறிவே வேண்டும். சூரிய ரசிமிகளால் மொழிகளால் எங்களில் அறிவை நாட்டுவோம். (6. 108)

**16. அறிவிருந்து ஆதாயமென்ன? அதனுல் நாம் சுவாதீனத்தை அடைந்து எங்கும் நுழைந்து பூமி, வானம் முதலியவைகளை யெல்லாம் நமது கைகளில் வசஞ் செய்துகொள்ளவேண்டும்.**

(1) மித்ரன் பூமியோடு எழுந்தான்; அந்த புரமான கோட்டைக்கு நான் உங்களை அழைத்துச் செலலுவேன். நீங்கள் அங்கு நுழைந்து சுவாதீனஞ் செய்து கொள்ளவும். அது உங்களுக்கு காப்பையும் ஆதரவையுமளிக்கும். 19. 19. 1. (2) வாயு அந்தரிட்சத்தோடு, சூரியன் சோதியோடு, சந்திரன் நட்சத்திரங்களோடு, சோமன் ஔஷதியோடு, யக்ஞம் தட்சிணையோடு, கடல் நதிகளோடு, பிரமம் பிரமசாரிகளோடு, இந்திரன் வன்மையான வீரத்தோடு, தேவர்கள் அமிருதத்தோடு, பிரஜாபதி பிரஜைகளோடு எழுந்தார்கள். அந்த புரங்களான கோட்டைகளில் எல்லாம் உங்களை அழைத்துச் செல்வேன். நீங்கள் அங்கெல்லாம் நுழைந்து சுவாதீனஞ்செய்து கொள்ளவும். அவை உங்களுக்கு ஆதரவளித்துக் காக்கட்டும். (19. 19. 2—10)

**17. சுவாதீனம் வேண்டுமானுல் ஒற்றுமை வேண்டுமென அதர்வவேதம் அடிக்கடி கூறும். ஒற்றுமையைப்பற்றி அவர்கள் சொல்லும் மொழிகளை நோக்குவோம்.**

(1) ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகவும். ஆதியிலே தேவர்கள் ஒற்றுமையாகி தங்கள் கடமைக்கு காத்திருந்ததுபோல் உங்கள் மனதெல்லாம் ஒரு நோக்கத்துடனுகவேண்டும். (2) சிந்தனையொன்று, பெருஞ்சபையொன்று, சட்டமும் ஒன்றே சித்தத்தில் ஒன்றாய்சாயவும்.(42). நாங்கள் தியாகஞ்செய்து சமான சித்தமுடன் ஒன்றுசேர்வோம். (3) அனைவரும் ஒரு தீர்மானமுடனுகி சமமான இருதயமுட

ணுகவும், (4) எல்லாரும் சந்தோஷமாய் சம்மதிக்க சமமான மனமுடைணுகவும். (6. 64.)

**சுவர்தினம் இன்னம் எல்லா சித்திகளுக்கும் சாதனங்களான சக்தி புத்தியை கைவசஞ்செய்து சாந்தத்துடன் வேத சந்திரிகையினுல் சோதியறிந்து சகல ஐசுவரிய போகங்களை நாம் அனுபவிப்போம்.**

பிரமன், பிரஜாபதி, தாதன், தாணி வேதம், சப்தரிஷி, அக்னி என் செயல்களை மங்களமுடைணுக்கினுர்கள். இந்திரன் என்னும் பலம் என்னைக் காப்பவனுகி, பிரமன் என்னும் அறிவு ஆதாவளித்து பாது காக்கவேண்டும். 19. 9. 12. வானம் நிலம் விரிந்த அந்தரிட்சம் ஓடும் சலம் செடிகொடியும் எங்களுக்குச் சாந்தமுடைணுக வேண்டும். 19. 9. 1.

## பிழைத் திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 23 | vi | iv |
| 9 | 26 | v | v—vi |
| 20 | 22 | சாமவேதத்திற்கு | ஆயிரம் சாகையுள்ள சாம [வேதத்திற்கு |
| 17 | 21 | 3 | 2—3 |
| 33 | 19 | சாங்கியம் | சாக்யம் |
| 34 | 3 | சாகைகளில் | சாக்யங்களில் |
| 34 | 8 & 9 | சாகையிலே | சாக்கியங்களிலே |
| 34 | 14 | (4) | 3—4 |
| 41 | 1 | கப்பல்யாத்திரை | கப்பல் யாத்திரை. |
| 42 | 3 | इन्द्रि | इन्द्रं |
| 59 | 7 | சந்திரனுன | சந்திரனின் |
| ,, | 22 | சாக்ஷாத்காரமாகும். | சாக்ஷாத்காரமாகும், |
| 73 | 35 | சந்தேசாமென | சந்தேசாமன, |
| 94 | 17 | तत | तनू |

# வேத சூசனை

## 1. வேத அடக்கம்

| எண் | வேதங்கள் | பிரிவுகள் | கண்டிகை மந்திரம் |
|---|---|---|---|
| 1. | ருக்வேதம் | *10 மண்டலங்கள் 1017 சூக்தங்கள் | 10467 ருக்குக்கள் |
| 2. | கிருஷ்ண யஜுர் வேதம் | ஏழு காண்டங்கள். 44 பிரசினங்கள் 651 அனுவா கங்கள். | 2198 கண்டிகை |
| 2. | சுக்கில யஜுர்வே தம் | 40 அத்தியாயங்கள். 303 அனுவாகங்கள் | 1976 † கண்டிகை |
| 3. | சாம வேதம் | இரண்டு ஆர்சிகங்கள் 30 அத்தியாயங்கள், 458 தச திகள் | 1549. |
| 4. | அதர்வவேதம் | 20 காண்டங்கள் 34 பிர பாடகங்கள் 111 அனுவா கங்கள் 733 வர்க்கங்கள் | 5847 |

* எட்டு அஷ்டகங்கள் எட்டு அத்தியாயங்கள் 85 அனுவாகங் கள் 2024 வர்க்கங்களாயும் பிரிக்கலாம்.

† 50 மொழிகள் சேர்ந்த பகுதி.

## 2. வேத பிராமணம் முதலியவை

| எண் வேதம் | பிராமணம் | உபநிஷதம் | சூத்திரம் | அரண்யகம் |
|---|---|---|---|---|
| 1. ருக்வேதம் | 1. ஐதரேயம் | 1. சம்ஹிதம்<br>2. ஐதரேயம்<br>3. பவாவிருதம் பிராமணோபநிஷதம் | 1. ஆசுவலாயன கல்ப சிரௌத சூத்திரம் | 1. ஐதரேயாரண்யகம்<br>2. கௌஷீதகம் |
| | 2. கௌஷீதகம் | 4. கௌஷீதகம் | 2. சாங்கியாயனசிரௌதம் | |
| 2. கிருஷ்ணயஜுர் வேதம் | 1. தைத்திரிய பிராமணம் | 1. தைத்திரியம்<br>2. மகாநாராயணம்<br>3. கடம்<br>4. சுவேதாசுவதரம்<br>5. மைத்ராயணம் | 1. ஆபஸ்தம்ப சூத்திரங்கள் | தைத்திரியாரண்யகம் |
| 3. சுக்லயஜுர் வேதம் | 1. சதபதபிராமணம் | 1. பிரஹதாரண்யம் யம் | | 1. பிரஹதாரண்யம் |
| 4. சாமவேதம் | 1. பஞ்சவிம்சம்<br>2. சத்விம்சம்<br>3. சாம விதானம்<br>4. ஆர்ஷேயம்<br>5. தல்வகாரம்<br>6. வம்சம் | 1. சாந்தோக்<br>2. கேனம் | | |
| 5. அதர்வம் | 7. தைவதம்<br>கோபதம் | 1. முண்டுகம்<br>2. பிரசினம்<br>3. மாண்டுக்யம் | | |

## 3. வேத மலர்கள்.

| வேதங்கள் | உபவேதங்கள் | உபநிஷதங்கள் |
|---|---|---|
| 1. ருக்வேதம் | ஆயுர்வேதம் | 21 |
| 2. யஜுர் வேதம் | தனுர்வேதம் | 101 |
| 3. சாமவேதம் | காந்தர்வம் | 1000 |
| 4. அதர்வம் | அர்த்தவேதம் | 50 |

(4) வேதாங்கங்கள்— 1. சிட்சை 2. வியாகரணம். 3. சந்தஸு 4. சோதிடம் 5. நிகண்டு 6. கல்பம்

(5) உபாங்கங்கள் — 1. சாங்கியை 2. யோகம் 3. வைசேஷிகம், 4. நியாயம் 5. பூர்வமீமாம்ஸம் 6. வேதாந்தம்.

(6) பஞ்ச மஹாயக்ஞங்கள்—5, 1 பிரமயக்ஞம் 2. தேவயக்ஞம். (3) பிதுருஞயக்ஞம் (4) பிராணியக்ஞம். (5) அதிதியக்ஞம்.

(7) வேத சம்ஸ் காரங்கள்—16 (1) கர்ப்பதானம் (2) பும்சவனம் (3) சீமந்தம் (4) ஜாதகர்மம். (5) நாமகர்ணம் (6) சூடாகர்மம் (7) நிஷ்கர்மணம் (8) அன்னப்பிராசினம் (9) கர்ண வேதம். (10) உபநயனம் (11) வேதாரம்பம் (12) சமாவர்த்தனம் (13) விவாகம் (14) வானப்பிரஸ்தம் (15) சன்யாசம் (16) அன்தியேஷ்டி

## 8. வேத சாகைகள்.

| ருக்வேதம் | கிருஷ்ண யஜுர் | சுக்லயஜுர் | சாமவேதம் | அதர்வம் |
| --- | --- | --- | --- | --- |
| அ. | ஆ. | இ | ஈ | உ |
| 1. சாகலம்<br>2. பாஷ்கலம்<br>3. ஆசுவலாயனம்<br>4. சாங்காயனம்<br>5. மாண்டுகாயனம்<br>6. ஐதரேயம் | 1. சரகம்<br>2. காடகம்<br>3. கபிஷ்டலம்<br>4. மைத்ராயணி<br>5. தைத்திரியசாகை<br>6. ஹிரண்யகேசி | 1. மாத்யான்தினம்<br>2. காண்வம் | 1. கௌதும சாகை<br>2. ராணாயணிசாகை<br>3. ஜைமினீயம் | 1. பிப்பலாதம்<br>2. தௌதம்<br>3. ஔதம்<br>4. சௌனகீயம்<br>5. ஜாஜலம்<br>6. ஜலதம்<br>7. பிரமவதம்<br>8. தேவதர்சம்<br>9. சாரணவைத்யம் |

(அ) மொத்தம் 21 சாகைகளில் இப்பொழுது ஐந்தே இருப்பதாக அறிகிறோம்.

(ஆ) 101 சாகைகளில் துண்டு துக்கடாவாக நவீனத்திலே ஆறு சாகைகளுக்கு குறைவேயுண்டு.

(இ) 17 சாகைகள் இருந்ததாம். இப்பொழுதோ இரு சாகைகளே இருப்பது.

(ஈ) 1000 சாகைகளிருந்த சாமவேதத்திற்கு நவினத்தில் இம் மூன்று சாகைகளேயே அறிகிறோம்.

(உ) இந்த ஒன்பது சாகைகளில் பிப்பலாதமும் சௌனகமே இப்பொழுது உண்டு.

Kesari Printing Works, Madras.